කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

**Ministry of Women and Child Affairs**

UNDP 50 YEARS

# இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பந்தமான தேசிய செயற்றிட்ட மற்றும் கொள்கைச் சட்டக வரைபு

## 2016 - 2020

பொருளாதார அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்பு

கல்வி

வலுவூட்டல் மற்றும் தடுத்தல்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

சுகாதாரம்

சட்டம், நீதி மற்றும் சீர்திருத்தம்

ஊடகம்

இலங்கையில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறை தொடர்பான தேசிய கொள்கைச் சட்ட மற்றும் செயற்றிட்ட வரைபு 2016-2020

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சட்டத்தை தத்துவமுள்ளதாக்கல், நியாயத்துக்கான அணுகுமுறை மற்றும் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் **(SELAJSI)** மூலம் உதவியளிக்கப்பட்டது

කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு
Ministry of Women and Child Affairs

# இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பந்தமான தேசிய செயற்றிட்ட மற்றும் கொள்கைச் சட்டக வரைபு

## 2016 - 2020

சிறுவர் விவகாரம்
அனர்த்த முகாமைத்துவம்
பொருளாதார அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்பு
கல்வி
வலுவூட்டல் மற்றும் தடுத்தல்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
சுகாதாரம்
சட்டம், நீதி மற்றும் சீர்திருத்தம்
ஊடகம்

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் தேசிய செயற்றிட்டமானது 2016 மே 23 ஆம் திகதி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் கௌரவ திருமதி சந்திராணி பண்டார அவர்களினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. (அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 16/0964/740/006). பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டம் 2016 யூன் மாதம் 7 ஆம் திகதி எந்தவொரு விசேட நிபந்தனையும் இன்றி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு அமைய 2017-2019 நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் மேற்படி பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சரவையினால் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அவர்களின் விடயப்பரப்பின் கீழ் கொள்ளப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏனைய சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இது பற்றி அறிவிக்குமாறும் அமைச்சவையினால் செயலாளருக்கு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டம் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டுள்ள அமைச்சுக்களின் காத்திரமான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

நிதி அமைச்சு:

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய கொள்கைச் சட்டகம் மற்றும் தேசிய செயற்றிட்டத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ள நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க அவர்கள் இதனை 2017-2019 நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சிபாரிசு செய்துள்ளார்.

நீதி அமைச்சு :

நீதி அமைச்சர் கௌரவ திரு விஜேதாச ராஜபக்ஷ அவர்கள் எந்தவொரு எதிர்ப்பும் இன்றி திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு :

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் தொடர்பாக இணக்கம் தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ திரு அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள், துறைசார் பங்களிப்புடன் தயார் செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் உள்ளடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது காலத்திற்குப் பொருத்தமானதென்பதை ஏற்றுக் கொண்டுள்ள அவர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள உபாயமுறைகள், பிரதான செயற்பாடுகள், சுட்டிகள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்கள் விரிவானதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு :

தமக்கு இந்தத் திட்டம் தொடர்பில் எதிர்ப்புக்கள் இல்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ திருமதி தளதா அத்துகோரள அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நன்றி

நாளாந்தம் இலங்கையில் அறிக்கையிடப்படுகின்ற பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களின் தன்மை மற்றும் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் கடந்த ஆண்டு இந்த முக்கியமான காலத்திற்கு தேவையான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் பெண்கள், சிறுமியர் / பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது. மேலும் சீடோவ் (CEDAW) சமவாயத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் மற்றும் பீஜிங் பிரகடனம், செயற்பாட்டுக்கான மேடை போன்ற பலதரப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் மூலம் சகல ஆட்களினதும் மனித உரிமைகள் மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதற்கு இலங்கை கடப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற பலதரப்பட்ட துறைகளில் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தை அடைந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள இலங்கை, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கும் அது சம்பந்தமான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் முன்னோடித் தேவையொன்றாக கருதுகின்ற "பால்நிலைசார் சமூக அடிப்படையிலான சமஅந்தஸ்தை அடைந்து கொள்ளல் மற்றும் சகல பெண்களையும் சிறுமியர்களையும் வலுவூட்டல்" ஆகிய நிலையான அபிவிருத்தி இலக்கு இலக்கம் 5ஐ அடைந்து கொள்வதற்கான மற்றொரு நடவடிக்கையை முன்னெடுக்க ஆயத்தமாகி வருகின்றது.

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்கான இந்த தேசிய கொள்கைச் சட்ட மற்றும் தேசிய செயற்றிட்டத்தை தயார்செய்யும் ஆரம்ப வேலைத்திட்டம் முன்னாள் செயலாளர்கள் இருவரான திரு. எரிக் இளையப்ப ஆரச்சி மற்றும் திருமதி சுதர்ம கருனாரத்ன ஆகியோரின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் இவர்கள் இதற்கு வழங்கிய வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்திற்காக அவ்விருவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு அமைச்சு, சுகாதார அமைச்சு, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு, நீதி அமைச்சு, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு, திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகிய சகல துறைசார் அமைச்சுக்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் திவிநெகும திணைக்களம் ஆகிய நிறுவனங்களினதும் செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய ஒத்துழைப்பு, வழிகாட்டல்களுக்காக எமது அமைச்சின் நன்றியை இங்கு தெரிவித்துக்கொள்கின்றேன். ஒவ்வொரு துறை தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களின் முன்னோடிகள் மற்றும் அங்கத்தவர்கள் வெளிப்படுத்திய கடும் அர்ப்பணிப்பு மற்றும் பாலியல், பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்கு மிக உச்சளவிலான துறைசார் திட்டங்களை தயார்செய்துகொள்ள எமக்கு வழிவகுத்து நீண்ட மணிநேரங்கள் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு அவர்கள் ஆயத்தமாகி இருந்தமைக்காக நாம் எமது குழுவின் முன்னோடிகள் மற்றும் அங்கத்தவர்களுக்கு எப்போதும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். தொழில்நுட்பக் குழுக்கள் மற்றும் 2015 டிசெம்பர் மாதம் நடைபெற்ற தேசிய ஆலோசனைக் கலந்துரையாடலில் பங்கேற்று இந்த செயல்முறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய சகல அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் வழங்கிய கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளையும் நாம் வெகுவாக மதிக்கின்றோம்.

இந்த திட்டத்தை முறையாக தயார்செய்வதற்கு ஆக்கபூர்வமாக பங்களிப்பு வழங்கிய எனது பதவியணி அங்கத்தவர்கள் குறிப்பாக எமது குழுவுடன் நெருக்கமாக செயற்பட்டு இந்த செயன்முறைக்கான வழிகாட்டல்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கிய மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) திருமதி அசோக அலவத்த, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி ஒத்துழைத்த திருமதி சுவர்ணா சுமனசேகர ஆகியோர் வழங்கிய பெறுமதிமிக்க ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புக்கும் திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஜே.பி.எஸ். ஜயசிங்ஹவுக்கும் மகளிர் பணியகத்தின் திருமதி ஆர்.ஏ. சூலாநந்தவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனைய அமைச்சுக்களுடன் தொடர்புகொண்டு நடாத்தப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களில் பங்கேற்ற மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் அலுவலர்கள் அனைவருக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களையும் ஒன்றிணைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றிய அபிவிருத்தி உதவியாளர் திருமதி சுனிமாலி குணதிலக்க அவர்களுக்கும் எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

சகல துறைசார் திட்டங்கள் மற்றும் பின்னணி அறிக்கைகளை தயார்செய்து அவை பற்றிய இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் செயன்முறையில் தமக்குரித்தான நிபுணத்துவ தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுத்து அதற்குத் தேவையான வசதிகளை செய்து தந்த எமது தொழில்நுட்ப ஆலோசகர்களான கலாநிதி லஷ்மன் சேனாநாயக்க திருமதி சிரியானி பெரேரா ஆகியோர் வெளிப்படுத்திய கடும் அர்ப்பணிப்புக்காக அவ்விருவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த முன்னெடுப்பு முழுவதிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் எமக்கு வழங்கப்பட்ட உதவியை நாம் வெகுவாக பாராட்டுவதுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சட்டத்தை தத்துவமுள்ளதாக்கல், நியாயத்தை நோக்கிய அணுகுமுறை மற்றும் சமூக ஒருமைப்பாட்டை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் பால்நிலைசார் அடிப்படையிலான மற்றும் பெண்களை வலுவூட்டுவது சம்பந்தமான தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளராக எமது அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டு வருகைதந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கிய இந்த செயன்முறையை வெற்றிகரமாக நிறைவு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் அர்ப்பணிப்பை வழங்கிய திருமதி பிமாலி அமரசேகரவுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்கான ஆக்கபூர்வமான திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தேசிய மட்டத்திலான முயற்சி, பொதுவான மற்றும் தனியார் மட்டங்களில் பெண்கள், ஆண்கள், சிறுமியர் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு எதிராக இடம்பெறுகின்ற சகல வகையிலுமான பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினைக் குறைத்து சகலரினதும் மனித கௌரவம் மற்றும் சமமான உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற வன்முறையற்ற பாதுகாப்பான இடவசதிகளை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கும் என நாம் வெகுவாக எதிர்பார்க்கின்றோம்.

சந்திராணி சேனாரத்ன
செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு
2016 ஜுன்

## உள்ளடக்கம்


நன்றி 1

**இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய கொள்கைச் சட்டகம் மற்றும் செயற்றிட்டம்** 5

**துறை: சிறுவர் அலுவல்கள்** 17

பின்னணி: சிறுவர் அலுவல்கள் துறை 18

துறை சார் திட்டம்: சிறுவர் அலுவல்கள் 24

**துறை: அனர்த்த முகாமைத்துவம்** 46

பின்னணி: அனர்த்த முகாமைத்துவத்துறை 47

துறைசார் திட்டம்: அனர்த்த முகாமைத்துவம் 51

**துறை: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்பு** 64

பின்னணி: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்புப் பிரிவு 65

துறைசார் திட்டம்: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்பு 72

**துறை: கல்வி** 89

பின்னணி – கல்வித்துறை 90

துறைசார் திட்டம்: கல்வி (சாதாரண கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி) 95

**துறை: வலுவூட்டல் மற்றும் தடுத்தல்** **117**
பின்னணி: வலுவூட்டல் மற்றும் தடுத்தல் பிரிவு 118
துறைசார் திட்டம்: வலுவூட்டல் மற்றும் தடுத்தல் 126

**துறை: வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை** **146**
பின்னணி: வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை 147
துறைசார் திட்டம்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு 155

**துறை: சுகாதாரம்** **169**
பின்னணி: சுகாதாரத் துறை 170
துறைசார் திட்டம்: சுகாதாரம் 177

**துறை: நீதி** **191**
பின்னணி: நீதித்துறை 192
துறைசார் திட்டம்: நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு 199

**துறை: ஊடகம்** **212**
பின்னணி: ஊடகத்துறை 213
துறைசார் திட்டம்: ஊடகம் 216

**பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினை ஒழிப்பதற்கான செயற்றிட்டம் 2016-2020 தொடர்பிலான துறைசார் ஒருங்கிணைப்பு, அதனை அமுல்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளும் முறை** **225**

**துறைசார் தொழில்நுட்பக் குழுக்களின் தவிசாளர்கள் / தொழில்நுட்ப முன்னோடிகள்** **227**

# அறிமுகம்: இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் தேசிய செயல் திட்டம்

**பின்னணி**

இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்துகொள்ளும் இந்த முக்கியமான, காலத்துக்குப் பொருத்தமான முயற்சியின் உபாயமுறையிலான தலைமைத்துவத்தை பொறுப்பேற்றுக் கொள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தக் கொள்கையைத் தயார் செய்யும் முயற்சிக்கும், தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்வதற்கும் காரணமாக அமைந்திருப்பது, "பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு வன்முறையற்ற வாழ்க்கை" எனும் நோக்கும் அதற்கு அடிப்படையாக அமைகின்ற "இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எவ்வகையிலும் பொறுத்துக்கொள்ளாமை" ஆகிய கோட்பாடுகளின் மூலமாகும். தேசிய கொள்கைக் கட்டமைப்பைத் தயார் செய்தல் மற்றும் செயற்றிட்டத்தைத் தயார் செய்வதற்கு வழிவகுத்த ஒட்டுமொத்த செயற்பாடும் "உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட" முன்னெடுப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையானது மனித உரிமை மீறலொன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கொள்கைசார் கட்டமைப்பு மற்றும் செயற்றிட்டத்தைத் தயார் செய்கின்ற செயன்முறையானது பங்கேற்பு அடிப்படையில் பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்று மேற்கொள்ளப்பட்டதுடன், பிரதானமாக ஒன்பது அமைச்சுக்கள் இந்த ஒட்டுமொத்த செயன்முறையில் அத்தியாவசிய அம்சங்களாகக் காணப்பட்டன. சிவில் சமூக அமைப்புக்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், தொழில் சங்கங்கள், தனியார் துறை, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்களின் பூரண பங்களிப்பானது இந்த செயன்முறையை மென்மேலும் போசிக்கக் காரணமாக அமைந்தது.

**தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைக் கட்டமைப்பு**

தேசிய மட்டத்தில் **இலங்கையின் அரசியலமைப்பு** பால்நிலைசார் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பாரபட்சம் காட்டல்களை குறிப்பாக தடைசெய்துள்ளது. சட்டத்தின் முன் சம அந்தஸ்துக்கு மற்றும் சட்டத்தினால் சமமான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பின் ஊடாக பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விபரிக்கின்ற கொள்கைசார் கட்டமைப்பு ஒன்றுக்குத் தேவையான அடிப்படையானது அதன் 12(2) மற்றும் 12(3) ஆம் பிரிவுகளின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தொடர்பாக தற்போது அமுலில் உள்ள தேசிய செயற்றிட்டத்தில் (2014) பெண்களுக்கு எதிரான வன்முறைக்குத் தீர்வு காணும் உபாயமுறைகள் விபரிக்கப்பட்டுள்ளதுடன், 1993 இல் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்கள் சமவாயத்தின் மூலம் சம அந்தஸ்து மற்றும் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பைப் பெறும் உரிமையை உறுதி செய்து பால்நிலைசார் அடிப்படையில் பாரபட்சம் காட்டுவது தடையாகுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. வன்முறையைத் தடுக்கும் போதும், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் நடவடிக்கைமுறையிலும், அர்த்தப்பூர்வமாகவும், பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான கடப்பாடுகள் இந்த பெண்கள் சமவாயத்தின் மூலம் அரசுகள் மீது விதிக்கப்படுகின்றன.

1998 இல் தயார் செய்யப்பட்ட **சனத்தொகை மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரக் கொள்கையிலும்** பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன. **தேசிய சுகாதாரக் கொள்கை, தேசிய இளைஞர் கொள்கை, குடும்பம் பற்றிய தேசியக் கொள்கை, வீட்டு வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய திட்டம் மற்றும் வீட்டு வன்முறைகளைத் தடுக்கும் சட்டம், தேசிய உளவியல் சுகாதார சட்டம், ஆட்கடத்தலுக்கு எதிரான கொள்கை, தேசிய மனித உரிமைகள் திட்டம்** மற்றும் **பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான சட்டத் தொகுப்பொன்றுக்கான வழிகாட்டல்கள்** என்பன பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு காண்பதற்கான உபாயமுறைகளை ஒன்றிணைத்துள்ள தேசிய மட்டத்திலான சில கடப்பாடுகளாகும்.

1995 இல் திருத்தியமைக்கப்பட்ட **தண்டனைச் சட்டக் கோவையில்** பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன. மேற்படி திருத்தங்களின் மூலம் வன்புணர்ச்சி எனும் தவறின் வரைவிலக்கணமானது சர்வதேச அங்கீகாரத்துக்கு அமைவாக மிகவும் பரந்தளவில் "அவளின் விருப்பத்துக்கு மாறாக" எனும் சொற்பிரயோகம் நீக்கப்பட்டு "அவளின் சம்மதத்துக்கு (இணக்கம்) மாறாக" எனும் சொற்பிரயோகத்தை உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 16 வயதுக்குக் குறைவான பெண் பிள்ளைகளை வன்புணரும் தவறுக்கு கட்டாயமாக தண்டனை வழங்குவதும், மிகக் கடுமையான தன்மையைக் கொண்ட வன்புணர்ச்சி தொடர்பாக வழங்கப்படுகின்ற தண்டனைகளை கடுமையான தன்மையைக் கொண்டதாக்குவதற்கு குற்றவியல் சட்டத்துக்கு பரிந்துரை செய்யவும் இதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொள்கைசார் மாற்றங்களை அறிமுகம் செய்ததன் மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு ஆளாகி உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் சர்வதேச கொள்கைச் சட்டங்களுக்கு இலங்கை அரசின் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பாக தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட **2005 இன் 34 ஆம் இலக்க வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டமானது**, பால்நிலைசார் சமூக அந்தஸ்து தொடர்பில் நடுநிலையானதாக உள்ள சட்டமாகும் என்பதுடன், ஒரு நீதவான் அல்லது பொலிசார் ஊடாக தடை உத்தரவைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ள இந்த சட்டமானது பிரதானமாக தடுக்கும் நடவடிக்கையொன்றாகக் கருதப்பட முடியும். இவ்வாறான கொள்கைகள் மற்றும் சட்டங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் இவை முறையாக அமுல்படுத்தப்படுதல் மற்றும் அது பற்றிய முறையான பின்னாய்வை மேற்கொள்வது குறைந்த மட்டத்திலேயே இடம்பெறுகின்றது. குறிப்பிடத்தக்களவு மட்டத்திலான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக மேற்படி பல்வேறு செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்படுவதும் காணப்படுவதில்லை.

அண்மையில் வெளியிடப்பட்ட **பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறையை தடுப்பதற்கான எதிர்கட்சித் தலைவரின் ஆணைக்குழு அறிக்கை** (2014) மூலம் விசேட பல சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பிலும் கலந்துரையாடி பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை சம்பந்தமான தேசிய செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**சர்வதேச மற்றும் பிராந்திய கருவிகள் மற்றும் கொள்கைக் கட்டமைப்புக்கள்**

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கான பல்வேறு சர்வதேச சமவாயங்கள் காணப்படுவதுடன், இலங்கையானது விசேட நிபந்தனைகளை உட்புகுத்தாது அவற்றில் கைச்சாத்திட்டுள்ளது. **1979 இன் பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் முற்றாக ஒழிக்கும் ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் (CEDAW)** குறிப்பிடப்பட்டுள்ளவாறு பால்நிலைசார் அடிப்படையிலான பாரபட்சம் காட்டல்களை தடைசெய்வதன் மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை UN CEDAW

மீளாய்வுக் குழு இனங்கண்டிருப்பது, "ஆண்களுக்குச் சமமான அடிப்படையில் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு பெண்களுக்கு உள்ள உரிமையை கடுமையாக மட்டுப்படுத்துகின்றவாறான பாரபட்சம் காட்டல்" என்றாகும். பாலியல் துஷ்பிரயோகம் உள்ளடங்கலாக சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தும், துன்புறுத்தல்களிலிருந்தும் அல்லது சுரண்டல்களிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மேற்படி சமவாயத்தில் கைச்சாத்திட்டுள்ள அரசாங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று **1989 இன் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின்** மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ளது. "பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது பெண்களின் உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை மீறல்" ஆகுமென்று 1993 இன் **ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கும் பிரகடனத்தின் (DEVAW)** மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
1993 இன் **மனித உரிமைகள் பற்றிய உலக மாநாட்டின்** மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பது தொடர்பான கொள்கையைத் தயார் செய்வதற்கான பின்னணி உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. வீடுகள், சேவை நிலையங்கள், சமுதாயம் மற்றும் சமூகத்தில் பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறை தொடர்பாக தண்டனை விதித்தல் மற்றும் தீர்வு வழங்குவதற்கான சட்டங்களை அதிகாரமுள்ளதாக்கல் அல்லது வலுவூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு **செயற்பாட்டுக்கான பீஜிங் பிரகடனம் மற்றும் மேடை** மூலம் அரசுகளிடம் கோரப்பட்டுள்ளது. 2008 இன் **UN SCR 1820** என்பது மோதல் நிலைமையின் கீழ் மற்றும் அதன் பின்னர் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பது தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட விசேட பிரேரணை நிறைவேற்றமாகும். அரசாங்க அலுவலர்கள் மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகளின் வதைத்தல் பற்றிய சமவாயத்தின் கீழ் மனித உரிமை மீறலாக கருதப்படுகின்றன. அரச அலுவலர்களினால் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் மற்றும் உடல் ரீதியான வன்முறை இந்தச் சமவாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாக அமையும் வாய்ப்பு உள்ளது. மேலும், **இனரீதியான பாரபட்சம் காட்டுவது தொடர்பான சமவாயத்தின்** கீழ் தாபிக்கப்பட்டுள்ள இனங்களின் அடிப்படையில் பாரபட்சம் கட்டுவது பற்றிய குழுவும் இனம் மற்றும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறை நடவடிக்கைகளுக்கும் இடையிலான தொடர்பு சம்பந்தமாக நவடிக்கை மேற்கொண்டுள்ளது. **ICCPR 1966** மற்றும் **ICESCR 1966** ஆகிய சவமாயங்களும் வன்முறை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதுடன், இந்த பிரகடனத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு சபைகளில் உருவாகும் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் மூலம் வன்முறையின் பல்வேறு வடிவங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை பங்கேற்ற முக்கியமான சர்வதேச நிகழ்வுகளில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி ஆழமாகக் கலந்துரையாடப்பட்ட சந்தர்ப்பங்களாக **சிறுவர்களை வர்த்தக ரீதியாக பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துவதற்கு எதிரான உலக காங்கிரஸ் (1996) மற்றும் பெண்கள் 2000 : இருபத்தி ஒராவது நூற்றாண்டுக்கு பால்நிலைசார், சமஅந்தஸ்து, அபிவிருத்தி மற்றும் சமாதானம் (பிஜிங் +5) மாநாடு** ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்யுமாறு பல சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திடம் கோரிவந்தன. பெண்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுவதை ஒழிக்கும் குழு, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய குழு, சிறுவர் உரிமைகள் குழு, வதைகளுக்கு எதிரான குழு, சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிக்கும் குழு ஆகிய சர்வதேச நிறுவனங்கள் தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்வதற்கும், அவை வினைத்திறனுடன் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒருங்கிணைப்புச் செய்யப்படுவதாகவும், கண்காணிப்புச் செய்யப்படுவதாகவும் உறுதி செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அங்கத்துவ நாடுகளுக்கு சிபாரிசு செய்துள்ளன. பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பாக தேசிய செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்வதற்கு UN Women அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய உபாயமுறை அலலது தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்துகொள்ள உலகம் முழுவதிலும் உள்ள பல நாடுகள் முயற்சித்து வருவதை அவதானிக்க முடியும். அல்ஜீரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பிரசீல், கொலம்பியா, பிஜி, மொரிசஸ், பின்லாந்து, யுகோஸ்லாவியா, பிரான்ஸ், குவாதமாலா, ஜப்பான், ஜோர்தான், நேபாளம், லைபீரியா, செனகல், கிரிபட்டி ஆகியன அவ்வாறு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய உபாயமுறைகள் மற்றும் / அல்லது திட்டங்களைத் தயார் செய்துள்ள நாடுகள் சிலவாகும்.

பிராந்திய மட்டத்தில் நோக்கும் போது ஆபிரிக்க நாடுகளினால் **ஆபிரிக்காவிலுள்ள பெண்களின் உரிமைகளை உள்ளடக்கிய ஆபிரிக்க மனித மற்றும் மனிதர்களின் உரிமைகள் சமவாயம்** நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் ஆபிரிக்க நாடுகளினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட இந்த சமவாயமானது, பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பாக தேசியக் கொள்கையை வகுப்பதற்கான சட்டகத்தை வழங்குகின்றது. 2006 இன் **ஆபிரிக்க இளைஞர் சமவாயமா**னது, வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுமியர்கள் மற்றும் பெண்களுக்கு சட்ட, பௌதீக மற்றும் உளவியல், சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுக்கின்ற செயற்றிட்டங்களைத் தயார் செய்வதற்கு அரசாங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடுகின்றது. 2004 ஆம் ஆண்டில் **தென்கிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பிரகடனத்தில்** கைச்சாத்திட்டன. எனினும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட விசேட பிராந்திய கட்டமைப்போ அல்லது உடன்படிக்கையொன்றோ தெற்காசியப் பிராந்தியத்தில் காணப்படுவதில்லை. தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்யும் போது பயன்படுத்திக் கொள்ளத்தக்க சட்ட ரீதியான மற்றும் கொள்கைசார் கட்டமைப்பாக இலங்கை உள்ளடங்கலாக தெற்காசிய நாடுகளில் கருதப்படுவது உரிய சர்வதேச பிரகடனங்களும், உடன்படிக்கைகளுமாகும்.

**பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு - மூவகை முன்னெடுப்பாகும்**

மனித உரிமைகள் மற்றும் பால்நிலைசார் நியாயத்தன்மை, சம அந்தஸ்தைப் பாதுகாக்கின்றதும், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுத்தல், அவ்வாறான நிலைமைகளில் தலையீடு செய்தல் மற்றும் அதனைத் தடுப்பதற்கு செயற்படுகின்ற மற்றும் அது பற்றி விழிக்கின்ற கொள்கைகளுக்காக செயற்படல் ஆகிய பரந்தளவிலான, மூவகை முயற்சிகளைப் பின்பற்றுகின்ற கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ள தேசிய கொள்கைச் சட்டகத்தின் அடிப்படையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பாக தேசிய செயற்றிட்டம் அமைந்துள்ளது.
கொள்கைக் கட்டமைப்புக்கு அடிப்படையாக அமைகின்ற அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

- பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை என்பது மனித உரிமை மீறலாகும்.

- பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கும், பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான அதிகாரத் தொடர்பிலுள்ள சமமின்மைக்கும் இடையே நேரடியான தொடர்பு காணப்படுகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை என்பது பெண்களை மிகைக்கும் வகையில் தமக்குள்ள அதிகாரத்தை வெளிப்படுத்துகின்ற முறையாக உள்ளதுடன், இதனை பால்நிலைசார் அடிப்படையில் தாக்கத்துக்கு உட்பட்டுள்ள சிக்கலொன்றாகக் கருத வேண்டும்.

- பாரபட்சம் காட்டுகின்றவாறான சமூக மற்றும் கலாசார நியமங்கள் மற்றும் நடத்தைகள் மூலம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான அதிகாரத் தொடர்புகளின் சமமின்மைக்கு வழிவகுக்கின்றது.

- பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையே பால்நிலைசார் சம அந்தஸ்தை மேம்படுத்துவதன் அடிப்படையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதானது தங்கியுள்ளது.

- பலவிதமான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வன்முறையின் பல்வேறு வடிவங்களையும் இனங்கண்டு அவற்றை ஒழித்தல் வேண்டும்.

- பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையின் பரந்தளவிலான வரைவிலக்கணத்தில் ஆண் பிள்ளைகள் மற்றும் ஆண்களும் உள்ளடங்குகின்றனர். பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஊடாக பிரதானமாக இடம்பெறுவது பெண்கள் அழுத்தத்துக்கு ஆளாவதாக உள்ள போதிலும் இது அவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பால்நிலைசார் சமூக அந்தஸ்து பற்றிய கருத்துக்கள் மற்றும் பாரபட்சம் காட்டுவதை சவாலுக்கு உட்படுத்துவதற்கு மற்றும் வன்முறையற்ற நியாயமான ஆளுமையை வளர்ப்பதற்கு ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளை தொடர்புபடுத்திக் கொள்வதானது, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதிலுள்ள முக்கிய அம்சமொன்றாகும்.

- ஒரே வகையல்லாத, பல்வேறுபட்ட தேவைகள் மற்றும் ஊக்கங்களைக் கொண்ட குழுக்களாக பெண்களை அங்கீகரித்தல்.

- வயது, பாலியல் தனித்துவம், வகுப்பு, இனம், கல்வி மற்றும் சமயத்தைப் பொருட்படுத்தாது தனிப்பட்ட அல்லது பொதுவான எந்தவொரு இடத்திலும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்பட முடியும்.

- பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பல்வேறு வடிவங்களைக் கொண்டதாக உள்ளதுடன், அதன் மூலம் பெண்கள் மற்றும் ஆண்களின் உடல், பாலியல், உளவியல், உணர்வுசார், சமூக மற்றும் பொருளாதார நலன்களுக்கு தாக்கம் ஏற்படுத்த முடியும். தேசிய திட்டங்களைத் தயார் செய்யும் போது சர்வதேச நியமங்கள், வரைவிலக்கணங்கள் மற்றும் அளவுகோல்களுக்கு அமையச் செயற்படுதன் மூலம் அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

- பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கு பல்துறைகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறையில் ஒருங்கிணைப்புச் செய்யும் முயற்சியாக இருத்தல் வேண்டும். பெண்கள், ஆண்கள், சிறுமியர், ஆண் பிள்ளைகளுக்கு வன்முறையற்ற வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கின்ற தேசிய நோக்கை தனிப்பட்ட வகையில் அடைந்து கொள்ள முடியாது. மேலும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்காக ஏற்படுத்தப்படுகின்ற தேசிய செயற்றிட்டம் மூலம் ஏற்கெனவே, இது தொடர்பில் காணப்படுகின்ற கொள்கைகள், தேசிய திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளிலும் அவற்றின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் யாவை என்பது பற்றி ஆராயப்படல் வேண்டும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூவகை முன்னெடுப்புகளின் மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையின் ஒவ்வொரு வடிவம் பற்றியும் விழிப்பதை நோக்காகக் கொண்டுள்ளதுடன், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்காக தடுத்தல் (பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான ஆரம்ப தடுத்தல்), தலையீடு செய்தல் (பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்) மற்றும் அதற்காக செயற்படல் (பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், மேலே குறிபபிடப்பட்டுள்ள இரண்டு செயற்பாடுகளுக்கும் உதவும் செயலாகும்.) அவசியமென்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

**தடுத்தல்:** பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதற்கு முன்னர் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அதற்குக் காரணமாகின்ற அடிப்படைக் காரணிகள் பற்றி விழித்தல் மற்றும் ஆட்கள், குடும்பங்கள், சமுதாயம், சமூக மட்டங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு உதவி வழங்குகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற காரணிகளை ஒழித்தல் அல்லது மாற்றுவதானது "தடுத்தல்" ஊடாக இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. (அவர்கள் எதிர்நோக்கியுள்ள சூழல், அவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள், சூழல் போன்றன காரணமாக) வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஆளாகின்ற அபாயத்தை எதிர்நோக்கியுள்ள குழுக்கள் தொடர்பாக தலையீடு செய்வதும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுக்கும் முன்னெடுப்புகளில் உள்ளடங்கும். பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய அறிவை வளர்த்தல், கருத்துசார் மாற்றம், சட்டம் பற்றிய அறிவுறுத்தல், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கான கட்டமைப்புக்களை தாபித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுக்கும் முயற்சிகளில் உள்ளடங்கும். பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தின் இந்த முன்னெடுப்பின் கீழ் கொள்ளப்படுகின்ற உபாயமுறைகள் பல காணப்படுகின்றன. ஒவ்வொரு துறையில் இடம்பெறுகின்ற தடுக்கும் பணிகளில் ஒவ்வொரு மட்டத்திலும் பால்நிலைசார் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி முறையாக அறிவுறுத்துவதும் உள்ளடக்கப்பட்டுள்ளது, இதன் போது பாலியல் தனித்துவம், பூகோள அம்சங்களை பொருட்படுத்தாது சனத்தொகையின் சகல பிரிவுகளையும் அறிவுறுத்துவதும் இதில் உள்ளடங்கும். கருத்துசார் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளும் பிரச்சாரப் பணிகள், சாதகமான பால்நிலைசார் உறவுகளை மேம்படுத்தல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான கருத்துக்களை சவாலுக்கு உட்படுத்துவது ஆகியன தடுத்தலுக்கான உபாயமுறைகளாகப் பிரேரிக்கப்படுகின்றன. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை பகிரங்கமாக நிராகரிப்பதற்கு ஆண்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்காக அவர்களிடம் கிடைக்கின்ற ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் இதில் உள்ளடங்கப்பட்டுள்ளன. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பது தொடர்பாக காணப்படுகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவை வளர்ப்பதும் இந்தத் திட்டத்தின் கட்டாயமான ஒரு அம்சமாகும். வன்முறையை நிராகரிப்பதற்கான தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வது தொடர்பாக அவர்களை அறிவுறுத்தல் மற்றும் வலுவூட்டுவதற்காக இளைஞர் குழுக்கள் மற்றும் இளம் பருவ பெண் பிள்ளைகள் தொடர்பாகவும் இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது. மேலும், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான கலந்துரையாடல் பற்றிய அறிவை வளர்த்தல் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கும், ஆளுமையை மதிப்பதை மேம்படுத்துவதற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களின் பங்களிப்பும் இந்தத் திட்டத்துக்கு முக்கியமானது எனக் கருதப்படுகின்றது. சமுதாயக் குழுக்கள், பெண்களின் சங்கங்கள் மற்றும் சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்ள கவனமாக செயற்படுகின்ற குழுக்களை வலுவூட்டல் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக சமூகத்தை ஒன்றுதிரட்டி வழிநடாத்தும் உபாயமுறைகளாகும். குறிப்பாக இளைஞர் குழுக்கள் உள்ளடங்கலாக பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளுக்கு ருவிற்றர்

உள்ளிட்ட புதிய சமூக ஊடகங்கள் மற்றும் புதிய தொடர்புசாதன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் பிரேரிக்கப்படுகின்றது. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தரப்பினர்களின் ஆற்றலை வளர்ப்பதும் தடுப்பதன் ஒரு பகுதியாக உள்ளது. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய அறிவை மேம்படுத்தல், சட்டத்தை அமுல்படுத்தும் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றின் பதவியணியினரை வலுவூட்டல், ஒழுங்குபடுத்தும் கட்டமைப்புக்களை வலுவூட்டல், உள்ளூராட்சித் திட்டங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதை உள்ளடக்கல் மற்றும் ஒவ்வொரு மட்டத்திலுமான கட்டமைப்புக்களையும் வலுவூட்டல் ஆகிய திறன்விருத்தியும் உள்ளடங்குவதுடன், அவை தடுத்தலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற உபாயமுறையிலான தலையீடுகளாகக் கருதப்படும்.

**தலையீடு செய்தல்:** பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்டு உயிர் பிழைத்துக் கொண்டுள்ளவர்களின் சிக்கல்கள் தொடர்பாக பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வது தலையீடு செய்வதில் உள்ளடங்குகின்றது. அவ்வாறான ஆட்களுக்கு மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு சேவைகளையும், அரவணைப்பையும் பெற்றுக் கொடுப்பதறாகன சேவை நிலையங்கள் மற்றும் தற்காலிக அரவணைப்பு நிலையங்களை ஏற்படுத்தல், தவறாளிகள் அதற்கு வகைப்பொறுப்புக் கூறுவதை உறுதி செய்து கொள்ளல், மற்றும் உயிர் பிழைத்துக் கொண்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய ஆட்களுக்கு உதவி வழங்குவதற்கான உளவியல், சமூக மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும் இதில் உள்ளடங்கும். வினைத்திறன்மிக்க தலையீட்டு உபாயமுறை மூலம் அவ்வாறான வன்முறை நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ள முடியும் என்பதுடன், பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்ற தடுத்தல் முன்னெடுப்புகளுக்கும் இதனூடாக பங்களிப்பு வழங்கப்படும். தலையீடு செய்வதற்காக திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உபாயமுறைகளில் உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்குத் தேவையான சுகாதார சேவைகள், உளவியல், சமூக உதவிகள், அரவணைப்பு நிலையங்களில் பாதுகாப்பு, ஆலோசனைச் சேவைகள், தேவைகளுக்கு அமைய சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளை முறையாகவும், உரிய தரநியமங்களுக்கு அமையவும் பெற்றுக் கொடுப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மனித மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்தி சேவை நிலையங்களை வலுவூட்ட வேண்டும் என்பதுடன், துரித தொலைபேசி சேவை இலக்கங்கள் மற்றும் வழிநடாத்தும் சேவைக் கட்டமைப்புக்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் அவற்றை விளைதிறன்மிக்க நிலைமைக்குக் கொண்டு வருதல் வேண்டும். உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற பொருளாதார நிவாரணங்கள் தொடர்பாக தாபிக்கப்படுகின்ற உபாயமுறைகள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, சுயதொழில் வாய்ப்புக்களுக்கு, திறன்விருத்திக்கு மற்றும் கடன் வசதிகளையும், நிதி வசதிகளையும் பெற்றுக் கொள்வதற்கு தற்போது காணப்படுகின்ற முறைகளுடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**அதற்காக செயற்படல் மற்றும் கொள்கைகளையும், சட்டங்களையும் ஆக்கல்:** பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கான கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகளைத் தயார் செய்தல் மற்றும் நடவடிக்கை முறைகளை ஏற்படுத்துவதும் இதனுடன் சம்பந்தப்படுகின்றன. வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டவரைவு, வன்புணர்ச்சி பற்றிய சட்டங்கள், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் போன்றன அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதிகாரமுள்ளதாக்கப்பட்ட சட்டங்களாகும். சட்டங்களையும், கொள்கைகளையும் விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்துவது இந்த முன்னெடுப்பின் போது மிக முக்கியமானதாகும். பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பான தகவல்கள், தரவு முகாமைத்துவத்துக்கான முறையான கட்டமைப்பொன்று இல்லாமை இனங்காணப்பட்டுள்ளதுடன், தகவல் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை வலுவூட்டுவதற்கான உபாயமுறைகளும் பிரேரிக்கப்படுகின்றன. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் ஏனைய சிக்கல்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுகின்ற சந்தர்ப்பங்கள் பற்றி ஆராய்வதை பலப்படுத்த வேண்டுமென்றும் பிரேரிக்கப்படுகின்றது. குறைபாடுகளைக் கொண்ட இடங்கள் மற்றும் பலப்படுத்த வேண்டிய

துறைகளை இனங்கண்டு நீதிமன்ற அதிகாரத்தை ஒன்றுக்கொன்று ஏற்புடையவாறு பயன்படுத்துவதற்காக தற்போதுள்ள சட்டங்களையும், கொள்கைகளையும் மீளாய்வு செய்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய வரைவிலக்கணங்கள்:**

1. பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை என்பது பெண்களாக இருப்பதன் காரணமாக யாராயினுமொரு பெண் மீது மேற்கொள்ளப்படும் வன்முறை அல்லது பெண்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வன்முறையாகும். உடல், உள அல்லது பாலியல் பாதிப்புக்கள் அல்லது வேதனையை ஏற்படுத்துகின்ற செயல்கள், அவ்வாறான செயல்களை மேற்கொள்வதாக அச்சுறுத்தல், பலாத்காரம் மற்றும் வேறு விதமாக சுதந்திரத்தை இழக்கச் செய்வது உள்ளடக்கும் என பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற சகல வகையிலுமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சமவாயத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.[1]

2. பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பது பற்றிய பிரகடனத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது:

   *"முதலாம் பிரிவு: இந்தப் பிரகடனத்தின் நோக்கங்கள் மற்றும் பணிகளுக்காக "பெண்களுக்கு எதிரான வன்முறை" என்பதன் மூலம் பகிரங்க அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் பெண் ஒருவருக்கு உடல்ரீதியாக, பாலியல் அல்லது உளவியல் பாதிப்புக்கள் அல்லது வேதனையை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துவது உள்ளடங்கலாக அவ்வாறான நிலைமையை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றவாறான பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைச் செயல், பலாத்காரம் அல்லது தான்தோன்றித்தனமான முறையில் சுதந்திரத்தை இழக்கச் செய்தல் ஆகிய எந்தவொரு செயலும் கருதப்படும்."*

*இரண்டாம் பிரிவு: பெண்களுக்கு எதிரான வன்முறை என்பதில் பின்வரும் விடயங்களும் உள்ளடங்குகின்ற போதிலும் இது அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை.*

1. *துன்புறுத்தல், வீட்டில் சிறுமியரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல், வரதட்சனை தொடர்பான வன்முறை, திருமணமான வன்புணர்ச்சி, பெண்களின் பெண் உறுப்பை நீக்குதல் மற்றும் பெண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஏனைய பாரம்பரிய நடைமுறைகள், வாழ்க்கைத் துணை அல்லாத ஆட்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறை மற்றும் சுரண்டல் தொடர்பான வன்முறை உள்ளடங்கலாக குடும்பங்களில் இடம்பெறுகின்ற உடல், பாலியல் மற்றும் உள ரீதியான வன்முறை.*
2. *வன்புணர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் துன்புறுத்தல் மற்றும் சேவை நிலையத்திலும், கல்வி நிறுவகங்களிலும் வேறு இடங்களிலும் இடம்பெறுகின்ற பயமுறுத்தல், பெண்கள் தொடர்பிலான ஆட்கடத்தல் மற்றும் பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் உள்ளடங்களாக சமுதாயத்தில் இடம்பெறுகின்ற பாலியல் மற்றும் உளவியல் வன்முறை.*
3. *ஏதேனுமொரு இடத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது அனுசரணை வழங்கப்படுகின்ற உடல், பாலியல் மற்றும் உளவியல் வன்முறை.*

---

[1] General Recommendation 19 of the Committee set up by the Convention on the Elimination of All Forms of Discrimination Against Women, para 6

3. UNHCR ஆவணத்தில்[2] இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது: *"பாதிக்கப்பட்டவர்கள்/ உயிர் பிழைத்துக் கொண்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பாலியல் வன்முறையினால் ஏற்படுகின்ற நாசகரமான பாதிப்பு மற்றும் அதிலுள்ள குற்றவியல் பண்புகள் பற்றி விழிக்கின்ற பாதுகாப்புத் தலையீடுகளை தாமதிக்காது மேற்கொள்வதற்கான தேவையை வலியுறுத்துவதற்காக UNHCR இனால் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது."*

மனிதாபிமான பின்னணியில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற வரைவிலக்கணமொன்று IASC வழிகாட்டல்களில்[3] இவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. ''பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை என்பது பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமூக ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ள வித்தியாசங்களின் (பால்நிலைசார்) அடிப்படையில் யாராயினும் ஆளொருவரின் விருப்பத்துக்கு முரணாக மேற்கொள்ளும் எந்தவொரு பாதகமான செயலையும் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பதமாகும். பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினால் பிரதானமாக பாதிக்கப்படுவது பெண்களும், சிறுமியருமாகும் என இந்த வழிகாட்டித் தொகுப்பில் வலியுறுத்தப்படுவதுடன், பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான மேற்படி வன்முறைகள் பற்றி விழிப்பதற்கான உபாயமுறைகள் பற்றி அதன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயியும், ஆண்கள் மற்றும் இளைஞர்களும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு, குறிப்பாக பாலியல் வன்முறைக்கு ஆளாக முடியுமென்பதையும் வழிகாட்டல் தொகுப்பு ஏற்றுக் கொள்கின்றது. ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான (DEVAW) பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தை விட பரந்தளவிலான கருத்து இந்த வரைவிலக்கணத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இது, பெண்களுக்கு எதிரான வன்முறையுடன் சமப்படுத்தி பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு வழங்கப்பட்டிருந்த வரைவிலக்கணத்தை ஓரளவுக்கு விஸ்தரிக்கின்றது.

**பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய தேசிய செயற்றிட்டத்தைத் தயார் செய்வதற்கு வழிவகுத்த செயன்முறை**

இந்தத் திட்டத்தைத் தயார் செய்வதற்கான விரிவானதும், ஒருங்கிணைப்புமிக்கதுமான, நிலையான பல்துறைசார் முன்னெடுப்பொன்றைப் பயன்படுத்திக் கொள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது. குறித்த ஒன்பது துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரதான அமைச்சுக்களுடன் முனைப்புடனும், அர்த்தப்பூர்வமாகவும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு செயற்பட்டதுடன், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும், பயன்மிக்கவாறு இப்பணியில் பங்கேற்றதுடன், கருத்துக்களையும் வழங்கியமையானது திட்டமிடலின் உரிமை பற்றிய உணர்வை மென்மேலும் விஸ்தரிக்கக் காரணமாக அமைந்தது. குறித்த துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்து பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்பதற்கான விரிவான திட்டங்களைத் தயார் செய்வதற்கு பங்பளிப்புச் செய்த அமைச்சுக்கள் பின்வருமாறாகும்:

a. சிறுவர் அலுவல்கள் - மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு (முன்னர் சிறுவர் அலுவல்கள் பற்றிய இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்டது.)
b. அனர்த்த முகாமைத்துவம் - அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

---

[2] Action Against Sexual and Gender-based Violence: An Updated Strategy, UNHCR, 2011 http://www.unhcr.org/4e1d5aba9.pdf
[3] Guidelines for Gender-based Violence Interventions in Humanitarian Settings, Focusing on Prevention of and Response to Sexual Violence in Emergencies IASC https://www.interaction.org/sites/default/files/GBVGuidelines2005.pdf

c. பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்பு – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் உதவியுடன் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
d. கல்வி - கல்வி அமைச்சு
e. வலுவூட்டல் மற்றும் தடுத்தல் - மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு
f. வெளிநாட்டு வேலைவாய்ப்பு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு அமைச்சு
g. சுகாதாரம் - சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் குடும்ப சுகாதாரப் பணியகம்
h. நீதித்துறை - நீதி அமைச்சு
i. ஊடகத்துறை - பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சு

பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான விரிவான திட்டமொன்றைத் தயார் செய்வதற்கு இந்த அமைச்சுக்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டதுடன், அதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டன. இதன் போது ஒவ்வொரு அமைச்சினாலும் குறித்த துறைசார் முன்னுரிமைகள், தற்போது பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற சிறந்த நடைமுறைகள், திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்குக் காணப்படுகின்ற பொறிமுறை மற்றும் முறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு அவற்றை அடிப்படையாகக் கொண்டு தாம் பிரேரிக்கின்ற திட்டங்கள் திட்டமிடப்பட்டன. ஒவ்வொரு திட்டத்தினதும் வரவு செலவுத்திட்டம் மற்றும் அதற்குத் தேவையான ஏனைய வளங்கள், ஒவ்வொரு அமைச்சினதும் மதிப்பீடுகள், உத்தேச செலவினம், பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையைத் தடுத்தல், அது தொடர்பில் தலையீடு செய்தல் மற்றும் அதற்காக செயற்படும் பொருட்டு ஒதுக்கீடு செய்வதற்குள்ள ஆற்றல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிரதான அமைச்சு என்ற வகையில் திட்டமானது, யதார்த்தமானதாகவும், நிலையான திட்டமாகவும் இருப்பதை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு இது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

**செயன்முறையின் கட்டங்கள்:**

1. ஆரம்பத்திலேயே, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டமொன்று அவசியமென்று பிரதான துறைசார் அமைச்சுக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, உரிய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் மேற்கொண்ட ஆலோசனைக் கலந்துரையாடலின் ஊடாக மேற்படி அமைச்சுக்களும் இப்பணிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமென்பதை உறுதி செய்துகொண்டது. இதனை அடுத்து, சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் அமைப்பு, சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதித்துவத்துடன் பிரதான அமைச்சுக்களினால் துறைசார் தொழில்நுட்பக் குழு தாபிக்கப்பட்டது.

2. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்காக ஒவ்வொரு துறைக்கும் விசேடமான திட்டங்களைத் தயார் செய்யும் பணி துறைசார் தொழில்நுட்பக் குழுவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டதுடன், மேற்படி தொழில்நுட்பக் குழுவினால் பின்பற்ற வேண்டிய விரிவான நியமங்களைத் (TOR) தயார் செய்வதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது. திட்டங்களைத் தயார் செய்யும் பணிகளை ஆலோசகர்கள் இருவர் இலகுபடுத்தினார்கள். ஆகக் குறைந்தது ஐந்து துறைசார் தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களை ஒன்பது துறைசார் தொழில்நுட்பக் குழுக்களும் நடாத்தியதுடன், தத்தமது திட்டங்களையும் வரைவு செய்தன. மேற்படி ஒவ்வொரு துறைகளின் ஊடாகவும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான சிக்கல்கள் மற்றும் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை ஆராய்வதற்கு அவர்கள் முதலில் நடவடிக்கை மேற்கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, தற்போது காணப்படுகின்ற கொள்கைகள், திட்டங்கள், நடவடிக்கை முறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து தரவுப் பகுப்பாய்வின் ஊடாக அவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் சிறந்த நடைமுறைகளை இனங்காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் துறைசார் குழு அங்கத்தவர்களின் நிபுணத்துவத்தின் அடிப்படையில் ஆரம்ப உபாயமுறைகளையும், செயற்பாடுகளையும் இனங்காண்பதற்கும், மேற்படி துறைகளுக்கான செயலாற்றுகை தகவுதிறன்களை இனங்காண்பதற்கும் முடிந்தது. நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் ஒவ்வொரு துறை தொடர்பிலும் ஏற்புடைய செயற்றிட்ட வரைவுகள் தயார் செய்யப்பட்டன.

3. பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான எதிர்க்கட்சித் தலைவரின் குழு அறிக்கை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய செயற்றிட்டம், பெண்கள் மற்றும் சிறுமியர்கள் பற்றிய தேசிய செயற்றிட்டத்தை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பான தேசிய செயற்றிட்டத்தை ஏனைய திட்டங்களுடன் வரிசைப்படுத்தக்கூடிய முறைகள் பற்றிய பிரேரணைகள் போன்ற கொள்கைகள் மற்றும் தேசிய செயற்றிட்டங்கள் பல ஆலோசகர்கள் இருவரினதும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பல்வேறு குழுக்களின் கோணங்கள், பிரேரணைகள், உபாயமுறையிலான போக்குகள் பற்றிப் புரிந்துகொள்வதற்காக பல்வேறு ஆலோசனைக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

4. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தின் வரைவு தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் மற்றும் அது தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுவதற்கும் அரசாங்கத்தின் உயர் மட்ட அலுவலர்கள், குறித்த துறைசார் நிபுணர்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்கள், சர்வதேச அரசார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பங்கேற்புடனான தேசிய மட்டத்திலான ஆலோசனைக் கலந்துரையாடலொன்று (2015 நவம்பர் 22) நடாத்தப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பலம்வாய்ந்த கலந்தரையாடல்களின் பின்னர் சிபாரிசுகள் ஒன்றுதிரட்டப்பட்டதுடன், தேசிய ஆலோசனைக் கலந்துரையாடலின் போது அவை சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் மேற்படி சிபாரிசுகள் இறுதி ஆவணத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன.

5. மீளாய்வுத் துறைசார் திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக அவை மீண்டும் உரிய பிரதான அமைச்சுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட துறைசார் திட்டங்கள் இதனை அடுத்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சமர்ப்பிப்பதற்காக உத்தேச தனியொரு திட்டமாகத் தயார் செய்யப்பட்டது.

# துறை: சிறுவர் அலுவல்கள்

## பின்னணி: சிறுவர் அலுவல்கள் துறை

2014ஆம் ஆண்டு சிறியதொரு காலத்திற்கு தனியொரு சிறுவர் அலுவல்கள் அமைச்சு ஏற்படுத்தப்பட்ட போதிலும் வரலாறு முழுவதும் சிறுவர்களின் சிக்கல்கள் தொடர்பாக அரசின் பதில்களை வழங்கும் பொருட்டு பொதுவாக பெண்களின் சிக்கல்களுடன் சம்பந்தப்படுத்தி தனியொரு அமைச்சின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது காணப்படுகின்ற மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு 2015 செப்டெம்பர் மாதம் 09ஆந் திகதி 1933ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையின் கீழ் ஏற்படுத்தப்பட்டதாகும் என்பதுடன் சிறுவர் சமவாயத்தை அமுல்படுத்துவதை உறுதிசெய்துகொள்ளல், முன்பள்ளிப்பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், உளவியல் மற்றும் உடல் ரீதியில் ஆரோக்கியமிக்க சிறுவன் ஒருவனை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் செவன சரண பெற்றோர் பாதுகாவலர் திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்தல் போன்ற விடயங்கள் சம்பந்தமாக இந்த அமைச்சு பொறுப்புக்கூறுகின்றது.[4]

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சிறுவர் செயலகம் ஆகிய சிறுவர் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட பிரதான திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்கள் ஆகியன இந்த அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றன.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களமானது நன்னடத்தை பிரிவு மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்றது. நன்னடத்தை பிரிவின் வகிபாகமாக இருப்பது நீதிமன்றத்தினால் தவறாளிகள் என பிரகடனம் செய்யப்பட்டுள்ள வீட்டில் அல்லது மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், தடுத்துவைக்கும் இல்லங்கள், ஆலோசனை சேவை நிலையங்கள் மற்றும் சிறுவர் அரவணைப்பு நிலையங்கள் என்ற வகையில் தாபிக்கப்பட்டுள்ள தொண்டர் சிறுவர் இல்லங்களில் வேறு வகையான தண்டனைக்கு ஆளாக வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதாகும். தொண்டர் சிறுவர் இல்லங்கள் மற்றும் வேறு தொண்டர் அமைப்புக்களினால் தாபிக்கப்பட்டுள்ள இல்லங்கள் தவிர மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்க நிறுவனங்களாகும். சிறுவர் பாதுகாப்பு சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுவது, சிறுவர் உரிமைகளை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் சிறுவர்களுக்கு நட்புறவான சூழலை உருவாக்குவதன் மூலம் சிறுவர்களின் அரவணைப்பை சமுதாயத்தை மையமாகக் கொண்ட சமூகத்தின் பொறுப்பாகும் என்பதை உறுதிசெய்வதாகும்.[5]

| **கவனக்குவிப்புக் குரிய 8வது துறை:** சட்டத்துடன் சம்பந்தப்படு கின்ற சிறுவர்களுக் கான பாதுகாப்பு மற்றும் நியாயம் | 8.1. சிறுவர் தவறாளிகள் மற்றும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்ட சிறுவர்களை பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் தலைமையில் நடாத்தப்படுகின்ற பொறிமுறைகளை வலுவூட்டல் | 8.1-8.3 சிறுவர் நட்புறவு சட்டப் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. | 8.1.1. அச்சுறுத்தலை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் தவறாளிகளுக்கு நியாயம் மற்றும் கௌரவம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி அறிக்கையிடல் தொடர்பில் கொள்கை வழிகாட்டல்களை தயார்செய்வதற்கு பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல் | நடாத்தப்பட்ட ஒத்துழைப்பு சந்திப்புகளின் எண்ணிக்கை<br>தவறு மேற்கொள்வது பற்றி அறிக்கையிடல் தொடர்பான ஊடக வழிகாட்டல்கள்<br>இரகசிய தன்மையை பாதுகாத்து அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை | நீதிச்சேவை ஆணைக் குழுவின் அறிக்கைகள்<br>முன்னேற்ற அறிக்கைகள் | கணினி திமர் சந்தர்ப்ப பதில் நடவடிக்கை குழு<br>இலங்கை சட்ட ஆணைக்குழு<br>பாராளுமன்ற சட்ட மறுசீரமைப்பு ஆணைக்குழு<br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 2016 - 2018 | 0.2 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப் படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8.1.2 சிறுவர் தவறாளிகள் மற்றும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்ட சிறுவர்கள் மீது இடம்பெறுகின்ற பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் பற்றி ஆராய்தல் | முறையற்ற அறிக்கையிடல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br><br>முறையற்ற அறிக்கையிடல் காரணமாக ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | உரிய அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப் பட்ட அறிக்கைகள் | நீதி அமைச்சு மற்றும் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாப்பதற்கான அதிகாரசபை<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 2016-2020 | 0.4 |
| | | | 8.1.3. அச்சுறுத்தலை எதிர்நோக்கி உயிர் பிழைத்துக் கொண்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் தவறாளிகளுக்கு ஊடகங்களுடாக இடம்பெறுகின்ற அநீதியை கண்காணிப்பதற்கு மற்றும் அதுதொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தமது அதிகாரங்கள் பயன்படுத்தப்படல் | விசாரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை<br><br>பொலிசில் ஏற்படுத்தப்பட்ட புதிய பிரிவுகளின் எண்ணிக்கை | கண்காணிப்பு அறிக்கைகள் | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br><br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | 2016-2020 | செலவினம் தாங்கிக் கொள்ளப் படுவதில்லை |
| | | | 8.1.4 பொலிஸ் திணைக்களத்தில் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற குற்றச் செயல்கள் தொடர்பில் செயற்படுவதற்கான விசேட பிரிவை அறிமுகம் செய்வதற்காக செயற்படல் | குற்றச் செயல்களின் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்புக்காக தேசிய சிறுவர் பாதுகாப்டபு அதிகாரசபையில் சிறுவர் பிரபிரிவை ஏற்படுத்தல் | இயங்கி வருகின்ற வீடியோ செய்யும் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் வீடியோ ஒளிப் பதிவுகளின் எண்ணிக்கை<br><br>கூட்ட குறிப்பு அறிக்கைகள் | நீதிச்சேவை ஆணைக்குழு<br><br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு | 2016-2020 | ஒரு பிரிவுக்கு 1.5 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப் படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8.2. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை சம்பவங்களின்போது சிறுவர் நட்புறவு சட்டப் பொறிமுறை காணப்படுவதை உறுதிப்படுத்தல் மற்றும் 2ஆம் நிலை அடிப்படையில் பாதிக்கப்படுபவர்கள் ஆவதை தடுத்தல் | | 8.2.1. குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையில் விசேட சிறுவர் பிரிவொன்றை ஏற்படுத்துவதற்கு செயற்படல் (சிறுவர் நட்புறவு சட்ட செயன்முறை)<br><br>8.2.2. சிறுவர்களுக்கு நீதிமன்றத்தில் பாதுகாப்பை வழங்குவது தொடர்பாக பிரேரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு மற்றும் சிறுவர்கள், இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்து உரியவாறு திருத்தியமைத்தல்<br><br>8.2.3 சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை துரிதப்படுத்துவதற்கும் முடியுமாயின் வழக்குத்தாக்கல் செய்து 3 வருடங்களுக்குள் அதனை நிறைவு செய்வதற்கு உள்ள ஆற்றல்களை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை இனங்காண்பதும் அதனை அமுல்படுத்துவதும் | சிறுவர் நட்புறவுச் சட்ட முறையியல்களின் எண்ணிக்கை<br><br>சட்டவரைவை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளல்<br><br>சட்டத்தை தத்துவமுள்ளதாக்கல்<br><br>அமுல்படுத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை<br><br>மீளாய்வு சட்ட வரைவுகள்<br><br>தயார்செய்யப்பட்ட அல்லது மீளாய்வு செய்யப்பட்ட வழிகாட்டல்கள்<br><br>வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் முறை | வர்த்தமானிகள்<br><br>சுற்றறிக்கைகள்<br><br>கூட்டக் குறிப்புகள்<br><br>புதிய சட்டங்கள் / திருத்தங்கள் | அதிகாரசபை, சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு<br><br>நீதி அமைச்சு,மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,பொலிஸ் திணைக்களம், சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு, சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>நீதி அமைச்சு<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br><br>நீதிச்சேவை ஆணைக்குழு<br><br>இலங்கை சட்ட ஆணைக்குழு<br><br>ஐக்கிய நாடுகள் முகவராண்மை நிறுவனங்கள்<br><br>சிவில் சமூக அமைப்புக்கள்<br><br>நீதி அமைச்சு | 2016-2020<br><br>2016-2017<br><br>2016-2020 | 2.5<br><br>செல வினம் தாங்கிக் கொள்ளப் படுவ தில்லை |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப் படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8.2.4. நிறுவன ரீதியான மற்றும் சமூகமட்டத்திலான சம்பவங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக செயற்படுதல்<br><br>8.2.5 சம்பவங்கள் பற்றி கலந்துரையாடும் நடவடிக்கை முறையை தரப்படுத்தல் மற்றும் அதனை அமுல்படுத்தல்<br><br>8.2.6 அச்சுறுத்தலை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக்கொண்ட சிறுவர்களின் தனித்துவம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையொன்றை ஏற்படுத்தல்<br><br>8.2.7 சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் கீழ் 16-18 வயது தொகுதியில் உள்ள சிறுவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை செய்து கொடுப்பதற்காக செயற்படுதல் | பயிற்சிகளை அமுல்படுத்தும் திட்டம்<br><br>பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை (மையநிலையமாக இருப்பது சம்பவக் கலந்துரையாடலாகும்)<br><br>18 வயதுக்கு குறைவான சிறுவர் சம்பந்தமான சட்டம்<br><br>நடாத்தப்பட்ட செயற்படும் கூட்டங்களின் எண்ணிக்கை<br><br>மாகாண மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சாட்சிகளுக்கான வீடியோ அறிக்கையிடல் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் | வழக்கு அறிக்கைகள்<br><br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>செயலமர்வுகள் / கூட்டங்களின் குறிப்புகள் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br><br>நீதிச்சேவை ஆணைக்குழு<br>இலங்கை சட்ட ஆணைக்குழு<br>சட்டவரைஞர் திணைக்களம்<br>ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள்<br>சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br>பொலிஸ் திணைக்களம்<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், சிவில் சமூக | 2016-2020<br><br>2016-2020<br><br>2016-2020 | <br><br>2.0<br><br>0.1 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப் படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8.2.8. மீண்டும் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக பயிற்றப்பட்ட பதவியணியினரை பயன்படுத்தி வீடியோக்களின் மூலம் சாட்சிகளை அறிக்கையிடல் | இயங்கிவரும் அலகுகளின் எண்ணிக்கை<br>வீடியோ அறிக்கையிடலை பயன்படுத்துவதற்கு பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | அறிக்கைகள் | அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் | 2017-2020 | 5.0 |
| | 8.3. கொள்கைசார் மற்றும் அவர்களுக்காக செயற்படும் பணிகளுக்கு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்டவர்கள் / சிறுவர் தவறாளிகளுக்காக தற்போது காணப்படுகின்ற புனர்வாழ்வளிக்கும் செயன்முறை தொடர்பில் சாட்சிகளை கட்டியெழுப்பல் | | 8.3.1 தற்போது அமுலில் உள்ள புனர்வாழ்வளிக்கும் செயன்முறையின் வினைதிறன் தொடர்பில் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ள விடயங்களை சமர்ப்பிக்குமாறு கோரல் மற்றும் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக செயற்படல்<br>8.3.2 கண்டறியப்பட்ட விடயங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>8.3.3 சிறுவர் தவறாளிகள் / அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக்கொண்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதை மேம்படுத்துவதற்காக செயற்படல் | ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை<br>ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள்<br>ஒன்றினைக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்கள்<br>கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட அவற்றுக்காக செயற்படும் கூட்டங்களின் எண்ணிக்கை<br>காணப்படுகின்ற கலைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள் | கல்வி அமைச்சு<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு<br>சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு<br>ஆராய்ச்சி நிறுவனங்கள்<br>சம்பந்தப்பட்ட கல்விமான்கள் மற்றும் தொழில்சார் பல்கலைக் கழகங்கள்<br>அறிஞர் குழுக்கள்<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | 2017-2020 | 0.5 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப் படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரு.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8.4 இலங்கை கையொப்பமிட்டுள்ள ஐக்கிய நாடுகளின் சமவாயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை ஆயத்தப் படுத்துவதற்கு மற்றும் அறிக்கை இடுவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் அரசாங்கத்தின் அறிக்கையிடல் அலகை வலுவூட்டல் | 8.4 சிறுவர்கள் தொடர்பான சர்வதேச நியதிச்சட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப் படுகின்ற அறிக்கை இடலை தொடர்ச்சியாக மற்றும் உரிய தர நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளல் | 8.3.4 பதவியணியினருக்கு கலைத்துவ மட்டத்திலான சிறுவர் ஆலோசனை சேவை பயிற்சிகளை அறிமுகம் செய்யச் செயற்படல்<br><br>8.4.1 கைச்சாத்திடப்பட்டுள்ள சமவாயங்கள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு பொறுப்புக்கூறக்கூடிய பதவியணியினரின் ஆற்றலை விருத்தி செய்தல் | பயிற்றப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை<br><br>நிலைமை அறிக்கையிடல்களுக்காக பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | கலைத்துவப் பயிற்சிப் பாடவிதானம்<br><br>அவற்றுக்காக செயற்படும் கூட்டங்களின் குறிப்புகள்<br><br>பயிற்சி அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>சர்வதேச குழுக்களுக் கான பதில் நடவடிக்கைகள் | | 2017-2020 | பயிற்சிக்கு 1.0 |

# துறை: அனர்த்த முகாமைத்துவம்

## பின்னணி: அனர்த்த முகாமைத்துவத்துறை

இலங்கையர்கள் என்ற வகையில் நாம் பல்வேறு வகையிலான அனர்த்தங்களை எதிர்நோக்கியுள்ள போதிலும் இந்நாட்டில் அனர்த்த முகாமைத்துவத்தை மேம்படுத்தக்கூடிய முறைகளை இனங்காண்பதற்காக "இயற்கை அனர்த்தங்கள் பற்றிய பாராளுமன்ற தெரிகுழு" நியமனம் செய்யப்பட்டதன் மூலம் இது தொடர்பில் முறையான கொள்கைசார் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஊக்குவிக்கப்பட்டமையானது 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் அழிவை உருவாக்கிய சுனாமி அனர்த்தத்தின் மூலமாகும். மேற்படி குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் 2005இன் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. அனர்த்தங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2005இன் 13ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளை[18] அமுல்படுத்துவதற்கான அரசாங்க நிறுவனம் என்ற வகையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவநிலையத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சின் செயற்பணியாக இருப்பது "இலங்கையில் இயற்கையான மற்றும் மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களை வினைத்திறன்மிக்கவாறு தடுத்தல் மற்றும் அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைப்பதன் மூலம் ஒற்றுமையையும் சுபீட்சத்தையும் "மனித வாழ்க்கையின் கௌரவத்திற்கு வசதிகளைச் செய்துகொடுத்தல்" ஆகும். வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவநிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் ஆகியன அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்களாகும்.[19] மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலான வெளிக்கள அலுவலர்கள் ஊடாக கீழ்மட்டத்தில் தமது செயற்பாடு இடம்பெறுவதை உறுதிசெய்துகொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவத்துக்கு அரசாங்கத்திற்குள்ள கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ள கொள்கைசார் பதில் நடவடிக்கைகள் மிகவும் பலம்மிக்கதாகும். 2005இன் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவசட்டத்தின் மூலம் நிறைவேற்று மட்டமான உச்ச மட்டத்தில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல், அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவநிலையம் உள்ளடங்கலாக அனர்த்த முகாமைத்துவத்துக்கு உரிய நிறுவன சட்டகத்தை முறையாக தாபித்தல் மற்றும் மேற்படி நிறுவனங்களுக்கு உரித்தான விரிவான அதிகாரங்கள், செயற்பணிகளுக்கு தேவையான ஏற்பாடுகளும் அதன் மூலம் செய்யப்பட்டிருக்கின்றன. அனர்த்த முகாமைத்துவவிடயத்தில் உள்ள சகல துறைசார் வெளிப்படைத்தன்மைகள் இந்த சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அனர்த்த நிலைமையை பிரகடனம் செய்வதற்காக இந்த சட்டத்தின் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு அதிராமகளிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை மேன்மை தங்கிய ஜனாதிபதியின் தலைமையில் இயங்குகின்றது. இது பல்வேறு முக்கிய துறைகளில் உள்ள அமைச்சர்கள் மாகாண முதலமைச்சர்கள் ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்ட பலம்மிக்க நிறுவனமாகும்.[20] அரசாங்க நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள்,

18 Sri Lanka Comprehensive Disaster Management Programme (SLCDMP) 2014-2018 Ministry of Disaster Management March 2014

19 Ministry of Disaster Management web site http://www.disastermin.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=2&Itemid=59&lang=en

20 Guidelines for Gender-based Violence in Humanitarian Settings (2005) IASC Interagency standing Committee

பல்கலைக்கழகங்கள், தனியார் துறை, ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகிய சமுதாயத்தைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு சகல பங்கீடுபாட்டாளர்களான நிறுவனங்களின் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்புச் செய்யும் மேடையாக இயங்கிவருகின்றது.

பெண்கள் மற்றும் சிறுமியர் தொடர்பில் காணப்படுகின்ற உயிரியல் மற்றும் உடலியல்சார் காரணங்களுடன் தற்போதுள்ள அதிகார சமமின்மையும் ஒன்றிணையும்போது அவசர சந்தர்ப்பங்கள் மற்றும் அனர்த்த பின்னணிகளில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவது விசேட பிரச்சினை ஒன்றாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறான நிலைமைகளின் கீழ் பெண்களும் சிறுமியர்களும் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதுடன் சுரண்டல் வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர்.[21] சமுதாயத்தினர் முதலில் தாக்கத்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மக்கள் அங்குமிங்கும் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும் முறையான கட்டமைப்புகள் எதுவும் தாபிக்கப்படமுன்னர் பல்வேறு வகையிலான பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற முடியும் என்பதுடன் வேறு வகையில் கூறுவதாயின் மனிதாபிமான அனர்த்த சுற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த நிலை எழும் வாய்ப்புள்ளது.

கடும் அவசர சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் இடம்பெறக்கூடிய வன்முறை பாலியல் வன்முறை வடிவத்தைக் கொண்டதாக இருப்பதுடன்[22] ஒவ்வொரு அனர்த்த நிலைமையிலும் அவற்றுக்கே தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதனால் ஏனைய வடிவங்களிலான பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை நடவடிக்கைகள் ஏற்படும் என்பதை பொருட்படுத்தாதிருப்பது உகந்ததல்ல. 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை அடுத்து உருவான காலத்தில் பெண்கள் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கும் இலக்காகும் அபாயத்தை எதிர்நோக்கியதுடன் படிப்படியாக அதிகரித்துச் சென்ற பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் பலமிக்கதாக்கக்கூடிய ஒரு மேடையை உருவாக்க வேண்டிய தேவை அதன்மூலம் ஏற்பட்டது என ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் வெளியிடுகின்ற ஒரு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[23] 2004 சுனாமி அனர்த்தம் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது சமநிலையற்ற தாக்கம் ஏற்படுத்தப்பட்டது. இலங்கை உள்ளடங்கலாக சுனாமியின் அழுத்தத்திற்கு ஆளான நாடுகளில் உயிரிழந்த ஆண்களுடன் ஒப்பிடுகையில் உயிரிழந்த பெண்களின் எண்ணிக்கை 1.2 மடங்கிலிருந்து 2.1 மடங்க வரை அதிகாகும் என்பது அறிக்கையிடப்பட்டுள்ளது.[24] நீச்சல் தெரியாமை மீன்பிடித் தொழிலுக்கு கடலுக்குச் சென்ற தமது கணவர் திரும்பி வரும்வரை பெண்கள் கரையோரத்தில் எதிர்பார்த்திருத்தல் மற்றும் பெரும்பாலான பெண் பிள்ளைகளை ஒன்றுசேர்த்து அவர்களை மீட்பதற்கு முயற்சித்தல் அவற்றுக்கான காரணமாகும். பெண்களின் இந்த அபாயத்திற்கு ஆளாகக் கூடிய முகாம்களிலும் தொடர்ச்சியாக இந்த நிலை காணப்பட்டுள்ளது. இலங்கையில் சில சுனாமிக்குப் பிந்திய ஆவணங்களில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதிகாரம் மற்றும் நிர்வாகம் கடுமையாக காணப்பட்ட இடங்களாக முகாம்கள் மாறியிருந்தன. அச்சமின்றி தமது கருத்துக்களை வெளியிடும் பட்சத்தில் அதற்கு ஆண்களின் பதில் நடவடிக்கை எவ்வாறு இருக்குமோ என்ற அச்சத்துடன் பெண்கள் காணப்பட்டனர். பெரும்பாலும் இடம்பெற்ற பாலியல் வன்முறைச் செயற்பாடுகள் மற்றும் அச்சமூட்டல் மூலம்

[21] UNFPA weekly Newsletter : UNFPA Assists Tsunami Victims, Warns Women and Girls are Especially Vulnerable, http://www.infectioncontroltoday.com/news/2004/12/unfpa-assists-tsunami-victims-warns-women-and-gir.aspx

[22] The Indian Ocean Tsunami, Oxfam Research Report Lessons from the response and ongoing humanitarian funding challenges (2014) https://www.oxfam.org/sites/www.oxfam.org/files/file_attachments/the_indian_ocean_tsunami_10_years_on_-_lessons_from_the_response_and_ongoing_humanitarian_funding_challenges.pdf

[23] Susan Rees, Eileen Pittaway, Linda Bartilomei. Waves of Violence Women in Post Tsunami Sri Lanka, The Australian Journal of Disaster and Trauma Studies Vol.2005-2, http://www.massey.ac.nz/~trauma/issues/2005-2/rees.htm

[24] Unseen, Unheard: Gender-based Violence in disasters, Global Study Published by International Federation of Red Cross and Red Crescent Societies. http://www.ifrc.org/Global/Documents/Secretariat/201511/1297700_GBV_in_Disasters_EN_LR2.pdf

இந்த பயமான நிலை மென்மேலும் தீவிரமடைந்தது.[25] முகாம்களில் உள்ள குழுக்கள், மருத்துவ குழுக்கள், பொலிஸார் மற்றும் சமயத்தலைவர்கள் மத்தியில் இது தொடர்பாக ஏற்றுக்கொள்ளாத ஒரு கலாசாரம் காணப்பட்டது என்றும் அதில் அறிக்கையிடப்பட்டுள்ளது. வீட்டு வன்முறை சம்பவங்கள் பற்றி குறிப்பிடுகின்ற சந்தர்ப்பத்தில் இது சாதாரண விடயம் அல்லது அவ்வாறு ஏற்பட்டதை முற்றாக நிராகரித்தல் இடம்பெற்றது என்பதும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்களில் அவை வெளியாட்களினால் குறிப்பாக போதை வஸ்துக்கு அடிமையானவர்கள் மற்றும் குற்றவாளிகளினால் மேற்கொள்ளப்பட்டது என குற்றஞ்சாட்டப்பட்டது. சுனாமி அனர்த்தத்தை அடுத்து உருவான காலத்தில் சிறு வயது சிறுவர்கள் பலாத்காரமாக சுனாமியினால் தபுதாரர்களாக ஆக்கப்பட்டவர்களுக்கு திருமணம் செய்துகொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றியும் இலங்கையிலிருந்து அறியக்கிடைக்கின்றது.

2013ஆம் ஆண்டில் தயார்செய்யப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையில் பால்நிலைசார் அடிப்படையிலான சிக்கல்கள் பற்றி குறிப்பாக ஆராயப்பட்டுள்ளது. அதன் நியாயத்தன்மை மற்றும் சம அந்தஸ்து தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள 4.2ஆம் அத்தியாயத்தில் "இனம், பால்நிலை, சமயம், சமூக அந்தஸ்து பொருட்டுத்தாது அனர்த்த நிவாரணம் பெறுவதற்கு பாதிக்கப்பட்ட சகல ஆட்களுக்கும் உரிமை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளும்" தேவை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சம்பவத்தினால் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் பெண்கள் போன்ற மிகவும் அச்சுறுத்தலுக்கு ஆளான குழுக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய இந்தக் கொள்கையில் விசேடமாக குறிப்பிடப்படாத போதிலும் வழிகாட்டல்கள் மற்றும் தேசிய, சர்வதேச கடப்பாடுகளுக்கு பிரவேசிப்பதன் மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள பெரும்பாலான சந்தர்ப்பங்கள் உள்ளன. வழிகாட்டல்களில் 5.1.6.ஆம் அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "அனர்த்த முகாமைத்துவத்திற்கான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகளை வெளிப்படுத்துகின்றன" மேலும் அதன் 5.6இல் குறிப்பிடப்பட்டிருப்பது "தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டல்களுக்கு ஏற்புடையவாறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்" என்றாகும்.

இந்த நாடு பெற்றுக்கொண்ட அனுபவங்கள், அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் தொடர்பில் பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள புதிய போக்குகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அனர்த்த மதிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய இலங்கையின் விஸ்தீரனமான அனர்த்த முகாமைத்துவநிகழ்ச்சித்திட்டம் தயார்செய்யப்பட்டது. "பால்நிலைசார் அடிப்படையிலான மற்றும் மாற்றுத்திறனாளிகளை பிரதானப்படுத்துவதற்கான ஆற்றலை ஏற்படுத்தும் சூழல்" எனும் அத்தியாயம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலுள்ள விடயங்கள் பின்வருமாறாகும். நீண்டகாலமாக உணரப்பட்ட பால்நிலைசார் அடிப்படையிலான தேவைகளை பிரதானப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய தனியொரு மேடைக்கு சகல நிறுவனங்களையும் கொண்டுவருவதற்கான அடிப்படையை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் விஸ்தீரணமான அனர்த்த முகாமைத்துவநிகழ்ச்சித்திட்டத்திற்கு முடியும். அதன்மூலம் தேவையான மட்டத்திற்கு தரவுகளை சேகரித்து அமுல்படுத்துவதை வினைத்திறனுடன் கண்காணிப்பதற்கு இந்த மேடையை பயன்படுத்திக்கொள்ள முடியும். முறையான வெளிப்படைத்தன்மை மற்றும் நிலையானதன்மையுடன் இந்த விடயங்களை பிரதானப்படுத்துவதற்கான உபாயமுறையாக அமுல்படுத்தும் திட்டம் மற்றும் கையேடுகள், வழிகாட்டல்கள், திரைப்படங்கள் மற்றும் ஏனைய அச்சு ஊடகங்கள், திறன்விருத்தி

[25] National Policy on Disaster Management; Ministry of disaster management 2013

ஆவணங்கள் போன்றன அவசியப்படும். இந்த செயன்முறையை நல்ல முறையில் நிறுவனமயப்படுத்தி பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வளவாளர்களாக சகலரினாலும் இனங்காணப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர் குழுவொன்றை பேணிவருவதை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

கீழ் மட்டத்தில் வினைத்திறன்மிக்கவாறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அமைச்சினால் தமது மாவட்ட மட்டத்திலான வெளிக்கள அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஊடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடனான தொடர்பு நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சும் அதற்கு சமமான வகையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மாவட்ட,மாகாண மட்டத்திலான வெளிக்கள அலுவலர்களுக்கான பல்வேறு திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (5 மாவட்டங்களில்) அனர்த்த சந்தர்ப்பங்களின்போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண்களினதும் சிறுவர்களினதும் விசேட தேவைகளை இனங்கண்டு அதற்குகந்தவாறு தயார்செய்யப்பட்ட அவசரசந்தர்ப்ப நிவாரண பொதிமுறை அனர்த்த சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்படுகின்றது. அனர்த்த சந்தர்ப்பங்களில் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களை இலக்காக் கொண்டு உளவியல்,சமூக ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் அலுவலர்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்,கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்கள் போன்ற சமுதாயத் தலைவர்களுக்கு அனர்த்த சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்ற பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைபற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான செய்தியை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் போன்ற அறிவுறுத்தல் பலகைகளை தகவல் கற்கை தொடர்புசாதன அம்சங்களாக தயார்செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட UNDP[26]யின் அனர்த்த அச்சுறுத்தல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் ஆவணத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "அனர்த்த அச்சுறுத்தல்களை குறைப்பது நீண்டகாலமாக பெரும்பாலும் ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட பணியாக இருந்தபோதிலும் பெண்கள் மற்றும் ஆண்கள் பூரணமாகவும் சமமாகவும் அதில் பங்கேற்பதன்மூலம் அனர்த்த அச்சுறுத்தலை குறைப்பதானது மிகவும் வினைத்திறன்மிக்கது என்பது தெளிவாகின்றது. எதிர்காலத்தில் இடம்பெறுகின்ற கருத்திட்டங்களை திட்டமிடும்போது பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தை ஏற்றுக்கொள்வது உகந்தது" தற்போது காணப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மூலம் முயற்சிகள் மேற்கொண்டுள்ள போதிலும் அதில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. மாவட்ட / பிரதேச மட்டத்திலான அலுவலர்களுக்கு மத்தியில் பால்நிலைசார் அடிப்படையிலான, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய அறிவின்மை, விழிப்புணர்வூட்டல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான திறமைமிக்க வளவாளர்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இல்லாமை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பில் பயிற்சிக்குரிய தேவையான அம்சங்கள் இல்லாமை இதில் முக்கியமாகும். மேற்படி குறைபாடுகள் பற்றி இந்த திட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

---

[26] Outcome Evaluation of Disaster Risk Management Programme of UNDP, Sri Lanka, June 2011. file:///C:/Users/user/Downloads/Final%20Report-Outcome%20Evaluation%20Disaster%20Risk%20Management%20(1).pdf

துறைசார் திட்டம்: அனர்த்த முகாமைத்துவம்

தலைமை தாங்கும் அமைச்சு: அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

ஏனைய அமைச்சு / நிறுவனங்கள்: மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு, பொலிஸ் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு, ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், கொடை வழங்கும் நிறுவனங்கள்

துறைசார் தவிசாளர்: அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்

கால எல்லை: 2016 - 2020

வரவு செலவுத்திட்டம்: ரூபா மில்லியன் 5.81225

| அனர்த்த முகாமைத்துவதுறைசார் திட்டம் | |
|---|---|
| குறிக்கோள்கள் | 1. கொள்கைசார் தலையீட்டினூடாக மற்றும் பதில் நடவடிக்கை கட்டமைப்பின் ஒவ்வொரு மட்டத்தினதும் திறன் விருத்தி ஊடாக அனர்த்த சந்தர்பபங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதை தடுத்தல் மற்றும் உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதை ஊக்குவித்தல்<br>2. பாதுகாப்புக்காக பெண்கள் மற்றும் சிறுமியருக்குள்ள உரிமையை உறுதிப்படுத்துகின்ற பாதுகாப்பு பொறிமுறை காணப்படுவதையும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்வதாகவும் சேவை வழங்கப்படுவதையும் உறுதிசெய்தல்<br>3. ஏனைய தரப்பினர்கள் உள்ளடங்கலாக இளைஞர்கள் மற்றும் வயது முதிர்ந்த பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார், சிறுவர்களான மாற்றுத்திறனாளிகள், பெண்கள் குடும்பத்தலைவிகளாக உள்ள குடும்பங்கள் மற்றும் விதவைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி நிவாரணமாக வழங்கப்படும் உதவிகள் மற்றும் அவற்றை விநியோகிப்பதானது பால்நிலைசார் அடிப்படையில் சம அந்தஸ்தைக் கொண்டது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.<br>4. அனர்த்த நிலைமைகளில் தொடர்ச்சியாக இனப்பெருக்க சுகாதார சேவைகள் வழங்கப்படுவதையும் உளவியல் சமூக உதவிகள் வழங்கத் தேவையான வசதிகள் செய்யப்படுவதையும் உறுதிசெய்துகொள்ளல் |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தடுத்தல்** | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்கு உரிய 1வது துறை:** பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தைக் கொண்ட அனர்த்த பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் திறன்விருத்தி | 1.1 அனர்த்த நிலைமைகளின்போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி தேசிய மட்டத்தில் மற்றும் உபதேசிய மட்டத்தில் விழிப்புணர்வூட்டல் மற்றும் அது சம்பந்தமாக உணர்வுபூர்வமாக்கல் | 1.1 அனர்த்த நிலைமைகளில் ஏற்படக்கூடிய பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய சிக்கல்களுக்கு வினைத்திறன்மிக்கவாறு பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு சமுதாயத்தினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பு உணர்வுபூர்வமானதாக உள்ளதுடன் அவர்களுக்கு அதற்குத் தேவையான ஆற்றல்களும் உள்ளன. | 1.1.1 தீர்மானம் மேற்கொள்வோர், நடவடிக்கை / பதில் நடவடிக்கை பதவியணியனர் மற்றும் சமுதாய அங்கத்தவர்களுக்கு தனித்தனியான பாடங்களை உள்ளடக்கியுள்ள பால்நிலைசார் அடிப்படையிலான, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் அனர்த்தங்கள் தொடர்பான நியம கையேடு ஒன்றை உருவாக்கல் | பால்நிலைசார் அடிப்படை, அனர்த்த சந்தர்ப்பங்களில் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பில் கையேடொன்று தயார் செய்யப்பட்டிருத்தல்<br><br>தகவல் கற்கை தொடர்பாடல் அம்சங்கள் தயார் செய்யப்பட்டிருத்தல் | பயிற்சியை பூர்த்தி செய்யும் அறிக்கை (பயிற்சிப் பாடவிதானம், வருகை தருவோரின் பெயர்ப் பட்டியல், பயிற்சியை மதிப்பீடு செய்தல், பயிற்சி பெற்றவர்களது பின்னூட்டல் மாதிரிப் படிவம் போன்றன உள்ளடங்கலாக) | நிபணத்துவ அமைப்புக்கள் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 2016 - 2018 | 0.475 |
| | | | 1.1.2 கொள்கை வகுப்பாளர்கள் / தீர்மானம் மேற்கொள்வோருக்கு அனர்த்த சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பில் தேசிய மட்டத்திலான, மாவட்ட மட்டத்திலான விழிப்புணர்வூட்டும் கூட்டத்தொடர்களை நடாத்தல் | அனர்த்த நிலைமைகளின் போது பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி பல்வேறு மட்டங்களுக்கும் நடாத்தப்படுகின்ற விழிப்புணர்வூட்டல் / உணர்வுபூர்வமாக்கும் கூட்டத் தொடர்களின் எண்ணிக்கை | | | 2016 - 2018 | 1.44 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1.1.3 அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மாவட்ட மட்டத்திலான பதவியணியினருக்கு அனர்த்த சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் கூட்டத் தொடர்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சி பெற்ற ஆட்களின் எண்ணிக்கை<br><br>பாரியளவிலான விழிப்புணர்வூட்டம் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | | 2016 - 2018 | 1.053 |
| | | | 1.1.4 சமுதாயத்தினர் மற்றும் பயிற்றப்பட்ட பதவியணியினரை ஒன்றிணைத்துக் கொண்டு ஒவ்வொரு சம்பவத்தையும் கவனத்தில் கொள்கின்ற பரிட்சார்த்த ஒத்திகைகளை நடாத்தல் | | | | 2016 - 2018 | 0.5 |
| | | | 1.1.5 வீதி நாடகங்கள், வீடியோ கண்காட்சிகள் மற்றும் | | | | 2016 - 2018 | |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக அனர்த்த சந்தர்ப்பங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதைத் தடுத்தல் / அதிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாக சமுதாய அங்கத்தவர்களின் அறிவை விஸ்தரிப்பதற்காக பொதுவாக மேற்கொள்ளப்படுகின்ற விழிப்புணர்வூட்டல் | | | | | |
| தலையீடு செய்தல் | | | | | | | | |
| கவனக் குவிப்புக்கு உரிய 2வது துறை: அனர்த்த நிலைமை தொடர்பிலான முன்னாயத்தம், பாதிப்புக்களைக் குறைத்தல், பதில் நடவடிக்கை மேற்கொள்ளல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மீளக் கட்டியெழுப்பல் ஆகிய பல்வேறு கட்டங்களிலும் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்து. | 2.1 தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கையின் அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ சுற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்து மற்றும் நியாயத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற கொள்கைசார் வழிகாட்டல் | 2.1 மற்றும் 2.2 பெண்கள் மற்றும் ஆண்களுக்கான நிவாரணம் மற்றும் புனர் வாழ்வளிப்புக்கான அணுகுமுறைகள் மேம்படுத்தப்பட்டதாகவும் சம அந்தஸ்தைக் கொண்டதாகவும் காணப்படல் | 2.1.1. நிவாரணம் மற்றும் புனர்வாழ்வளித்தல் தொடர்பிலான விசேட நடவடிக்கைகளைக் கொண்ட அனர்த்த முகாமைத்துவத்தின் போது பால்நிலைசார் சம அந்தஸ்து காணப்படுவதை உறுதிசெய்வதற்கு உள்ள பொறிமுறைகளை மீளாய்வு செய்தல்<br><br>2.1.2 அனர்த்த முகாமைத்துவத்துக்கான பால்நிலைசார் அடிப்படையிலான சமஅந்தஸ்தைக் கொண்ட பதில் நடவடிக்கைகள் | தற்போது காணப்படுகின்ற நடவடிக்கை களுக்காக அறிமுகம் செய்யப்பட்ட மேம்படுத்தல்களின் எண்ணிக்கை<br><br>பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தைக் கொண்ட அனர்த்த முகாமைத்துவத் | மீளாய்வு அறிக்கைகள்<br><br>கொள்கைசார் வழிகாட்டல்கள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு<br><br>சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு<br><br>சுகாதார அமைச்சு | 2016 - 2018<br><br>2016 - 2018 | 0.0375<br><br>0.479 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2.2 அனர்த்த சந்தர்ப்பங்களில் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தைக் கொண்ட பதில் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல் | | தொடர்பில் வழிகாட்டல்களை தயார்செய்தல்<br><br>2.2.1 கருத்திட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத்துக்கு கண்காணிப்பு பொறிமுறையை ஏற்படுத்தல்<br><br>2.2.2 அனர்த்த சுற்றின் பல்வேறு கட்டங்கள் தொடர்பிலும் பால்நிலை சார் அடிப்படைக்கு அமைய வகைப்படுத்திய தரவுகளைச் சேகரித்தல் மற்றும் முகாமைத்துவத்துக்கான பொறிமுறையை ஏற்படுத்தல்<br><br>2.2.3 பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தைக் கொண்ட அனர்த்த முகாமைத்துவ அழுத்த மதிப்பீட்டை மேற்கொள்ளல் | துக்கு உரிய வழிகாட்டல்கள் தயார் செய்யப்பட்டிருத்தல்<br><br>கண்காணிப்பு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டிருத்தல்<br><br>பால்நிலைசார் அடிப்படைக்கமைய வகைப்படுத்தப்பட்ட தரவுக்கட்டமைப்பு<br><br>மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை | கண்காணிப்பு அறிக்கைகள்<br><br>அழுத்த மீளாய்வு அறிக்கைகள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / சிவில் சமூக அமைப்புக்கள்<br><br>ஐக்கிய நாடுகள் அமைப்பு | 2016 - 2017<br><br>2016 - 2018<br><br>2016 - 2018 | 0.065<br><br>0.214<br><br>0.4 |
| கவனக் குவிப்புக்குரிய 3வது துறை: அனர்த்த முகாமைத்துவ சுற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் | 3.1 அனர்த்த முகாமைத்துவத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதை | 3.1 அனர்த்த முகாமைத்துவத்தின் ஒவ்வொரு பகட்டத்திலும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையற்ற பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தல் | 3.1.1 பால்நிலைசார் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட தரவுகளைக் கொண்ட உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் பற்றி அறிக்கையிடும் | உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பற்றி அறிக்கையிடும் முறை அமுல் படுத்தப்பட்டுள்ளது. | கூட்டத்தொடர் இணக்க அறிக்கைகள் (வருகை தந்தோர் பட்டியல், பங்கேற்றோர் பின்னாய்வு படிவங்கள் உள்ளடங்கலாக) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, | 2016 - 2018 | 0.3375 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் | தடுப்பதற்கான நடவடிக்கைகள் | | முறையை அறிமுகம் செய்தல் | | | | | |
| | | | 3.1.2 பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் தேவையான சேவைகள் / வழிப்படுத்தலுடன் சம்பந்தப்படுவதற்காக முகாம்களில் மகளிர் மற்றும் பெண்களுக்கான கருமபீடத்தை ஏற்படுத்தல். | ஏற்படுத்தப்பட்ட மற்றும் அமுல்படுத்தப் படுகின்ற மகளிர் மற்றும் சிறுவர் குடும்பங்களின் எண்ணிக்கை | உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் பற்றிய பதிவு முறைமையின் அறிக்கைகளது மீளாய்வு | அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொலிஸ் | 2016-2017 | 0.075 |
| | | | 3.1.3 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கு கிராமிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ உபகுழுவை வலுவூட்டல் | வலுவூட்டப்பட்ட அனர்த்த முகாமைத்துவ உபகுழுக்களின் எண்ணிக்கை | முகாம்களிலுள்ள சிறுவர் கருமபீடங்களின் அறிக்கைகள் (மகளிர் மற்றும் சிறுவர்களின் கருமபீடங்களது செயற்பாடுகளின் பரிசீலனைப் பட்டியல் உள்ளடங்கலாக) | | 2016 - 2018 | 0.075 |
| | | | 3.1.4 முகாம்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கு ஆகக்குறைந்த தரநியமங்களை ஏற்படுத்தல் | பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை அச்சுறுத்தல்களை குறைப்பதற்கான பாதுகாப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள முகாம்களின் விகிதம் | | | 2016 - 2019 | 0.075 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3.1.5 மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் மற்றும் இளம்பிராயத்தில் உள்ளவர் கள் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான பொறிமுறையை ஏற்படுத்தல் மற்றும் உரிய அலுவலர்களுக்கு அது தொடர்பான பொறுப்புக்களை சாட்டுதல் செய்தல் | தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கை<br><br>நடாத்தப்பட்ட ஒத்துழைப்பு சந்திப்புக்களின் எண்ணிக்கை | | | 2016 - 2018 | 0.175 |
| | | | 3.1.6 அனர்த்த நிலைமைகளின் போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக மாகாண சபைகளுடன் ஒத்துழைப்படன் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் | | கூட்டக் குறிப்புக்கள் | மாகாண சபைகள் | 2016 - 2019 | |
| | | | 3.1.7 சமூக கிளர்ச்சி / இடம்பெயர்ந்துள்ள சந்தர்ப்பங்களில் பாலியல் வன்முறை ஏற்படுவதற்கு | அனர்த்த முகாமைத்துவம் மற்றும் சுத்தம் செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்ட முகாம்களின் | முகாம்களின் வசதிகள் பற்றிய அறிக்கைகள் (ஆரோக்கிய வசதிகளை | | | |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | காணப்படுகின்ற அச்சுறுத்தலை குறைப்பதற்காக அவசர சந்தர்ப்ப சேவைகள் மற்றும் பொலிஸில் தொடர்ச்சியான திட்டம் ஒன்றை அமுல்படுத்தல் | எண்ணிக்கை அல்லது விகிதம் | பரிசீலிக்கும் பட்டியல்) | | | |
| | 3.2 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தல் | 3.2 அவசர சந்தர்ப்பங்களில் பெண்கள் மற்றும் சிறுமியருக்கான வசதிகள், சேவைகள், பாதுகாப்பு ஏற்பாடுகளை இலகுவாக அடைந்துகொள்ள முடிதல் | 3.2.1 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் உதவி வழங்கும் போது பால்நிலைசார் அடிப்படையிலான உணர்வுபூர்வமான மனநிலையும் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை சமமாகப் பகிர்ந்தளித்தல்.<br><br>3.2.2 அவசர சந்தர்ப்பங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான சேவைகள் மற்றும் போதியளவிலான உட்கட்டமைப்பு வசதிகளையும் சுகாதார வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல் | சேவைகள் தொடாச்சியாக திட்மிடப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை அல்லது விகிதம்<br><br>WRDS இன் கீழ் ஏற்படுத்தப்பட்ட மகளிர் செயலணிகளின் எண்ணிக்கை அல்லது விகிதம்<br><br>கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய குழுக்களின் எண்ணிக்கை | முகாம்களின் வசதிகள் பற்றிய அறிக்கைகள் (கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் சுத்தம் செய்யும் வசதிகள் பற்றி பரிசீலிக்கும் பட்டியல் உள்ளடங்கலாக)<br><br>சிவில் பாதுகாப்பு நிறுவனங்களின் மீளாய்வு அறிக்கைகள் ( சேவை தொடர்ச்சித்திட்ட கண்காணிப்பை பரிசீலிக்கும் பட்டியல்)<br><br>மகளிர் செயலணி அறிக்கைகள்<br><br>பிரச்சனைகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br><br>சுகாதார அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br><br>தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br><br>பொலிஸ் | 2016 - 2019<br><br>2016 - 2018 | 0.1 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3.2.3 பொலிஸ், நன்னடத்தை சேவைகள், சுகாதார சேவைகள் போன்ற சிவில் பாதுகாப்பு நிறுவனங்களுக்கான சேவைகளை தொடர்ச்சியாகத் திட்டமிடல்<br><br>3.2.4 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைச் சிக்கல்களுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக கிராம அலுவலர் மட்டத்தில், பிரிவு மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் பிரச்சினைகள் பற்றிய குழுக்களை ஏற்படுத்தி அவற்றை மீளாய்வு செய்தல் | | | | 2016 - 2019<br><br>2016 - 2019 | |
| **கவனக்குவிப்புக்கு உரிய 4வது துறை:** அனர்த்த நிலைமைகளில் இனப்பெருக்க சுகாதார சேவைகள் மற்றும் உளவியல் சமூக உதவிகளை பெற்றுக்கொடுத்தல் | 4.1 அனர்த்த முகாமைத்துவ சுற்றின் சகல கட்டங்களிலும் வினைத்திறன்மிக்க இனப்பெருக்க சுகாதார சேவைகள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல் | 4.1 பாதிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியாக பிரவேசிக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. | 4.1.1 குடும்ப கட்டுப்பாட்டு வசதிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை ஏற்படுத்தல்<br><br>4.1.2 சுகாதார / துப்பரவேட்பாட்டு தொகுதிகளுக்கான வசதிகளை பெற்றுக்கொள்ளும் ஆற்றல்<br><br>4.1.3 அவசர சந்தர்ப்பங்களின் கீழ் | இனப்பெருக்க சுகாதார சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கொளள்ப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை<br><br>குடும்ப கட்டுப்பாட்டு பொருட்கள் / சுகாதார / துப்பரவேட்பாட்டு உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக காணப்படுகின்ற | முகாம்களில் உள்ள வசதிகள் பற்றி அறிக்கைகள் (இனப்பெருக்க சுகாதார சேவைகளை பரிசீலிக்கும் பரிட்சார்த்தப் பட்டியல் உள்ளடங்கலாக) | சுகாதார அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br><br>அனர்த்த நிவலாரண சேவைகள் நிலையம் | 2016-2017<br><br>2016-2017<br><br>2016 - 2018 | |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தாய்மாருக்கான அரவணைப்பு சேவைகளுக்கு பிரவேசிக்கும் ஆற்றலை வழங்கக்கூடிய பொறிமுறையை ஏற்படுத்தல் | சேவை நிலையங்களின் எண்ணிக்கை<br><br>சேவைகளை பெற்றுக்கொள்கின்ற பெண்கள் / ஆண்களின் எண்ணிக்கை | | சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் | | |
| | | | 4.1.4 பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் / HIV, உளவியல் நிலைமைகள் தொடர்பில் ஏற்படுத்தக்கூடிய நோய்கள் பற்றிய தகவல்களை முகாம்களில் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை ஏற்படுத்தல் | முகாம்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல் கற்கை தொடர்பு சாதனப் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வகைகள் | | | 2016 - 2018 | |
| | | | 4.1.5 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்டவர்கள் அல்லது அச்சுறுத்தலுக்கு ஆளாகும் குழுக்களுக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் | | | | 2016 - 2019 | |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4.2 அனர்த்தங்களை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்ட ஆட்களுக்கு உளசமூக உதவிச் சேவைகள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல் | 4.2 அனர்த்தங்களை எதிர்நோக்கி உயிர்பிழைத்துக் கொண்ட ஆட்களுக்கு உளசமூக சேவைகளுக்கான பிரவேசங்களை செய்து கொடுத்தல் | 4.2.1 தெரிவு செய்யப்பட்ட சமுதாய மட்டத்திலான ஆலோசகர்களுக்கு ஆகக்குறைந்த அடிப்படைச் சேவை வசதிகள் பற்றி பயிற்சிகளை வழங்குதல்<br><br>4.2.2 உளசமூக புனர்வாழ்வளிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் / ஆலோசகர்களை இனங்கண்டு அவர்களைப் பட்டியலிட்டு அவர்களின் திறன்களை விருத்தி செய்தல்<br><br>4.2.3 அனர்த்தங்களை எதிர்கொண்டு உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கான இசை மற்றும் சித்திரக்கலை போன்ற மாற்று சிகிச்சை முறைகளை பெற்றுக்கொள்ள வழிவகுத்தல்<br><br>4.2.4 நண்பர்களாக செயற்படுவதற்கு இளம் தலைவர்கள் மற்றும் தொண்டர் ஊழியர்களை ஒன்றுதிரட்டி வழிநடாத்தல் மற்றும் | ஆகக்குறைந்த அடிப்படை சேவை தொகுதிகள் தொடர்பிலான பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள சமுதாய ஆலோசகர்களின் எண்ணிக்கை அல்லது விகிதம்<br><br>இனங்காணப்பட்ட மற்றும் உதவி வழங்கப்பட்ட உளசமூக புனர்வாழ்வு அளிப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் விகிதம்<br><br>மாற்றுச் சிகிச்சை முறைகள்<br><br>பயனாளிகளாக சம்பந்தப்பட்டுள்ள இளைஞர்களின் எண்ணிக்கை மற்றும் தொண்டர் ஊழியர்களின் எண்ணிக்கை<br><br>முகாம்களில் உள்ள வசதிகள் பற்றிய அறிக்கைகள் | பயிற்சியை பூர்த்தி செய்துள்ளமை பற்றிய அறிக்கைகள் (பயிற்சிப் பாடநெறி, வருகை தந்தோர் பட்டியல், பயிற்சி பெற்றவர்களின் பின்னூட்டல் மாதிரிப் படிவங்கள் உள்ளடங்கலாக)<br><br>பொருட் பதிவேட்டு அறிக்கை<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>பயிற்சி அறிக்கைகள் | சுகாதார அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br><br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / சிவில் சமூக அமைப்புக்கள் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் | 2016 - 2020<br><br>2016 - 2019<br><br>2016 - 2020<br><br>2016 - 2020 | 0.31125 |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அவர்களுக்கான பயிற்சியை அளித்தல் | | | | | |
| | | | 4.2.5 உளசமூக உதவிகள் மற்றும் ஆலோசனை சேவைகளுக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் நிறுவனத்துறை போன்றன சம்பந்தப்படுகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் | | | | 2016 - 2020 | |
| **கொள்கைசார் ஆலோசனைகள்** | | | | | | | | |
| கவனக் குவிப்புக்குரிய 5வது துறை: அனர்த்த சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலைமைகளின் கீழ் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான கொள்கைகள் மற்றும் பொறிமுறை | 5.1 தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கையை வினைத்திறன் மிக்கவாறு அமுல்படுத்து வதற்காக மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பது தொடர்பில் அதிலுள்ள பகுதிகளையே அமுல்படுத்து வதற்காக செயற்படல் | 5.1 ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவ செயன்முறையின் ஒரு பகுதியாக பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுத்தல் மற்றும் அது தொடர்பில் நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் உபாயமுறைகள் அமுல்படுத்தப்படல் | 5.1.1 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவில் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு தொடர்பான உபகுழுவை ஏற்படுத்தல் | பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு தொடர்பிலுள்ள உபகுழுக்களின் எண்ணிக்கை | பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு தொடர்பிலான குழுக்களினால் அறிக்கையிடல் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br>தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு | 2016-2017 | |
| | | | 5.1.2 அனர்த்த நிலைமைகளின்போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதை தடுப்பதற்கான இடையீட்டு / முகவர் நிறுவனங்களின் உதவி கிடைப்பதை உறுதிசெய்து | அனர்த்த நிலைமைகளின் போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதை தடுப்பதற்காக இடையீட்டு / முகவர் | தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு பொறிமுறை சம்பந்தமான குறிப்புக்கள் | சிவில் சமூக அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள்<br>ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் | 2016 - 2019 | |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கொள்வதற்காக தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | நிறுவனங்களிடம் உதவி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டிருத்தல் | | | | |
| | | | 5.1.3 வளப்பகிர்வுக்காக மற்றும் திறன்விருத்தியை மேற்கொள்வதற்காக, அனர்த்த நிலைமைகளின் போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை ஏற்படுவது பற்றிய சிக்கல் தொடர்பில் செயற்படுகின்ற சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களுடனான தொடர்பாடலை மேற்கொள்ளல் | உதவி வழங்கும் சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களின் எண்ணிக்கை | | | 2016 - 2020 | |
| | | | 5.1.4 பல்வேறு மட்டங்களிலும் தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களில் பெண்களின் பங்கேற்புக்காக செயற்படல் | | | | 2016 - 2019 | |

# துறை: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்பு

## பின்னணி: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்புப் பிரிவு

இலங்கையின் கல்விக்கு அமைய காணப்படுகின்ற பால்நிலைசார் சமூக அந்தஸ்து தொடர்பான சாதகமான சமநிலைமை, அவர்களுக்கு மற்றைய ஆண்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கான பெண்கள் தொழிலற்றவர்களாக உள்ள தொழில்வாய்ப்புத் துறையை சமமான நிலைக்கு மாற்றியமைப்பது காணப்படுவதில்லை. அவர்கள் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் கூட பெரும்பாலும் இந்த துறையில் ஈடுபட்டுள்ள வேலை செய்கின்ற சமூக சூழல் மற்றும் கட்டமைப்புக்கள் பால்நிலைசார் சமூக அந்தஸ்துக்கு நியாயத்தன்மைக்கான[27] உதவியளிப்பது தெரிவதில்லை. 383 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையின் பால்நிலைசார் சமூக அந்தஸ்தின் சமமற்ற சுட்டி (G11) 75வது இடத்தில் காணப்படுகின்ற போதிலும் இலங்கை பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்புக்கள், அரசியலை வலுவூட்டல் ஆகிய துறைகளில்[28] நியாயமான செயலாற்றுகையை அடைந்துகொள்ள முடிந்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை, ஆடைக்கைத்தொழில்துறை, பெருந்தோட்டத்துறையில் இலங்கை பொருளாதாரத்திற்கு பெண்கள் உச்சளவில் பங்களிப்பை வழங்குகின்றனர். எவ்வாறாயினும் தேசிய ஊழியப்படையணியில் பெண்களின் பங்கேற்பு ஒப்பீட்டு ரீதியாக குறைவானதாகும். 2014ஆம் ஆண்டின் தேசிய தரவுகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது 74.6%மாக உள்ள ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் 34.7% (15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) மாத்திரம் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானவர்களாக உள்ளனர் என்பதாகும். 20 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகைப் பிரிவினரில் பெண்களின் ஊழியப்படைக்கான பங்களிப்பு 37.3%மாகும். ஆண்களின் பங்களிப்பு 81.2%மாகும். இந்த பிரிவினருக்கு தொழிலற்ற விகிதம் பெண்கள் தொடர்பில் 6.1%மாகும். ஆண்கள் தொடர்பில் 2.6%மாகும். இவ்வாறு பொருளாதார ரீதியாக செயலற்று இருப்பது அதாவது 5.8 மில்லியன்[29] எண்ணிக்கையானோர் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளமைக்கான பிரதான காரணம் அவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பது மாத்திரமாகும் என்பதுடன் பெண்களில் சுமார் 4.3%மானவர்கள் மாற்றுத்திறனாளிகளாக அல்லது உடல் ரீதியில் நோய்வாய்ப்பட்ட நிலைமையில் பொருளாதார ரீதியில் செயலற்றிருப்பதற்கு காரணமாக உள்ளது.

---

[27] Equality and Discrimination in Sri Lanka and the Maldives; International Labour Organization ILO Colombo. http://www.ilo.org/colombo/areasofwork/equality-and-discrimination/lang--en/index.htm

[28] UNDP (2014). Human Development Report 2014, Sustaining Human Progress: Reducing Vulnerabilities and Building Resilience. United Nations Development Programme

[29] Labour Force Survey - Annual Report 2014, Department of Census and Statistics Ministry of Policy Planning Economic Affairs, Child Youth and Cultural Affairs

## ஆடைக்கைத்தொழில் துறை

உடைகள் மற்றும் ஆடை உற்பத்தித்துறை மற்றும் ஏற்றுமதி ஆடை உற்பத்தித்துறையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்கின்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன. இவ்வாறான ஆடைக்கைத்தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை சுதந்திர வர்த்தக வலயங்கள் அல்லது ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் அமைந்துள்ளன. ஆரம்பம் முதல் இந்த தொழிற்சாலைகளில் நிலையான சம்பளம் மற்றும் சிறந்த பொருளாதார வாய்ப்புக்களை வழங்க வாக்குறுதியளிக்கப்பட்டதுடன் கிராமிய இளைஞர் யுவதிகள் பிரதானமாக பெண்களை கவரக்கூடிய வகையில் இவை ஏற்படுத்தப்பட்டன. 12 வலயங்களில் 110,470 பேர் இந்த துறையில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டிருப்பதுடன் இவர்களில் 75,478 பேர் (66.1%) பெண்களாக உள்ளனர்.[30] 2013ஆம் ஆண்டில் பெண்களின் ஊழிய விகிதம் 58.56%மாகும். இது பெண்கள் தொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள விகிதம் வீழ்ச்சியடைவதை வெளிப்படுத்துகின்றது. இந்த பெண்கள் தூங்கும் மண்டபங்களிலேயே தமது வாழ்க்கையை கழிப்பதுடன் தமது குடும்பங்களில் இருந்து குறைந்தளவான உதவியைப் பெற்றுக்கொள்வதுடன் அதிக மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர். பாதுகாப்பற்ற அநாதரவான தன்மை மற்றும் வேறு சூழல் காரணமாக இவர்கள் தொழில் வழங்குனர்கள், வீட்டு உரிமையாளர்கள் மற்றும் ஏனைய ஆண்களினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்ற அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கான பாதுகாப்புமிக்க சூழல் இல்லாமை அவர்கள் வாய்மூலம், உடல் மற்றும் பாலியல் ரீதியாக பல்வேறு வகையில் துன்புறுத்தலுக்கு இலகுவாக இலக்காக மாறுதல் வன்புணர்ச்சி மற்றும் படுகொலை செய்யப்படுவதனாலும் பாதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் அபாயநிலைகளை எதிர்நோக்கியுள்ளனர்[31]. பயணங்களில் ஈடுபடும்போது பாலியல் ரீதியாக பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் ஆளாகும் அபாயம் உயர்மட்டத்தில் காணப்படுகின்றது என்பதுடன் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களில் 83%மானவர்கள் இவ்வாறான பின்னணியில் உள்ளனர். பெண்களில் 57%மானவர்கள் சேவை நிலையங்களில் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளதுடன் வசிக்கும் இடங்களில் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை 36% அறிக்கையிடப்பட்டுள்ளது[32].

---

30Sivananthiran, A., (undated). Promoting decent work in export processing zones (EPZs) in Sri Lanka, International Labour Organisation, http://www.ilo.org/public/french/dialogue/download/epzsrilanka.pdf
31Attanapola, C. T., (2004). 'Changing gender roles and health impacts among female workers in export-processing industries in Sri Lanka' Social Science & Medicine(2004), 58 2301-2312.
32Perera, M 1997, 'Study on safety of Free Trade Zone workers', Marga institute.

பெரும்பாலான சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் சேவை நிலையங்களில் துன்புறுத்தல்களுக்கு ஆளாவதாகவும் உடல் ரீதியாக அல்லாத துன்புறுத்தல்கள் அதிகம் இடம்பெற்றிருப்பதாகவும் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.[33] நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் (சுதந்திர வர்த்தக வலயம் போன்ற பிரதேசங்களில்) வன்முறை அல்லது மேற்படி அச்சுறுத்தல்கள் பற்றிய உணர்வானது தாமதமாக சேவையில் ஈடுபடுவதற்கு பெண்கள் பின்னிற்பதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது[34] எவ்வாறாயினும் இந்த சிக்கல்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு பெண்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை என்பதுடன் செலவினம், உதவியில்லாமை மற்றும் மேற்படி தொழிலை இழக்க நேரிடும் என்ற பயம் காரணமாக பெண்களில் பெரும்பாலானவர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை.[35]

**பெருந்தோட்டத்துறை**

நகர்ப்புற (27.6%) கிராமிய (32.8%) துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல்வேறு துறைகளுக்கிடையே ஊழியப்படையணியின் பங்கேற்பு விகிதம் வெளிப்படுத்தப்படுவது தோட்டத்துறையில் பெண்களின் ஊழியப்படையணியின் பங்கேற்பு விகிதம் அதிக பெறுமானத்தை (50.9%) கொண்டுள்ளது என்பதாகும். மாவட்டங்களில் பெண்களின் ஊழியப்படையணிக்கான பங்களிப்பு விகிதம் தோட்டத்துறைக்கு உரித்தான நுவரெலியாவில் (52.2%) மற்றும் மொனராகலையில் (46.9%) ஆகிய மாவட்டங்கள் அதிக பெறுமானத்தை வெளிப்படுத்துகின்றன.[36]

7 தோட்டங்களைச் சேர்ந்த பெண்கள் 350 பேர் மத்தியில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பது சுமார் 83%மானவர்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதுடன் அவர்களில் 17%மானவர்கள் தெரிவித்திருப்பது இது தொழிலை செய்யும்போது இடம்பெற்றுள்ளது என்றாகும். துஷ்பிரயோகம் செய்பவர்கள் அதிகாரிகளாக இருப்பது துஷ்பிரயோகத்தை மேற்கொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது என ஆய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.[37]

---

[33] *Gunasekara, S., (1998). 'Working conditions in the FTZ', Workshop on 'Workers in the Free Trade Zones' on 9th August 1998, Colombo.*

[34] *Samaraweera, D., (2007) 'Companies say 'no' to sexual harassment' Sunday Times, December 16 2007. Quoted in Financial Times http://www.sundaytimes.lk/071216/FinancialTimes/ft316.html*>

[35] *Hancock, P., (2006). 'Violence, Women, Work and Empowerment: Narratives from Factory Women in Sri Lanka's Export Processing Zones', Gender, Technology and Development 10(2) 2006,Sage Publications, New Delhi..*

[36] *Labour Force Survey - Annual Report 2014, Department of Census and Statistics Ministry of Policy Planning Economic Affairs, Child Youth and Cultural Affairs.*

[37] *Kamalini Wijethilake (2003)* Harsh Realities A Pilot Study on Gender Based Violence in Estate Sector, Plantation Human Development Trust.

தோட்டத்துறையில் பெண்கள் மற்றும் ஆண்களின் கட்டமைப்புசார் நேர்முக கலந்துரையாடலொன்றை நடாத்தி ஆய்வொன்றை மேற்கொண்டபோது தெரியவந்திருப்பது பெண்களில் 74%வர்கள் ஆண்கள் தமது பெண்களுக்கு அடிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.[38]

**விவசாயத்துறை**

விவசாயத்துறையில் தொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள ஆண்களில் 27.9%மானவர்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் 33.3%மாகும். அதற்கமைய பெண்களின் பங்களிப்பு விவசாயத்துறையில் கூடுதலாக அங்கீகரிக்கப்படுவது மிகக்குறைவாக உள்ளபோதிலும் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்ற மாவட்டங்களில் பெண்களின் பங்களிப்பானது உச்ச மட்டத்தில் காணப்படுகின்றது.[39]

**மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறையானது இலங்கையில் கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் பிரதான வாழ்வாதார நடவடிக்கையாக உள்ளது. தொடர்ந்து கைத்தொழிலில் கூடுதலாக வறுமையினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களாக இருப்பதுடன் இவர்கள் பாரம்பரிய வள்ளங்களை பயன்படுத்துகின்ற மீனவர்களாவார்கள். மீன்பிடித்துறை என்றழைக்கப்படும் இந்த உபதுறை இலங்கையில் பொருளாதார ரீதியில் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள துறையாகும்.[40] கலாசார ரீதியான காரணிகளினால் உண்மையில் மீன் பிடிப்பதில் பெண்கள் ஈடுபடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவ்வாறு பிடிக்கப்படுகின்ற மீன்களை தயார்செய்கையில் விசேடமாக கருவாடு பதனிடும் தொழிலில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

*மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட மீன்பிடித்துறையில் உள்ள பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம், திரியதயத்தட்டசவிய, நாடு முழுவதிலும் பரந்துள்ள பெண்கள் சங்கங்களின் அங்கத்தவர்களை பொருளாதார சமூக ரீதியாக வலுவூட்டி மேம்படுத்துவதை*

---

[38]*Palaniappan, G., (2003), 'Study on Violence against Women in the Plantations Communities Project (PCP) Estates', CENWOR, Colombo.*
[39]*The Sri Lankan Woman: Partner in Progress, Department of Census and Statistic and Ministry of Women's Affairs, 2014.*
[40]*Analysis of the Fisheries Sector in Sri Lanka,* Guided Case Studies for Value Chain Development in Conflict-affected Environments, Micro Report #100, USAID March 2008 http://www.ips.lk/research/fishery_sector_020708/research%20_highligt_fishery_sector.pdf.

நோக்காகக் கொண்டிருந்தது. அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டிருந்ததுடன் அடுத்தகட்டத்தின்போது தெரிவுசெய்யப்பட்ட 16 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கு மீன்பிடி உபகரணங்களை பெற்றுக்கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.[41]

### முறைசாரா துறை

"அமைப்புக்களை பதிவுசெய்யும் தகவுதிறன்கள்" மற்றும் "கணக்குப்பதிவு முறை" போன்றவற்றை உள்ளடக்கிய சில முறைசார்ந்த நடைமுறைகளில் இருந்து விடுபட்டு காணப்படுகின்ற அமைப்புக்கள் முறைசாரா துறை என அறிமுகம் செய்யப்படலாம். முறைசாரா துறையில் உள்ள பெண்களின் பங்களிப்பு 53.9% ஆகும்[42]

### சுயதொழில் வாய்ப்பு

சுயதொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ள அல்லது சுயமான பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இலங்கை தொழில்வாய்ப்பின் மொத்த எண்ணிக்கையில் 31.9%மாக உள்ளனர். தொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள சகல பெண்களிலும் 23.7%மானவர்கள் சுயமான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.[43]

### கொடுப்பனவு செலுத்தப்படாத பொருளாதாரம்

குடும்பத்தொழில் அல்லது விவசாயத்தில் ஈடுபடும் போது அவருக்கு எந்தவொரு கொடுப்பனவும் செலுத்தப்படுவதில்லை. அவ்வாறு செலுத்தாது அந்தப் பணியில் ஈடுபடுகின்ற குடும்ப அங்கத்தவர்கள் கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப ஊழியர்களாக கருதப்படுகின்றனர். ஒட்டுமொத்த தொழில்வாய்ப்புத் துறையில் குடும்ப ஊழியர்களின் பங்களிப்பு 8.9%மாகும். இவ்வாறு தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களில் ஆண்களின் பங்களிப்பு 2.9%மாகும். பெரும்பாலும் 20.6%மான பங்களிப்பை பெண்கள் இதற்கு வழங்குகின்றனர்.[44]

ஊழியர்கள் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை சேவை நிலையங்களில் தனியார் மற்றும் பொதுத்துறையிலும் பொதுப் போக்குவரத்து சேவை மற்றும் வேறு பொது இடங்களிலும் இடம்பெறுகின்றது. பழிவாங்கும் தாக்குதலுக்கு பெண்கள் பயப்படுவதனால் துன்புறுத்தப்படுவதற்கு துன்புறுத்தல்

[41] *Main Development Programmes for Women, 2015, Economic Empowerment division for Women Ministry of Women and Child Affairs.*
[42] *Labour Force Survey - Annual Report 2014, Department of Census and Statistics Ministry of Policy Planning Economic Affairs, Child Youth and Cultural Affairs.*
[43] *Equality and Discrimination in Sri Lanka and the Maldives; International Labour Organization ILO Colombo.*
[44] *Equality and Discrimination in Sri Lanka and the Maldives; International Labour Organization, ILO Colombo.*

தொடர்பாக பெண்கள் மீது வசைபாடும் சமூக நடவடிக்கை காரணமாகவும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக அறிக்கையிடுவது குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு காணும்போது வன்முறை தொடர்பில் அமைதியாக இருத்தல் மற்றும் அதனை ஏற்றுக்கொள்ளும் கலாசாரம் சவாலாக உள்ளது.

பொருளாதார துறையில் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்காக கொள்கைசார் பதில் நடவடிக்கைள் மிகவும் பலம்மிக்கதாகும். தேசிய மனிதவள மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையின் பிரிவு 286-300 வரையான அம்சங்கள் பால்நிலைசார் அடிப்படையிலான சமூக அந்தஸ்தை பிரதானப்படுத்துவது பற்றி விபரிக்கின்றது. ஊழிய சந்தையில் பெண்களுக்கு பாதகமான நிலை காணப்படுவதாகவும் ஆண்களை தொழில்வாய்ப்புக்கு தெரிவுசெய்து கொள்ளக்கூடிய பரந்தளவிலான வாய்ப்புக்கள் காணப்படுகின்றதுடன் பெண்களுக்கென தொழில்வாய்ப்புத் துறைகள் சில மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்வதுடன் பெண் ஊழியர்கள் தொழில் செய்யும் இடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகக்கூடிய உச்சளவான அபாயம் நிலவுவதுடன் சமூக மனப்பாங்கு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புகள் பற்றி கவனத்தில் கொள்ளும்போது எல்லா சந்தர்ப்பங்களிலும் இவர்கள் அமைதியாக கஸ்டத்தை அனுபவித்து வருகின்றார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட கொள்கையின் பிரிவு 292-300இன் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. மிகவும் நெகிழ்வுத் தன்மைமிக்க சேவை நடைமுறையை ஊக்குவித்தல், இணையத்தளம் ஊடாக சேவைகளை தயார்செய்வதற்கான உதவி...... உயர்மட்ட பயிற்சி தேவையான தொழில்வாய்ப்புகளுக்கு பெண்களை பயிற்றுவிப்பதற்கான முதலீடு... மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை மேம்படுத்தல்..... சமூக பாதுகாப்பு கட்டமைப்பை தாபித்தல் போன்ற சிபாரிசுகள் சுயதொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டள்ள பெண்களின் நலம் கவனத்தில் கொண்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட 1954இன் 15ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம், 1956இன் 47ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழில்வாய்ப்பில் ஈடுபடுத்தும் சட்டம் (இரவுநேர சேவைக்கான முன்தேவைப்பாட்டை இனங்கண்டுள்ளது), 1983இன் 15ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துவது பற்றிய சட்டம் மற்றும் இது சம்பந்தமான திருத்தங்கள், 1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம், 2005இன் இலங்கையில் முறையான தொழில்வாய்ப்புகளுக்கான தேசிய கொள்கை மற்றும் 1939இன் 32ஆம் இலக்க தாய்மாருக்கான பயன்கள் பற்றிய கட்டளைச் சட்டம் மற்றும் பின்னர் அதில் செய்யப்பட்ட திருத்தங்கள் போன்ற பல சட்டங்கள் கொள்கைசார் உதவியை மேம்படுத்துகின்றன.

1995இன் 30ஆம் இலக்க சமுர்த்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபை 1996ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்ததுடன் சமூகத்தில் உள்ள சிறப்புரிமைகள் அற்ற குழுக்கள் மத்தியில் பூரணமான அபிவிருத்தியின் ஊடாக சுபீட்சமிக்க இலங்கையை

உருவாக்குவதை இந்த அதிகாரசபை தமது செயற்பணியாக கொண்டுள்ளது.[45] திவிநகும போன்ற வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைப்புச் செய்யப்பட்டு தற்போது சுயாதீனமாக முகாமைத்துவம் செய்யப்படுகின்ற சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பெண்களுக்கு நேரடியாக பயன்களை வழங்கி புத்தாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றுக்கு உதவி வழங்கியுள்ளது. எவ்வாறாயினும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்ட முன்னுரிமையான அங்கீகாரம் இதன்போது வழங்கப்படுவதில்லை.

தொழில்வாய்ப்புத் துறையில் பால்நிலைசார் அடிப்படையில் அநீதி இடம்பெறுவதில்லை என்பதற்கு பொறுப்புடன் செயற்படுதல், சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு கடன் மற்றும் உதவித்திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்தல், திறன்விருத்தி, தொழில் நிலையங்களில் விசேடமாக சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் தோட்டத்துறையில் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்காக பால்நிலைசார் அடிப்படையிலான உணர்வுபூர்வமான வேலைச்சூழலை ஏற்படுத்தல் மற்றும் தடுத்தல் மற்றும் நிவாரணம் வழங்கும் பொறிமுறையை தாபித்தல் என்றவகையில் பொருளாதாரத்துறை ஊடாக குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் பெண்களுக்கு உதவுவதற்காக பெருமளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியில் செயலற்றுள்ள பெண்களின் சனத்தொகையின் கொள்ளளவை பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்காக அவர்களின் ஆற்றல்களை பயன்படுத்துவதற்கு மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

---

[45] *About Us, Department of Divinaguma Development* http://www.samurdhi.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=123&Itemid=50&lang=en

துறைசார் திட்டம்: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்பு

வழிநடாத்தும் அமைச்சு: தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

துறைசார் தவிசாளர்: செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு

கால எல்லை: 2016-2020

வரவு செலவுத்திட்டம்: ரூ.மி.570.0

---

| பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்புத்துறை | |
|---|---|
| நோக்கங்கள் | 1. பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்ப்பிழைத்துக் கொண்டவர்களுக்கான உதவிகளை மேம்படுத்தல்<br>2. அறிவுறுத்தல், சமூக பொருளாதார தலையிடுகள், பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான கொள்கை ஒன்றை நிறுவனமயப்படுத்துவதன் மூலம் பெருந்தோட்டத்துறையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குதல்<br>3. தொழில்வாய்ப்பு மற்றும் திறன்விருத்தி, நிதி மற்றும் கடனுக்கான பிரவேசம் ஆகிய விடயங்களில் பால்நிலைசார் சம அந்தஸ்தை உறுதிப்படுத்துவதும் சமமான வேலைகளுக்கு சமமான ஊழியமும்<br>4. வர்த்தக வீட்டுப்பணியாளர் சேவை, சுயதொழில் வாய்ப்புத்துறைகளில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையின் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குதல், கொள்கைசார் மற்றும் நிகழ்ச்சித்திட்ட ரீதியான பதில் நடவடிக்கைகளை மேம்படுத்தல் |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| உபதுறை: பெருந்தோட்டம்<br>உபதுறையை வழிநடாத்தும் அமைச்சு: பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>உபதுறையின் தவிசாளர்: செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>வேறு அமைச்சுக்கள் / நிறுவனங்கள்: பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு, சுகாதார மருத்துவ அலுவலர், ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக வங்கி, அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் | | | | | | | | |
| தடுத்தல் | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்குரிய 1வது துறை:** பெருந்தோட்ட கைத்தொழில் துறையில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பாலியல் மற்றும் பாலியல், பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்புணர் வூட்டல் | 1.1 பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் அதன் விளைவுகள் பற்றிய பூரண அறிவு | 1.1<br>பெருந்தோட்டத்துறை யின் தொழில் வழங்குனர்கள், தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவமானது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான அழுத்தங்களை புரிந்து கொண்டிருப்பதுடன் பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்து தொடர்பாக தீர்வுகளை வழங்குவதற்கு வலுவூட்டப் பட்டுள்ளனர். | 1.1.1 ஏழு பிரதேசங்களில் சகல பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளினதும் தோட்டங்களில் சுகாதார மற்றும் நலன்புரி பதவியணியினர் மற்றும் சமுதாய அபிவிருத்தி அலுவலர்களுக்காக பால்நிலைசார் அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்து பற்றி அறிவூட்டுதல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்<br>1.1.2.சகல பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிறுவனங்களின் பதவியிணியுடன் பாலியல் மற்றும் | பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் அதனைத்தடுப்பது பற்றி அறிவுறுத்தல் மற்றும் பயிற்சி பெற்றுள்ள சுகாதார மற்றும் நலன்புரித்துறை பதவியணியினர் மற்றும் சமுதாய அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை<br>பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்புணர்வூட்டப்பட்ட , பயிற்றப்பட்ட பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் | செயலமர்வு அறிக்கைகள் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகள்<br>மீளாய்வு | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தேவையான வாறு மற்றும் தேவையான சந்தர்ப்பங் களில் சுகாதார மருத்துவ அலுவலரின் உதவியுடன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு<br>பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு<br>தேசிய மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனம் | 2017-2019 | 50.0 (நிதி வழங்கும் மூலம், மலைநாட் டுப் புதிய கிராமிய உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவி ருத்தி அமைச்சு, பெருந் தோட்டக் கைத் தொழில் அமைச்சு, உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி) |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1.2.<br>பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்துக்கான தீர்வினை வழங்குதல் மற்றும் சிறுவயது விவாகத்தை தடுப்பதற்காக வெளிப்படையான வினைத்திறன்மிக்க திட்டம் ஒன்றை அமுல்படுத்தல் | 1.2<br>தமது பிள்ளைகளின் சிறுவயது விவாகத்தை தடுப்பதற்கு பெருந்தோட்டத் துறையில் உள்ள குடும்பங்கள் வலுவூட்டப்பட்டுள்ளனர் | பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் அவற்றின் பாதகமான தாக்கங்கள் பற்றி அறிவுறுத்தலை வழிநடாத்தல்<br>1.1.3 பெருந்தோட்ட சமுதாயத்தினர் மத்தியில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான விடயங்கள் பற்றி பரந்தளவிலான அறிவுறுத்தலை வழிநடாத்தல்<br>1.2.1 பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்து பற்றி இளைஞர்கள் தொண்டர் செயற்பாட்டாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல்<br>1.2.2 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான விடயங்களுக்கு எதிரான கலந்துரையாடல்களில் ஆண்கள் பங்கேற்பதை மேம்படுத்தல்<br>1.2.5 மதுபானம் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான ஏனைய சிக்கல்கள் பற்றி விழிப்புணர்வூட்டல் | பதவியணியினரது எண்ணிக்கை<br>விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் / நிகழ்வுகளின் எண்ணிக்கை<br>ஊடக நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>உணர்வுபூர்வமாக்கப்பட்ட சமுதாய அங்கத்தவர்களின் எண்ணிக்கை<br>இளைஞர்கள் மற்றும் தொண்டர் செயற்பாட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>பயிற்றப்பட்ட தொண்டர் செயற்பாட்டாளர்கள் / இளைஞர்களின் எண்ணிக்கை<br>கலந்துரையாடலில் ஈடுபடுகின்ற ஆண்களின் எண்ணிக்கை | முன்னதான மற்றும் பிந்திய மதிப்பீட்டு அறிக்கைகள்<br>சம்பவங்களின் அறிக்கைகள்<br>பயிற்சியைப் பூர்த்தி செய்யும் அறிக்கைகள்<br>முன்னேற்ற அறிக்கைகள் | மலைநாட்டு புதிய கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு<br>உதவி வழங்குவோர்<br>சிவில் சமூக சங்கங்கள் / அரச சார்பற்ற அமைப்புக்கள் | 2016-2020 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1.2.6 பெருந்தோட்டத் துறையில் உள்ள வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை துரிதப்படுத்தல்<br><br>1.2.7 சட்டம் மற்றும் சமூக சுகாதார நடவடிக்கை முறைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதன் மூலம் சிறுவயது விவாகத்தை தடுத்தல் | மதுபானம் பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் பயன்களைப்பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை<br><br>சிறுவயது விவாகம் மற்றும் அதன் விளைவுகள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் அறிக்கை<br><br>இளம் பிராயத்தில் கர்ப்பமடைவது பற்றிய நிலைமை சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை | | | |
| **தடுத்தல்** | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்குரிய 2வது துறை:**<br><br>பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையில் தலையிடுவதற்கு அதிலிருந்து உயிர்ப் பிழைத்துக் கொண்ட வர்களுக்கு உதவுவதற்கான பொறிமுறையை மேம்படுத்தல் | **2.1**<br><br>பாலியல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்தி லிருந்து உயிர் பிழைத்துக் கொண்ட வர்களுக்கு உதவுவதற்கான தோட்டங்களில் மருத்துவ மற்றும் ஏனைய சேவைகளை தாபித்தல் | **2.1**<br><br>பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு தரமான சேவை மற்றும் வழிநடாத்தும் கட்டமைப்புக்கு இலகுவான பிரவேசம் உள்ளது | 2.1.1. அவதானமாக செயற்படுதல் மற்றும் வழிநடாத்தலை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு தோட்டத்திலும் தோட்டக் குழுக்கள் காணப்படல்<br><br>2.1.2 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை / நெருங்கிய வாழ்க்கைத்துணையின் ஆளாகி உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கான மருத்துவ, சட்ட | தோட்டங்களில் உள்ள அவதானமாக செயற்படும் குழுக்களின் எண்ணிக்கை<br><br>மித்துரு பியச மற்றும் ஏனைய சேவை நிலையங்களுக்கு பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளில் இருந்து அறிக்கையிடப் பட்டுள்ள உயிர் பிழைத்துக் கொண்டவர்களின் சம்பவங்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>மித்துரு பியச மற்றும் ஏனைய சேவை நிலையங்களுக்கு பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளிடம் இருந்து அறிக்கையிடப் பட்டுள்ள உயிர் பிழைத்துக் கொண்ட சம்பவங்கள் அல்லது எண்ணிக்கை | தேவையான வாறு மற்றும் தேவையான பட்சத்தில் சுகாதார மருத்துவ அலுவலரின் உதவியுடன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு<br><br>பெருந்தோட்ட மனித அபிவிருத்தி | 2018-2020 | 5.0 (நிதி வழங்கும் மூலம், மலைநாட் டுப் புதிய கிராமிய உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவி ருத்தி அமைச்சு, பெருந் தோட்டக் கைத்தொ ழில் |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2.2 தொழில் செய்யும்போது / சேவை நிலையத்தில் பால்நிலைசார் அடிப்படையில் அநீதியாக கவனிக்கப் படுவது இடம்பெறுவதில் லை என்பதை உறுதிப்படுத்தல் மற்றும் பால்நிலைசார் சமூக அந்தஸ்து தொடர்பான உணர்வு பூர்வமான சேவை நிலையங்களுக் கான சூழலை உருவாக்குதல் | 2.2 வன்முறையற்ற சேவைச்சூழலில் பெருந்தோட்டத்துறை ஊழியர்கள் பாதுகாப்பாக உள்ளனர் | ரீதியான உதவிகளை அறிமுகம் செய்தல் அல்லது வலுவூட்டல்<br><br>2.1.3. தோட்டத்துறையில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு உதவுவதற்கான பொறிமுறையை தாபித்தல்<br><br>2.1.4 வீட்டு நிதி முகாமைத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவது பற்றி விழிப்புணர்வூட்டுவதை வழிநடாத்தல்<br><br>2.2.1 பெருந்தோட்ட முகாமைத்துவம், சர்வதேச தொழில் ஸ்தாபனம் மற்றும் ஊழியர் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலூடாக பால்நிலைசார் அடிப்படையிலான நியாயத்தன்மை மற்றும் சம அந்தஸ்து பற்றிய ஆகக்குறைந்த நியமங்களை நிர்ணயித்தல்<br><br>2.2.2 தொழில்வாய்ப்பு நேர்முகப் பரீட்சை சபை குழுக்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருப்பதை உறுதிப்படுத்தல் | மேற்கொள்ளப்பட்ட வழிநடாத்தல்களின் எண்ணிக்கை<br><br>சட்டரீதியான உதவியைப் பெற்றுக்கொண்ட பெண்களின் எண்ணிக்கை<br><br>உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கான அரவணைப்பு இல்லங்களின் எண்ணிக்கை<br><br>பெண் ஊழியர்களுக்கு வெளிக்களத்தில் காணப்படுகின்ற ஓய்வு நிலையங்களின் எண்ணிக்கை<br><br>விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை<br><br>பெண் அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகப்பரீட்சைக்<br><br>குழுக்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>தொழில் வாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சைக் குழுக்களின் பட்டியல்கள் | நம்பிக்கைப் பொறுப்பு<br><br>சர்வதேச தொழில் ஸ்தாபனம்<br><br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br><br>மலையக புதிய கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு<br><br>உதவி வழங்குவோர்<br><br>சிவில் சமூக சங்கங்கள் / அரச சார்பற்ற அமைப்புக்கள்<br><br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br><br>சர்வதேச தொழில் ஸ்தாபனம்<br><br>பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு<br><br>அரச சார்பற்ற அமைப்புக்கள் / | 2018-2020 | அமைச்சு, உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி) |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2.2.3 சிறந்த நடவடிக்கை முறைகள் / முன்மாதிரிகளுக்கான பரிசு வழங்குவதன் மூலம் பெண்கள் உயர்மட்ட பதவிகளை வகிப்பதை மேம்படுத்தல்<br><br>2.2.4 சம்பளங்களை வங்கிக்கணக்குகளுக்கு மாற்றல் மற்றும் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் / பெண்களுக்கான வங்கி முறைகளை அறிமுகம் செய்தல் | ஆகக்குறைந்த தர நியமங்கள் பற்றிய ஆவணம்<br><br>உயர்மட்ட பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கை<br><br>ஊழியர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை | | சிவில் சமூக அமைப்புக்கள் | | |
| **கொள்கைசார் ஆலோசனை** | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்குரிய 3வது துறை:** சேவை நிலையத்தில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான பாலியல் ரீதியான பாரபட்சம் காட்டலை எவ்வகையிலும் பொறுத்துக் கொள்ளாமை | 3.1 பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான தேசிய கொள்கை வழிகாட்டலுடன் இசைந்து தோட்டத் துறையில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு தீர்வை வழங்குவதற்கான வழிகாட்டல்களை தயார்செய்தல் | 3.1 ஊழியர்களின் நலனுக்காக பெருந்தோட்டத் துறையில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கு தலையீடு செய்யும் கொள்கைசார் பதில் நடவடிக்கைகளை தாபித்தல் | 3.1.1 தெரிவுசெய்யப்பட்ட தோட்டங்களில் பாலியல் துன்புறுத்தல்களை ஒழிப்பது பற்றிய வழிகாட்டல்களை தயார்செய்து அமுல்படுத்தல்<br><br>3.1.2. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க பொறிமுறையை தாபித்தல்<br><br>3.1.3.பாலியல் மற்றும் பால்நிலைசார் | பாலியல் துன்புறுத்தலுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பது பற்றிய வழிகாட்டல்கள்<br><br>வழிகாட்டி தொகுப்பு அமுல்படுத்தப் பட்டுள்ள தோட்டங்களின் எண்ணிக்கை<br><br>பிரச்சினைகள் பற்றிய குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ள தோட்டங்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>குழுக் கூட்டங்களின் கூட்டக்குறிப்புகள்<br><br>கண்காணிப்பு அறிக்கைகள் | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு<br><br>பெருந்ரோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு<br><br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br><br>சர்வதேச தொழில் ஸ்தாபனம்<br><br>மலைநாட்டு புதிய கிராமிய உட்கட்டமைப்பு | 2016-17 | 5.0 (நிதி வழங்கும் மூலம், மலைநாட்டுப் புதிய கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு, பெருந் தோட்டக் கைத் தொழில் அமைச்சு, உலக சுகாதார |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களின் தனித்துவத்தையும் இரகசியத் தன்மையும் தீவிரமாக பாதுகாத்துப் பேணிவரல்<br><br>3.1.4 பெருந்தோட்டத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு மத்தியில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கொள்கை வழிகாட்டல்கள் பற்றி தொடர்ச்சியாக விழிப்புணர்வூட்டுவதை வழிநடாத்தல் | குழுக்களுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br><br>பிரச்சினைகள் சம்பந்தமாக செயற்படும் பொருட்டு தோட்ட முகாமைத்துவத்துக்கு பிரேரிக்கப்படுகின்ற பொறிமுறைகளின் எண்ணிக்கை<br><br>கொள்கைசார் வழிகாட்டல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தோட்டங்களின் எண்ணிக்கை | | வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு<br><br>உதவி வழங்குவோர்<br><br>சிவில் சமூக அமைப்புக்கள் / அரச சார்பற்ற அமைப்புக்கள்<br><br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | | அமைப்பு, உலக வங்கி) |

**உபதுறை:** வர்த்தகம் (கடைகள் மற்றும் அலுவலக சட்டம், கைத்தொழில்சாலை கட்டளைச் சட்டம் மற்றும் சம்பள நிர்ணய சபைகள், மகளிர் மற்றும் பெண்கள், இளைஞர்கள் பற்றிய சட்டம், தாய்மாருக்கான பயன்கள் கட்டளைச் சட்டமூலம் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்)

**உபதுறையை வழிநடாத்தும் அமைச்சு:** தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**உபதுறையின் தவிசாளர்:** செயலாளர், தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு

**வேறு அமைச்சுக்கள் / நிறுவனங்கள்:** முதலீட்டு சபை, கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் சங்கங்கள், உதவி வழங்குவோர், ஐக்கிய நாடுகள் அமைப்பு, சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள்

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தடுத்தல்** | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்குரிய 4வது துறை:** வர்த்தகத் துறையில் உள்ள நிறுவனங்களில் பாலியல் மற்றும் பால்நிலை சார் அடிப்படையிலான வன்முறையற்ற வேலைச்சூழல் | 4.1 சேவை நிலையங்களில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படை யிலான வன்முறையை தடுப்பதற்காக வேலை செய்யும் நிலைமைகள் / சூழலை மேம்படுத்துவதற் கான வசதிகளை செய்து கொடுத்தல் | 4.1 ஊழியர்கள் ஒழுக்கத்துடன் சேவையாற்றக்கூடிய நிலைமைகள், வசதிகள், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பான சூழலை அனுபவித்து வருதல் | 4.1.1 தொழில் சட்டங்களுக்கு அமைவாக வேலை செய்யும் மணித்தியாலங்களை நிர்ணயிக்கப்பட்டு உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கு இடையிலான ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாட்டை கட்டியெழுப்பல் | நிறுவனங்களுடனான கூட்டங்களின் எண்ணிக்கை<br>செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | வருடாந்த அறிக்கை<br>முன்னேற்ற அறிக்கைகள் | தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு<br>முதலீட்டு சபை | 2016-2017 | 100 |
| | | | 4.1.2 ஊழியர்களுக்காக நியம விடுதிகள் நியமத்தரங்களுடனான விடுதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்தல் | | மீளாய்வு அறிக்கைகள் | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 2016 - 2020 | |
| | 4.2 சேவை நிலையங்களில் பாலியல் துன்புறுத்தல்க ளுக்கு எதிரான கொள்கை ஒன்றை தயார்செய்து அமுல்படுத்தல் | 4.2 சேவை நிலையத்தில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு தீர்வு வழங்குவதற்கான கொள்கை மற்றும் வினைத்திறன்மிக்க பொறிமுறை காணப்படல் | 4.2.1 சேவை நிலையங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு தீர்வு வழங்குவதற்காக தற்போது காணப்படுகின்ற சிறந்த நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளை மீளாய்வு செய்தல் | மேம்படுத்தலுக்காக இனங்காணப்பட்ட இடைவெளிகள் மற்றும் வாய்ப்புக்களின் எண்ணிக்கை<br>கொள்கைசார் கலந்துரையா டல்களின் எண்ணிக்கை | | அபிவிருத்தி உபாயமுறை மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய அமைச்சு | 2016-2018 | |
| | | | 4.2.2 சேவை நிலையங்களில் பாலியல் துன்புறுத்தல்களை தடுத்தல் மற்றும் அதற்கு தீர்வு | சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை<br>பாலியல் துன்புறுத்தல்களுக்கு | | | 2016-2018 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வழங்குவது தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல் மற்றும் கொள்கையின் வரைவை தயார்செய்தல் | தீர்வு வழங்குவதற்காக இணங்கிய வழிகாட்டி<br>பரப்பட்ட கொள்கைசார் வழிகாட்டிகளின் எண்ணிக்கை | | | | |
| | | | 4.2.3 உத்தேச கொள்கை வழிகாட்டல்கள் பற்றி ஊழியர்களினதும் பொதுமக்களினதும் கருத்துக்களை கோரல் | ஊடக நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்டுள்ள ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை | கருத்துக்களைக் கோரல் பற்றிய அறிக்கைகள் | | 2016-2018 | |
| | | | 4.2.4 கொள்கைசார் வழிகாட்டிகளை தயார்செய்து முடித்த பின்னர் வினைத்திறன்மிக்கவாறு அமுல்படுத்தும் பொருட்டு ஆலோசனை நடவடிக்கைகளை பரவலாக மேற்கொள்ளல் | பாலியல் துன்புறுத்தல்களுக்கு தீர்வு வழங்குவது பற்றிய கொள்கை, வழிகாட்டிக் கண்காணிப்புக் குழு<br>குழுவில் உள்ள ஆட்களின் எண்ணிக்கை | கொள்கைசார் கலந்துரையாடல் அறிக்கைகள்<br>கூட்டக் குறிப்புகள் | | 2016-2018 | |
| | | | 4.2.5 பொதுமக்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக கொள்கைசார் வழிகாட்டல்கள் தொடர்பில் ஊடகங்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை<br>வருடாந்தம் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br>மேம்படுத்தல்களுக்கான பிரேரணைகளின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br>ஊடக நடவடிக்கை / நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள் | | 2016-2018 | |
| | | | 4.2.6 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தீர்த்துவைத்தல் மற்றும் கொள்கைசார் | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட | குழுக் கூட்டங்களின் கூட்டறிக்கைகள் | | 2016-2019 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வழிகாட்டிகளை அமுல்படுத்துவதை கண்காணிப்புச் செய்வதற்கு நிறுவனங்களில் குழுவொன்றை தாபித்தல் | (தீர்க்கப்பட்ட / தீக்கப்படாத) முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | | | |
| | 4.3 ஊழியர்களுக்கு மருத்துவம் மற்றும் உளசமூக உதவிகளை உறுதிப்படுத்தல் | 4.3 மருத்துவ அலகு / சுகாதார நிலையங்கள் நிறுவனங்கள் மூலம் ஆற்றப்படுகின்ற சேவைகளை ஊழியர்கள் பெற்றுக் கொள்வதுடன் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு விசேட நேரடி தொலைபேசி பயன்படுத்தப்படுகின்றது. | 4.3.1 முன்னோடி முன்னெடுப்பாக சுகாதார மருத்துவ அலுவலர்களின் உதவியுடன் கட்டுநாயக்க ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் வலயத்தில் உள்ள சுகாதார நிலையத்தில் மித்துரு பியசவை தாபித்தல்<br><br>4.3.2 முதலீட்டு சபையின் உதவியுடன் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் வலயம் மற்றும் கைத்தொழில் பேட்டையில் சேவையாற்றுகின்ற மருத்துவ மற்றும் ஆலோசனை பதவியணிகளது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்க வேண்டிய முறை சம்பந்தமான ஆற்றல்களை வளர்ப்பதும் திறன்களை மேம்படுத்துவதும். | தாபிக்கப்பட்ட மித்துரு பியச நிலையங்களின் எண்ணிக்கை<br><br>மித்துரு பியசவிற்கு வருகைதருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை<br><br>மித்துரு பியசவினால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பித்தல்களின் எண்ணிக்கை<br><br>மதித்துரு பியசவில் சேவை பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை<br><br>செயலமர்வுகள் / பயிற்சிகளின் எண்ணிக்கை<br><br>திறன்விருத்தி செய்யப்பட்ட மருத்துவ மற்றும் | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>பயிற்றுவித்தல்களின் அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள் | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு<br><br>சுகாதார அமைச்சு<br><br>முதலீட்டு சபை<br><br>தொழில் மற்றும் தொழிற்சங்க | 2016-2019<br><br>2016-2019 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4.3.3 தொழில் கணக்காய்வு / பரிசோதனைகளின்போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான நிவாரண தகவுதிறன்கள் மற்றும் தரப்படுத்தல்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் முதலீட்டு சபை தொழில்நுட்ப உறவு அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய பதவியணியினரின் ஆற்றல்களை வளர்த்தல்<br><br>4.3.4 ஊழியர்களின் சம்பவங்களை அறிக்கையிடுவதற்கு விசேட நேரடி தொலைபேசி சேவையை தாபித்தல் மற்றும் அதனை சுகாதார நிலையம், ஆலோசனை பதவியணியினருடன் தொடர்புபடுத்தல்<br><br>4.3.5 பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்தின் மற்றும் சகல | ஆலோசனைப் பதவியணியினனரின் எண்ணிக்கை<br><br>பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்கான கணக்காய்வுகளில் ஒன்றிணைக்கப்பட்ட தரநியமங்கள் / தகவுதிறன்களின் எண்ணிக்கை<br><br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>பயிற்சிபெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை<br><br>துரித இலக்கம்<br><br>விசேட நேரடி தொலைபேசி சேவையை பெற்றுக்கொள்ளும் ஊழியர்களின் எண்ணிக்கை<br><br>பதவியணியினருடன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | செயலமர்வுகளின் அறிக்கைகள் | உறவுகள் அமைச்சு<br><br>முதலீட்டு சபை<br><br>தொழிற் சங்கங்கள்<br><br>ஊழியர் சபைகள்<br><br>தொழிற் சங்கங்கள் ஊழியர் பேரவைகள்<br><br>ஐக்கிய நாடுகள் அமைப்பு<br><br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / சிவில் சமூக அமைப்புக்கள் | 2016-2019<br><br>2016 - 2019<br><br>2016 - 2020 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4.4 பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிராக செயற்படுவதற்கு ஊழியர்களை வலுவூட்டல் மற்றும் கலந்துரையாடல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறையை நிராகிப்பதற்கான ஆற்றல்களை பெற்றுக்கொடுத்தல் | 4.4 பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிராக செயற்படுதல் மற்றும் அதனை தடுப்பதற்காக ஊழியர்கள் பயிற்றப்பட்டு அறிவுறுத்தப் பட்டுள்ளனர் | மட்டங்களினதும் பதவியணியினரின் ஆற்றல்களை வளர்த்தல் | அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற ஊழியர் முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கை | அறிவுறுத்தல் நிகழ்ச்சிட்டங்களின் அறிக்கைகள் | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு<br>முதலீட்டுச் சபை<br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br>ஊடக நிறுவனங்கள்<br>சிவில் சமூக அமைப்புக்கள் | | |
| | | | 4.4.1 தொழிற்சங்கங்கள் / ஊழியர் பேரவைகள் மற்றும் ஏனைய ஊழியர் முகவர் நிறுவனங்களூடாக ஊழியர்களுக்கு மத்தியில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய பரந்தளவில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் | அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை<br>அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>கலந்துரையாடல் களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள் | | 2016 - 2020 | |
| | | | 4.4.2 ஊழியர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு பிரபல ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை மற்றும் அதனை தடுப்பது பற்றிய கலந்துரையாடல்கள் / சந்தர்ப்பங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான புத்தாக்க முறைகளை முன்னெடுத்தல் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை<br>வெளியிடப்பட்ட எழுத்தாக்கங்களின் எண்ணிக்கை<br>ஊடக நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | | 2016 - 2020 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **உபதுறை:** வீட்டு வேலைவாய்ப்பு<br>**உபதுறையை வழிநடாத்தும் அமைச்சு:** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு<br>**உபதுறையின் தவிசாளர்:** செயலாளர், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு<br>**வேறு அமைச்சுக்கள் / நிறுவனங்கள்:** தொழில் சங்கங்கள், உதவி வழங்குவோர், ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், சமுதாய சிவில் சமூக அமைப்புக்கள் | | | | | | | | |
| **கொள்கைசார் ஆலோசனை** | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்குரிய 5வது துறை:** வீட்டு வேலையாளர்களின் / உபசரணை ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பை உறுதிப்படுத்தல் | 5.1 வீட்டுப் பணியாளர்கள் / உபசரணை ஊழியர்களின் சமூக பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்துவது பற்றிய கொள்கைகளை தயார் செய்வதற்கான ஆலோசனை | 5.1 – 5.2 வீட்டுப்பணியாளர் / உபசரணை ஊழியர்களுக்கு மிகவும் சிறந்த சேவை நிலைமைகள் மற்றும் வாழ்வதற்கான வேலைகளைச் செய்யும் பொருட்டு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையற்ற சூழலை அவர்கள் அனுபவித்து வரல் | 5.1.1 வீட்டுப் பணியாளர் சேவை மற்றும் உபசரணை சேவை தொடர்பில் தற்போது காணப்படுகின்ற கொள்கைகள் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பை மீளாய்வு செய்து அவற்றை மேம்படுத்தல்<br><br>5.1.2 வீட்டுப்பணியாளர்கள் / உபசரணை ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் சேவைகள் / வாழ்க்கைத்தரம் பற்றிய கொள்கைசார் ஆலோசனை<br><br>5.1.3 வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்பு, அபாயத்திற்கு ஆளாகும் வாய்ப்பு மற்றும் பொருளாதார பங்களிப்பு சம்பந்தமாக | மீளாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை<br><br>மேம்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட இடைவெளிகள் / வாய்ப்புகளின் எண்ணிக்கை<br><br>கொள்கைசார் ஆலோசனை வாய்ப்புக்களின் எண்ணிக்கை<br><br>சம்பந்தப்படுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை<br><br>அறிமுகம் செய்யப்பட்ட மேம்படுத்தல்களின் எண்ணிக்கை<br><br>ஊடகத்திட்டங்களின் எண்ணிக்கை<br><br>பதிவுசெய்யப்பட்ட வீட்டுப் | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>திட்டம் பற்றிய அறிக்கைகள் | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br><br>தொழிற் சங்கங்கள்<br><br>ஐக்கிய நாடுகள் / சிவில் சமூக அமைப்புக்கள்<br><br>ஊடக நிறுவனங்கள் / உற்பத்தி நிறுவனங்கள்<br><br>கிராம சேவகர் | 2016-2020 | 10.0 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஊடகத்திட்டம் ஒன்றை வழிநடாத்தல் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள் | தொழிற் சங்கங்கள் | | |
| | | | 5.1.4 வீட்டுப் பணியாளர்களை பதிவுசெய்யும் முறையொன்றை தாபித்தல் | தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கின்ற வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை | | | | |
| | | | 5.1.5 வீட்டுப் பணியாளர்களுக்கான தொழிற்சங்கம் ஒன்றுக்கான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஊக்கம் கொண்டவர்களுக்கு வீட்டு பணியாளர்களின் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல் | வீட்டுப் பணியாளர்களது தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை / நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | வீட்டுப் பணியாளர்களின் பட்டியல்<br>கூட்டக் குறிப்புகள்<br>அறிக்கைகள் | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | | |
| | 5.2 வீட்டுப் பணியாளர் மற்றும் உபசரணை ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், தங்குமிட சேவை நிலையங்களை பெற்றுக்கொடுத் தல், நட்டஈடு, சமூகப் பாதுகாப்பு தொடர்பான தர நியமங்களை உறுதிப்படுத்தல் | | 5.2.1 வீட்டுப் பணியாளர்கள் / உபசரணை ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் சேவை நிலையங்களை வழங்குதல், கொடுப்பனவு, பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு பற்றிய தர நியமங்கள் / நியதிகளை தயார் செய்வதற்காக தொழில் அமைச்சுடன் ஆலோசனை மேற்கொள்ளல் | நியதிகள் / தர நியமங்களை தயார்செய்வது பற்றிய ஆலோசனை சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை<br>நியதிகள் மற்றும் தர நியமங்களின் எண்ணிக்கை<br>நியமங்களைப் பதிலீடு செய்து கொள்ளும் மனிதவலு முகவர் நிறுவனங்கள் / ஆட்சேர்ப்பு செய்யும் முகவர் | ஆலோசனை சந்தர்ப்பங்களின் முன்னேற்ற அறிக்கைகள்<br>அமைச்சின் வருடாந்த அறிக்கைகள் | மனிதவலு முகவர் நிறுவனங்கள்<br>ஆட்சேர்ப்பு செய்யும் முகவர் நிறுவனங்கள் | 2016-2020 | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5.2.2 நியமங்கள் / தர நியமங்களுக்கு அமைவாக செயற்படுவது தொடர்பில் மனிதவலு முகவராண்மை நிறுவனங்கள், ஆட்சேர்ப்புச் செய்யும் முகவர் நிறுவனங்களுடனான ஆலோசனை<br>5.2.3 வீட்டுப் பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலை முன்னெடுத்தல் | நிறுவனங்களின் எண்ணிக்கை<br>கொள்கைசார் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை<br>சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான பிரேரணைகளின் எண்ணிக்கை | கொள்கைசார் கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கைகள் | | | |

**உபதுறை:** சுயதொழில் வாய்ப்பு

**உபதுறையை வழிநடாத்தும் முகவர் நிறுவனம்:** திவிநகும அபிவிருத்தி திணைக்களம் (வாழ்வெழுச்சி அபிவிருத்தி திணைக்களம்)

**உபதுறையின் தவிசாளர்:** தவிநகும அபிவிருத்தி திணைக்களத்தின் தலைவர்

**ஏனைய அமைச்சுக்கள் / நிறுவனங்கள்:** சமுர்த்தி அதிகாரசபை, வங்கிகள், மகளிர் வர்த்தக சபை, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, உதவி வழங்குவோர், ஐக்கிய நாடுகள் அமைப்பு, சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள்

தலையீடு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கவனக் குவிப்புக்குரிய 6வது துறை:<br>பெண்களுக்கு நட்புறவான கடன் திட்டங்களை மேம்படுத்தல் | 6.1 சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு மற்றும் நிதி திட்டங் களுக்கான அணுகு முறைகளை மேம்படுத்தல் | 6.1 தமது சுயதொழில் வாய்ப்புக்களின் முன்னெடுப்புக்காக பெண்கள் நுண்கடன் மற்றும் நிதி உதவிகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கான | 6.1.1. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்கள் தொடர்பில் விசேட கவனத்தைக் கொண்டவாறு பெண்களுக்கு | கடன் பெறுவதற்கு அணுகும் உயிர்பிழைத்துக் கொண்ட பெண்களின் எண்ணிக்கை<br>வழங்கப்பட்ட நுண்கடன்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,<br>மகளிர் பணியகம், சமுர்த்தி | 2016-2020 | 400 |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வாய்ப்பை அனுபவிக்கின்றனர் | நுண்கடன் மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வசதி செய்வதற்காக மகளிர் சங்கங்களூடாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஒருங்கிணைப்பு | மகளிர் சங்கங்களின் அங்கத்தவர்களது எண்ணிக்கை<br><br>கடன் திட்டங்களுக்கான தகவுதிறன்கள் | மகளிர் சங்கங்களின் எண்ணிக்கை | அதிகாரசபை / திவிநெகும அபிவிருத்தி திணைக்களம், | | |
| | | | 6.1.2 சமுர்த்தி / திவிநெகும உதவி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உள்வாங்கும்போது பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகளில் இருந்து உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் | கடனுக்குப் பிரவேசித்துள்ள தொழில் முயற்சியாளர்களான பெண்களின் எண்ணிக்கை | பெண்கள் கடன் பெறுவதற்கான பிரவேசம் பற்றிய தரவுகள் | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | | |
| | | | 6.1.3 மகளிர் வர்த்தக சபை மற்றும் நிறுவனத்துறையின் பங்களிப்புடன் தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களுக்கு சந்தைக்கான பிரவேசத்தை மேம்படுத்தல் | வங்கிகள் / நிதி நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் எண்ணிக்கை<br><br>உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு உள்ள கடன் திட்டங்களின் எண்ணிக்கை | சமுர்த்தி பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் | மத்திய வங்கி<br><br>மகளிர் வர்த்தக சபை | | |
| | | | 6.1.4 பெண்கள் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கான புத்தாக்க நுண்நிதி மற்றும் கடன் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு மற்றும் | தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>பெண்களுக்கு மாத்திரமானதாக | | நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள்<br><br>கிராமிய வங்கி, | | |

| கவனக்குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அமுல்படுத்துவதற்கு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடனான ஆலோசனை சேவைகள் | உள்ள கடன் திட்டங்களின் எண்ணிக்கை | | கூட்டுறவு | | |

# துறை: கல்வி

## பின்னணி – கல்வித்துறை

அரசியல் அமைப்பு மற்றும் வயது 6-16 வரையான கட்டாயக்கல்வியை பெற்றுக்கொடுக்கும் அரசாங்கத்தின் பொறுப்பை குறித்துரைக்கின்ற சிறுவர் சமவாயத்தின் மூலம் ஆரம்ப மட்டம் முதல் 3ஆம் மட்டம் வரையான பாரபட்சம் காட்டலின்றி அரசாங்க நிதி உருவாக்கத்துடன் கல்வி கல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ள 3 அமைச்சுக்கள் அதாவது கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு மற்றும் திறன்விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு ஆகியவற்றின் மூலம் கல்விப்பிரிவு கண்காணிப்புச் செய்யப்படுகின்றது. ஆரம்ப மற்றும் கனிஷ்ட 2ஆம் நிலைப் பாடசாலைகள் (1-9 தரங்கள்) கட்டாயக் கல்வி கட்டங்களை உள்ளடக்கியிருப்பதுடன் 10-13 தரங்கள் வரையான சிரேஷ்ட 2ஆம் நிலைக் கல்வி மூலம் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து 3ஆம் நிலைக் கல்வி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் பட்டம்பெற எதிர்பார்த்துள்ள மற்றும் பட்டப்பின் படிப்புக் கல்வியை வழங்குககின்ற பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்படுகின்றன. தரம் 9 முதல் மேல்நோக்கி மாணவர்களுக்கு தொழிற்கல்வியில் பிரவேசிப்பதற்கு உள்ள ஆற்றல் காணப்படுவதுடன் இதன்மூலம் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற உயர்தொழில்நுட்ப கல்வியை நோக்கி[46] அவர்களை கொண்டுசெல்லும் ஆற்றல் உள்ளது.

96%மான பாடசாலைகள் கலப்புக் கல்வியாக உள்ள அரசாங்க கல்வி கட்டமைப்பின் ஊடாக இலவசக் கல்வி "பாலியல் ரீதியான பாரபட்சங்களின்றி" என அரசியலமைப்பின் (1978) ஏற்பாடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்ற பால்நிலைசார் சமூக அடிப்படையிலான சம அந்தஸ்து மற்றும் பெண்களை வலுவூட்டுவதை நோக்கிய முன்னேற்றத்திற்காக பிரதான காரணியாக மாறியுள்ளது. சகல சமூக பொருளாதார மட்டங்களிலும் பெண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு கல்விக்கான அணுகுமுறைகள் உள்ளன. 2014ஆம் ஆண்டுக்காக ஆரம்பக் கல்வியில் பெண்களை அனுமதிக்கும் தேசிய விகிதம் 100%மாக இருந்தது[47]

கல்வித்துறையில் இலங்கை உயர்மட்டத்தில் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்தை அனுபவிக்கின்றது (அட்டவணை 1) பால்நிலைசார் சமூக அந்தஸ்துடனான சுட்டி என்பது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கல்விக்கு ஒப்பீட்டு ரீதியான அணுகுமுறையை அளவிடுவதற்காக பொதுவாகத் திட்டமிடப்பட்டுள்ள சமூக பொருளாதார சுட்டிகளாகும் என்பதுடன் இலங்கையில் இது சகல துறைகளிலும் பெண்கள் தொடர்பில் சற்று

[46] Education Sector Development Framework and Programme (ESDFP) Ministry of Education, 2006.http://planipolis.iiep.unesco.org/upload/Sri%20Lanka/Sri_Lanka_ESDFP_policy.pdf

[47] Gross Intake Rate, Education Policy and Data Center http://www.epdc.org/country/srilanka/search?indicators=556-557&subnational=0&gender=11&year_from=2014&year_to=2015

உயர்பெறுமானத்தைக் கொண்டதாக காணப்படுகின்றது. கல்விக் கட்டமைப்பில் சகல கட்டங்களிலும் மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து பற்றிய சம அந்தஸ்து வெளிப்படுத்தப்படுவதுடன் உண்மையில் 2ஆம் நிலை மட்டத்தில் உள்ள மாணவர்களில் அதிக எண்ணிக்கையானோர் பெண்களாக உள்ளனர். கல்விச்சுற்றினைப் பூர்த்திசெய்து பரிட்சைகளில் தேர்ச்சியடைகின்ற பெண்களின் எண்ணிக்கை அவர்களின் எதிர்தரப்பினரான ஆண்களைவிட உயர் பெறுமானத்தைக் கொண்டுள்ளது.

***அட்டவணை 3 கல்வியில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து சம்பந்தமான சுட்டி – 2014***

| | | |
|---|---|---|
| அரம்பக்கல்விக்கான தேறிய அனுமதித்தல் விகிதம் | | 1.01 |
| இரண்டாம் நிலைக் கல்விக்கான தேறிய அனுமதித்தல் விகிதம் | | 1.04 |
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தாபிக்கப்பட்டதன் ஊடாக பெண்களை வலுவூட்டல் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைக்கு ஈடுவழங்குவதற்கு பல்வேறு துறைகளை உள்ளடக்கிய அரச கட்டமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கௌரவமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக சகல தரப்பினர்களும் உபாயமுறையிலான கூட்டிணைவின் மூலம் சமூக பொருளாதார நிலைமைகளை வலுவூட்டல், பெறுமானங்களை உள்ளத்தில் ஏற்படுத்தல் மற்றும் பங்கேற்பை உறுதிசெய்வதன் மூலம் சிறுவர்கள், பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக நல்லாட்சி நடைமுறைகளுக்கு அமைவான ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகளை தயார்செய்தல், அமுல்படுத்தல், ஒழுங்குபடுத்தும் பொறுப்பு மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.[54] இலங்கை மகளிர் பணியகம், தேசிய மகளிர் குழு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் செயலகம், ஆகியன மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களாக உள்ளன.[55] மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் உள்ள நிறுவன வலையமைப்பு மத்திய நிர்வாகம் முதல் சமுதாய மட்டம் வரை பரந்து செல்வதுடன் மாகாண நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் இவை இயங்கி வருகின்றன. அமைச்சில் மிக முக்கியமாக கவனம் செலுத்தப்படுவது மாவட்ட / பிரதேச மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகுகள் தொடர்பிலாகும்.

பெண்களின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்படுகின்ற பல்வேறு துறைகளில் இலங்கை முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது. 100 ஆண்களுக்கு 106 பெண்கள் வகையில் பால்நிலைசார் அடிப்படையிலான விகிதம் பெண்களுக்கு சாதகமானதாக காணப்படுகின்றது. ஆண்களின் ஆயுட்காலமான 72.4 வருடங்களுடன் ஒப்பிடுகையில் பெண்களின் ஆயுட்காலம் 79.6ஆக உள்ளது. பத்து வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு விகிதத்தில் ஆண்களில் 96.9% உடன் ஒப்பிடுகையில் பெண்கள் 94.6%ஐ அடையப்பெற்றுள்ளதுடன் கிராமிய பெண்கள் 94.8% தினை அடைந்துள்ளனர். இங்கு உள்ள ஒரே வித்தியாசம் ஆண்களின் 91.8%மான எழுத்தறிவு விகிதத்துடன் ஒப்பிடுகையில் 80.9%மான எழுத்தறிவை தோட்டத்துறையில் உள்ள பெண்கள் பெற்றுள்ளமையாகும்.[56]

---

[54] Ministry of Women and Child Affairs, website http://www.childwomenmin.gov.lk/English
[55] Ministry of Women and Child Affairs, website http://www.childwomenmin.gov.lk/English
[56] Department of Census and Statistics and Ministry of Women, 2014. The Sri Lankan Woman: Partner in Progress, Department of Census and Statistics and Ministry of Women's Affairs.

ஏனைய தெற்காசிய நாடுகளின் பெண்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் உள்ள பெண்கள் ஒப்பீட்டு ரீதியாக வெற்றிகரமான நிலைமையை அடைந்துள்ள போதிலும் அவர்கள் இன்னும் பால்நிலைசார் அடிப்படையிலான சமூக அந்தஸ்து அல்லது சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக பூரணமாக வலுவூட்டலை அடைந்து கொள்ளவில்லை.[57] 2014 மனித அபிவிருத்தி அறிக்கை, பால்நிலைசார் அடிப்படையிலான சமமின்மைச் சுட்டி 0.383 உடன் 75வது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுட்டியானது 3 கோணங்களில் அதாவது இனப்பெருக்க சுகாதாரம், வலுவூட்டல் (அரசியல் பங்கேற்பு மற்றும் கல்வி) மற்றும் ஊழியச் சந்தை ஆகிய பங்கேற்புக்கு அமைய ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான சமமின்மையை அளவிடுகின்றது. 0.383 ஆன பால்நிலைசார் அடிப்படையிலான சமமின்மைச் சுட்டி, இலங்கையில் இந்த மூன்று கோணங்களிலும் சமமின்மையானது கீழ்மட்டத்தில் காணப்படுவதை வெளிப்படுத்துவதுடன் இது 75வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளமையானது ஏனைய நாடுகள் 74ஐ விட இலங்கையின் நிலைமை நல்லதாக உள்ளது என்பதற்கு சாட்சி பகிர்கின்றது. நாட்டில் உள்ள பெண்களில் குறைவான அரசியல் ஈடுபாடு இல்லை எனில் இந்த நிலைமை மென்மேலும் சிறந்ததாக இருந்திருக்க முடியும். 1960ஆம் ஆண்டில் உலகில் முதலாவது பெண் பிரதமர் இலங்கையில் உருவானபோதிலும 1994-2004ஆம் ஆண்டு வரை தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பெண் ஒருவர் நாட்டின் ஜனாதிபதி பதவியை வகித்த போதிலும் 2004இல் மற்றும் 2010இல் பாராளுமன்றத்திற்கான பெண்களின் பிரதிநிதித்துவ விகிதம் 5.8%மாக இருந்ததுடன் இது இன்றுவரை 6%ஐ விட குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும் மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 4.1%மாக மாத்திரமாக உள்ளதுடன் பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி மன்றங்களில் இந்த பிரதிநிதித்துவம் 2.03% மாத்திரமாகும்.


தேசிய மட்டத்திலான பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையின் தரவுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனினும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை இலங்கையில் வியாபித்துள்ளது என்பதற்கான பெரும்பாலான ஆவணங்கள் காணப்படுகின்றன.[58] தற்போது காணப்படுகின்ற ஆய்வுகளில் பெரும்பாலான மாதிரிகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது பல்வேறு இடங்களில் பல்வேறு உபதொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டவையாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான ஆய்வுகளில் இருந்து சேகரித்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள் இலங்கையின் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையின் அளவு ஏனைய தோற்றப்பாடுகள் பற்றிய முக்கிய அம்சங்களை பெற்றுத்தருவதென கருதுவது நியாயமானதாகும். இந்த ஆய்வுகளில் வியாபித்துள்ள விகிதம் கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் 18% முதல் தோட்டப்புற சனத்தொகையில் 83% வரையான மட்டங்களில் காணப்படுகின்றது.[59] பொலிசாரினால் வெளியிடப்பட்ட கடும் குற்றச் செயல்களின் பொழிப்பு 2014ஆம் ஆண்டில் இடம்பெற்ற

[57]Asian Development Bank, 2015. Country Gender Assessment Sri Lanka: An Update, Deutsche and Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) GmbH.Publication.
[58]Ministry of Health Sri Lanka, National Report on Violence and Health, 2008. Ministry of Health Sri Lanka and WHO.
[59] UNFPA, Fact Sheet Gender-based Violence (GBV). Prevalence of Gender-based Violence in Sri Lanka, http://countryoffice.unfpa.org/srilanka/drive/FactSheetsGBV.pdf

வன்புணர்வு சம்பவங்கள் 2008ஐ அறிக்கையிட்டுள்ளது[60] பொலிஸ் மற்றும் ஏனைய சேவை வழங்குனர்களினால் பேணிவரப்படுகின்ற அறிக்கைகளை அவதானமாக வாசிக்கும்போது தெரியவருவது, வீட்டு வன்முறை, வன்புணர்ச்சி, பாலியல் துன்புறுத்தல், விபச்சாரம் மற்றும் பலாத்காரமாக விபச்சார தொழிலில் ஈடுபடுத்துவது, பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையில் அதிகம் காணப்படக்கூடிய முறைகளாகும். சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதை தடுப்பதற்கான பொலிஸ் பணியகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ள கடுமையான மற்றும் சிறியளவிலான குற்றச் செயல்கள் பற்றிய பொதுவான பகுப்பாய்வு கீழே அட்டவணை வரைபில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4: பொலிஸ் தரவு 2012-2015 சிறிய மற்றும் கடும் குற்றச் செயல்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் (அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்கள்)**

| வருடம் | பெண்கள் மீது இழைக்கப் பட்ட சிறிய குற்றச் செயல்கள் | பெண்கள் மீது இழைக்கப் பட்ட கடும் குற்றச் செயல்கள் | சிறுவர்கள் மீது மேற்கொள் ளப்பட்ட சிறிய குற்றச் செயல்கள் | சிறுவர்கள் மீது மேற்கொள் ளப்பட்ட கடும் குற்றச் செயல்கள் |
|---|---|---|---|---|
| **மொத்தம் 2012** | 6,659 | 1,107 | 2,266 | 3,804 |
| **மொத்தம் 2013** | 7,530 | 864 | 2,161 | 3,675 |
| **மொத்தம் 2014** | 7,807 | 905 | 2,285 | 3,477 |




[60] Sri Lanka Police, Grave Crime Abstract, 2014. http://www.police.lk/images/others/crime_trends/2014/grave_crime_abstract_for_the_2014.pdf.

| | | | | |
|---|---|---|---|---|
| **Total 2015** | 7,907 | 879 | 2,522 | 3,540 |
| சிறிய குற்றச் செயல்களில் உள்ளடங்கும் குற்றங்கள்: பாலியல் துன்புறுத்தல் / தாக்குதல் மேற்கொள்ளல் / காயமேற்படுத்தல் / ஏசுதல் / அச்சுறுத்தல் / பயமுறுத்தல் / வீட்டு வன்முறை மற்றும் ஏனைய தவறுகள் | | | | |
| கடும் குற்றச் செயல்களுக்கு உரித்தான குற்றங்கள்: படுகொலை, கடும் காயங்களை ஏற்படுத்தல், ஆட்களைக் கடத்திச் செல்லல், வன்புணர்ச்சி, விபச்சாரம், விபச்சாரத்திற்கு முயற்சித்தல், கடும் பாலியல் துஷ்பிரயோகம் | | | | |

மூலம்: சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான பொலிஸ் பணியகம்

கௌரவத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் கொலைகள், வரதட்சனைககான கொலைகள் இலங்கையில் ஒருபோதும் அறிக்கையிடப்படவில்லை என்பதுடன் கன்னித்தன்மையை பரிசீலித்தல் போன்ற சம்பிரதாயபூர்வமான பாதகமான பாரம்பரியங்கள் இன்றும் ஒருசில குடும்பங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டின் சமூக கலாசார நியமங்கள் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பிலான விளைவுகளை அடைந்து கொள்ளாது இருக்கும் போது மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டு துறைகளிலும் வன்முறையை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் பால்நிலைசார் அடிப்படையிலான சம அந்தஸ்து மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. 1978இன் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான பாரபட்சம் காட்டாதிருப்பதை (12ஆம் உறுப்புரை) மற்றும் (2ஆம் உறுப்புரை) உறுதிப்படுத்துவதுடன் நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல் அல்லது கடன் பெற்றுக்கொள்வது தொடர்பாக பெண்களுக்கு எந்தவிதமான சட்டரீதியான தடைகளும் இல்லை.

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல் மற்றும் பெண்களை வலுவூட்டுவது சம்பந்தமான முக்கிய சர்வதேச சமவாயங்கள் பலவற்றை இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிக்கும் ஐக்கிய நாடுகளின் சமவாயம் 1981இல் ஏற்று அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் மாற்று மூலாவணம் (2002இன் அநுபந்தம்) நிரந்தர அடிப்படையில் கண்காணிப்புக் குழுக்களுக்கு அறிக்கையிட்டுள்ளது. முக்கிய பெறுபேறுகளில் ஒன்றான 1993இன் கொள்கை ஆவணம் அதாவது இலங்கை மகளிர் பிரகடனம் அரசாங்கத்தினால்

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையாகும். பெண்களுக்கு எதிரான வன்முறையானது கவனம் செலுத்த வேண்டிய முக்கிய துறையொன்றாக இலங்கை மகளிர் சமவாயத்தினால் இனங்காணப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் பொறிமுறையில் கட்டமைப்புசார் மறுசீரமைப்புகளை மேம்படுத்தல், உதவிச்சேவைகளை ஆற்றுவதற்காக சிவில் சமூக அமைப்புக்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் பெண்களுக்கு எதிரான பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினைத் தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி விபரிக்கப்படுகின்றது. இந்த சமவாயத்தை அமுல்படுத்துவதற்காக தேசிய மகளிர் குழு தாபிக்கப்பட்டது. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்காக அவர்களை வழிநடாத்துகின்ற மற்றும் உதவிச் சேவைகளுக்கு வசதிகளை செய்துகொடுப்பதற்காக மகளிர் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்ட முறைப்பாட்டு நிலையமொன்றை தாபித்தல் மற்றும் பெண்களுக்கான தேசிய செயற்றிட்டத்தை (2007-2012) தயார்செய்தமை போன்றன இந்தக் குழுவினால் நிறைவேற்றப்பட்டன.

வீட்டு வன்முறையை தடுக்கும் சட்டம் சிவில் பரிகாரமொன்றாக 2008ஆம் ஆண்டில் தத்துவமுள்ளதாக்கப்பட்டதுடன் அதனை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டமும் தயார்செய்யப்பட்டது. நீதிமன்றத்தையும் பொலிஸாரையும் உணர்வுபூர்வமாக்கும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் வழிநடாத்தப்பட்டன. எவ்வாறாயினும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெண்கள் இன்னும் இந்த சட்டத்தில் இருந்து பூரண பயன்களைப் பெறுவதில்லை என்பதுடன் அய்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பது மேம்படுத்துவதற்கான மேலும் பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்பதாகும்.[61] அத்துடன் இந்த சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கணிசமான தாமதம் இடம்பெறுவது தொடர்பில் கவலையும் வெளியிடப்பட்டுள்ளது. பொலிஸ் மத்தியஸ்தத்தின் ஊடாக பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பெண்களைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை அடக்குவதற்கும் அப்பால் குடும்ப உறவுகளை பேணிவருவதற்கு முன்னுரிமை வழங்குவதும் தெரியவந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறை மனித உரிமை சிக்கலொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அதற்கான பிரவேசமும் உருவாகியுள்ளது. பெண்கள் பற்றிய தொனிப்பொருளைக் கொண்ட மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுக்கு தேசிய செயற்றிட்டம் ஒன்றை தயார்செய்வது பெண்களுக்கு எதிரான அநீதியை இழைப்பதை ஒழிப்பதற்காக குழுவினால் பாராட்டுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு அவ்வாறான நடவடிக்கையாக உள்ளது.[62]

---

[61] Wijethilaka, D.,2009. Cases filed under the Prevention of Domestic Violence Act No.34 of 2005: An Analysis. Women in Need.
[62] Concluding observations of the Committee on the Elimination of Discrimination against Women,48th Session 2011
http://www2.ohchr.org/english/bodies/cedaw/docs/co/CEDAW-C-LKA-CO-7.pdf

இந்த திட்டத்திற்கான பின்னாய்வாக சேவை நிலையங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு தீர்வு வழங்குவதற்காக மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சு பல்வேறு அமைச்சுக்களில் குழுக்களை தாபிப்பதற்கு இலகுபடுத்தியுள்ளது.

விபச்சாரம், பாலியல் துஷ்பிரயோகம், துன்புறுத்தல் மற்றும் பெண்கள் ஆட்கடத்தல் போன்றன தண்டணைச்சட்டக் கோவையின் ஏற்பாடுகள் மூலம் குற்றச் செயல்களாக மாற்றியமைக்கப்பட்டு நாட்டின் சட்டக் கட்டமைப்பு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குகின்றது. விவாகத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லையை 18ஆக மாற்றியமைத்து பாலியல் நடவடிக்கைகளுக்காக விருப்பம் தெரிவிக்கும் வயது 16ஆக ஆக்கப்பட்டுள்ளதுடன் 16வயதுக்கு குறைவான பெண் பிள்ளைகளுடன் பாலியல் ரீதியாக உறவு கொள்வது நியாயாதிக்க அடிப்படையிலான வன்புணர்ச்சியாக மாற்றப்பட்டு[63] தண்டனைச் சட்டக்கோவை திருத்தியமைக்கப்பட்டது.

சிறுவயது விவாகம் மற்றும் கட்டிளம்பருவத்திற்கு வழிவகுத்து விசேடமாக விவாகம் செய்யும் வயது தொடர்பில் சில தமிழ், முஸ்லிம், மலையக சிங்கள[64] போன்ற தனிப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ள சமமின்மைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது கலாசார ரீதியான உணர்வுபூர்வமான தன்மையினால் தடுக்கப்பட்டுள்ளது. அலைந்து திரியும் கட்டளைச் சட்டத்திற்காக உத்தேச திருத்தங்கள் இதுவரை தத்துவமாக்கப்படவில்லை. இந்த சிக்கல்களுக்கு தீர்வு வழங்குவதற்கு அர்த்தபூர்வமான மற்றும் பாரியளவிலான பெறுபேறுகளை கொண்டு தருகின்ற சிபாரிசுகள் பல மேற்கொள்ளப்பட்டு பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பதற்கான எதிர்க்கட்சித் தலைவரின் ஆணைக்குழுவின் அறிக்கை 2015ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்த அறிக்கையில் உள்ள உத்தேச சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றை தயார்செய்யும் பொருட்டு பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பிலான செயலணி ஒன்று நியமனம் செய்யப்பட்டது. 2010 ஏப்ரல் மாதம் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக செயற்படுகின்ற செயலணி பிரதம அமைச்சரிடம் திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

**பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல்**

அமைச்சின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட நோக்கம் ஒன்றாக இது தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது. பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்து போராடுவதற்கு கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார்செய்து அமுல்படுத்துவது,

[63]Report of the Leader of the Opposition's Commission on Prevention of Violence against Women and the Girl Child, 2014. quoting data from Police. http://www.police.lk/images/others/crime_trends/2013/grave_crime_abstract_2013.pdf

[64] National Committee on Women, 2015. 1938 Helpline Data 2015 & 2014.

கண்காணிப்புச் செய்வது மற்றும் அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், ஊடகங்கள், நிதி உதவி வழங்கும் நிறுவனங்களுடன் வலைப்பின்னலை ஏற்படுத்துவது தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்காக அரவணைப்பு இல்லங்களைப்போன்று அமைச்சு தற்காலிக தங்குமிட சேவைகளை தாபித்துள்ளது. கொழும்பிலுள்ள அரவணைப்பு நிலையம் இரண்டு வருட காலத்துக்கு மேல் இயங்கிவருவதுடன் ஏனைய மாகாணங்களிலும் பல்வேறு நிலையங்கள் இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ளன. சட்டரீதியான நிவாரணத்தை எதிர்பார்க்கின்ற உயிர்பிழைத்துக் கொண்டவர்களில் பலர் முதலில் சம்பந்தப்படுவது மகளிர் மற்றும் சிறுவர் பொலிஸ் பணியகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் அதிலுள்ள அலுவலர்களது ஆற்றல்களை விருத்தி செய்வதன் மூலம் அமைச்சு நாடுமுழுவதும் காணப்படுகின்ற இந்த பணியகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. அமைச்சின் வளவில் தாபிக்கப்பட்டுள்ள தேசிய மகளிர் குழுவுக்கு வருகைதருகின்ற உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு அதேஇடத்தில் சட்டரீதியான மற்றும் உளவியல் சமூக ரிதியான உதவிகள் வழங்கப்படுவதுடன் முறைப்பாடுகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ஏனைய முகவர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கும் வசதிகள் செய்யப்படுகின்றன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்ட பயிற்றப்பட்ட பதவியணியினர் குழுவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை (1938) பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு உளவியல்சார் உதவிகள் உள்ளடங்கலாக துரித மற்றும் தொழில்சார் நடவடிக்கைகளை தொலைபேசி மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் இந்த உதவித் தொலைபேசிச் சேவைக்கு வீட்டு வன்முறையின் கீழ் கூடுதலான முறைப்பாடுகள் (90 முறைப்பாடுகள்) கிடைத்ததுடன் குடும்பப் பிணக்குகள் சம்பந்தமான முறைப்பாடுகளும் (250 முறைப்பாடுகள்) கிடைத்ததுடன் மொத்தமாக 667 முறைப்பாடுகள் இந்த சேவையூடாக பெற்றுக்கொள்ளப்பட்டன. 2014ஆம் ஆண்டில் 398ஆக இருந்த முறைப்பாடுகள் இவ்வாறு தெளிவாகவே வளர்ச்சியடைந்துள்ளது. சமுதாய மட்டத்தில் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்காக அமைச்சு அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களையும் வழிநடாத்தி வருவதுடன் மகளிர் பணியகம், தேசிய மகளிர் குழு மற்றும் அமைச்சினால் வழிநடாத்தப்படுகின்ற ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களும் இதன்கீழ் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக, அதனைத் தடுப்பதற்காக பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வழிப்படுத்தும் கட்டமைப்பை வலுவூட்டுவது அமைச்சின் பிரதான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும் என்பதுடன் இது உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு மிகவும் நல்லதொரு ஒருங்கிணைப்பைக் கொண்ட பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றலை வழங்கி அதன்மூலம் தண்டனை வழங்கும் செயன்முறையை வலுவூட்டி பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களை மீண்டும் பாதிக்கப்பட்டவர்களாகும் நிலையிலிருந்து குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றது. பால்நிலைசார் அடிப்படையிலான மைய நிலையங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு அலுவலர்களை நியமனம்

செய்வதன் மூலம் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்கும் செயன்முறைகளுக்கு வசதிகளை செய்துகொடுக்க ஏனைய நேர்வரிசை அமைச்சுக்களுடனான தொடர்புகளை மகளிர் அமைச்சு வலுவூட்டி உள்ள போதிலும் அவர்களின் பூரணமான ஆற்றல்கள் பற்றி ஆராய வேண்டி ஏற்பட்டுள்ளது.

அமைச்சு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை தொடர்பில் செயற்பட்டுள்ள போதிலும் சகல அரச மற்றும் அரச சார்பற்ற முகவர் நிறுவனங்களிடமிருந்தான ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் திறமையான அணுகுமுறை இல்லாமை காரணமாக உத்தேச பெறுபேறுகளை அடைந்துகொள்வது சவாலாக மாறியுள்ளது. சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்ட தேசிய பதில் நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்ற தேசிய செயற்றிட்டம் ஒன்றை தயார்செய்வது நாட்டின் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினைக் குறைப்பதற்கு காரணமாகும் என்பது உறுதியாகும். திட்டமானது உரிமைகளை உள்ளடக்கிக்கொள்வதுடன் இயற்கையாகவே பல துறைகளைக் கொண்டதாக இருக்கும். பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்கான தேசிய முன்னுரிமையைக் கொண்ட பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிக்கும் முயற்சிகளை மேம்படுத்துவதுடன் இந்த திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு வினைத்திறன்மிக்க அமுல்படுத்தல் மற்றும் நிலையான கண்காணிப்புக் கட்டமைப்பு அவசியமாகும்.

துறைசார் திட்டம்: வலுவூட்டல் மற்றும் தடுத்தல்

வழிநடாத்தும் அமைச்சு: தேசிய மகளிர் குழு மற்றும் மகளிர் பணியகம் உள்ளிட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

வேறு அமைச்சுக்கள் / முகவர் நிறுவனங்கள்: பொலிஸ் திணைக்களம், சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, சிவில் சமூக அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள்

துறைசார் தவிசாளர்: செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்

கால எல்லை: 2016-2020

வரவு செலவுத்திட்டம்: ரூபா மில்லியன் 997.5

| வலுவூட்டல் மற்றும் தடுத்தல் துறைசார் திட்டம் | |
|---|---|
| குறிக்கோள்கள் | 1. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக சமூக கலந்துரையாடலுக்கு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு சமுதாயத்தை வலுவூட்டல்<br>2. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு வினைத்திறன்மிக்க தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான கொள்கைகளை தயார்செய்து கொள்கை வழிகாட்டல்களை செய்துகொடுத்தல்<br>3. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர் பிழைத்துக் கொண்டவர்கள் தொடர்பில் தலையீடு செய்து உதவி வழங்கும் பொறிமுறையை தாபித்தல்<br>4. கொள்கைசார் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதற்கு உதவும்பொருட்டு பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய தரவுகள் மற்றும் தகவல்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தல்<br>5. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்கும் பொருட்டு தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் வினைத்திறன்மிக்க பல்துறை பதில் நடவடிக்கையை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படல் |

| கவனக் குவிப்புத் துறை | உபாயமுறை | பெறுபேறு | பிரதான செயற்பாடுகள் | முடிவுச்சுட்டி | உறுதிப்படுத்தல் முறைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் | கால எல்லை | பாதீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தடுத்தல் | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்கு உரிய 1வது துறை:** பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக சமூகத்தை வலுவூட்டல் சமுதாயத்தை வினைத்திறன்மிக்க தாக்கல், ஒழுங்குபடுத்தல் மற்றும் திறன்விருத்தி | 1.1 தடுப்பதற்கான பரிசோதனைக் குழுக்கள் மற்றும் பெண்கள் சங்கங்களை திரட்டல் (எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை – பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை மற்றும் நெருங்கிய துணையின் வன்முறை – 60ஆம் பக்கம்) | 1.1 மற்றும் 1.2<br><br>பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறை சிக்கல்களில் தலையிடுவதற்காக தலையீடு செய்யும் பொருட்டு பெண்கள் மற்றும் ஆண்களை சமுதாய ரீதியாக வலுவூட்டியிருத்தல் | 1.1.1 பெண்கள் மற்றும் ஆண்களை உள்ளடக்கிய பரிசோதனைக் குழுக்களை வலுவூட்டல் / தயார்செய்தல்<br><br>1.1.2 செயற்பணி மற்றும் பொறுப்புக்கள் / தார்மீகக் கோட்பாடுகள், பரிசோதனை குழுக்கள் பெண்கள் சங்கங்கள் பயன்படுத்த வேண்டிய நியம நடவடிக்கை முறைமைகள்<br><br>1.1.3 கையேட்டைப் பயன்படுத்தி பரிசோதனைக் குழுக்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை பயிற்றுவித்தல் மற்றும் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக செயற்படுவதற்கு முக்கியமான கூட்டினை கட்டியெழுப்பல்<br><br>1.1.4 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறை பற்றி விழிப்புணர்வூட்டி தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து சமுதாய பதில் நடவடிக்கைகளை முறைப்படுத்தல் | பரிசீலனைக் குழக்கள் / மகளிர் சங்கங்களை முறைப்படுத்துவது பற்றிய சுற்றறிக்கை<br><br>பரிசீலனைக் குழுக்கள் / மகளிர் சங்கங்களின் எண்ணிக்கை<br><br>பரிசீலனைக் குழக்கள் / மகளிர் சங்கங்களுக்கான கையேடு<br><br>பயிற்றப்பட்ட பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை<br><br>சமூக அமைப்பக்களின் எண்ணிகதை<br><br>வழிநடாத்தப்பட்ட கூட்டுச் செயற்பாடுகள் / நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | வெளிக்கள அறிக்கைகள் / முன்னேற்ற அறிக்கைகள், அறிக்கை யிடப்பட்ட / சமர்ப்பிக்கப் பட்ட சம்பவங்கள் பற்றிய லொக் புத்தக குறிப்புகள்<br><br>சமர்ப்பிக்கப் பட்ட சம்பவங்கள்<br><br>பயிற்றுவித்தல் அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>காலாண்டு அறிக்கைகள்<br><br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, மகளிர் அபிவிருத்தி அலுவலரின் பணியை நிறைவேற்றுவதற்காக சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் அலுவலர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / ஐக்கிய நாடுகள் அமைப்பு / சிவில் பாதுகாப்பு குழுக்களுடன் சம்பந்தப்படல் | 2016-2018<br><br>2016 - 2017 | 75.0<br><br>(ஒரு பிரிவு / மாவட்டத் திற்கு சுமார் 200,000) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1.2. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையினை எவ்விதத்திலும் பொறுத்துக்கொள்ளாமையை நோக்கி சாதகமான பெறுமானங்களை வளர்ப்பதற்காக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் | | 1.2.1 எவ்வகையிலும் பொறுத்துக் கொள்ளாமை ஊடாக பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கு ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயற்படுகின்ற அமைப்பக்களை இனங்கண்டு அவர்களுடன் கூட்டமைப்பை கட்டியெழுப்பல் | தொடர்புகள் / கூட்டமைப்புக்களின் பட்டியல் | வருடாந்த அறிக்கைகள் | பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர், மகளிர் அபிவிருத்தி அலுவலர், சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலர், சிவில் சமூக அமைப்புக்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏனைய இளைஞர் குழுக்கள் | 2016 - 2018 | 5.0 |
| | | | 1.2.2 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையை இவ்விதத்திலும் பொறுத்துக் கொள்ளாமை பற்றிய ஆலோசனை மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்காக பயிற்றுவித்தல் கையேடு மற்றும் ஆண்களை பயிற்றுவிப்போரது மன்றத்தை ஒழுங்குபடுத்தல் | கையேடு மற்றும் ஆண் பயிற்றுனர்களை பயிற்றுவிப்பதற்கான வளங்கள் காணப்படல்<br><br>ஆண் பயிற்றுவிப்பாளர் களுக்கான வழிநடாத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர் களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கருத்திட்ட அறிக்கைகள் | | | |
| | | | 1.2.3 இசை, நாடகம், விளையாட்டு போன்ற புத்தாக்க சமுதாய நிகழ்ச்சித் திட்டங்களை தயார்செய்தல் மற்றும் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையை ஒழிக்கும் முன்னோடிகளாக செயற்படுபவர்களை மேம்படுத்தல் | கூட்டமைப்பின் மூலம் அமுல்படுத்தப்பட்ட கூட்டமைப்புசார் நடவடிக்கைகளின் எண்ணிக்கை | | | 2016-2018 | |
| | 1.3 பாலியல் மற்றும் பால்நிலைசார் | | 1.3.1 அச்சுறுத்தலை எதிர்நோக்கும் நிலைமைக்கு தகுந்த முறையில் பதில் | தற்போது காணப்படுகின்ற தகவல் கற்கை | முன்னேற்ற அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, குடும்ப | 2016-2020 | 6.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படையிலான வன்முறையை இனங்காணல் மற்றும் அதற்கான பதில் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை விழிப்புணர்வூட்டல் மற்றும் அவர்களின் திறன்களை விருத்தி செய்தல் *(எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை 19ஆம் பக்கம்)* | 1.3 தமக்கெதிரான பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக போராடுவதற்கு பெண்களும் பெண் பிள்ளைகளும் திறன் அடிப்படையில் விருத்தி செய்யப்பட்டு இருத்தல் | நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் துஷ்பிரயோகம் / சுரண்டலை தடுப்பது பற்றி பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் | தொடர்பாடல் பொருட்கள்<br><br>பயிற்றப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை | ஆண்டறிக் கைகள்<br><br>உயர் மட்டத்திலான குழுக்களின் செயற் குறிப்புக்கள் | அமைப்புக்களின் சங்கம், ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள் / சிவில் சமூக அமைப்புக்கள் / சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், இளைஞர் அலுவல்கள் அமைச்சு, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு,<br><br>தனியார் துறை, இலங்கை உரிமையாளர்கள் சம்மேளனம் | | |
| | | | 1.3.2 தகவல் கற்கை தொடர்புசாதன பொருட்கள், இளைஞர் நிகழ்ச்சித் திட்டங்கள், தலைமைத்தவ அபிவிருத்தியை நோக்கிய சாதகமான உறவுகள் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான ஒருமுகப்படுத்தல் செய்யாமை பற்றி இளைஞர்களின் வாழ்க்கைத்திறன்களை அபிவிருத்தி செய்து வலுவூட்டல் | பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / பதில் நடவடிக்கைகளின் எண்ணிக்கை<br><br>தகவல் கற்கை தொடர்புசாதனப் பொருட்கள் காணப்படல் | | | 2016-2020 | |
| | | | 1.3.3 மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சின் தத்துவத்தின் கீழ் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுக்கும் பொருட்டு தகவல்களை பகிர்ந்தளிப்பதற்காக கையடக்கத் தொலைபேசி முறைமை ஒன்றை தயார்செய்தல் | நடாத்தப்பட்ட பயிற்றுவித்தல்கள், நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>கையடக்கத் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய அப்லிகேஷன் காணப்படல் | | | 2018-2020 | |
| | | | 1.3.4 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையுடன் சம்பந்தப்பட்ட கற்கைகள் | | | தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் | 2016-2018 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மற்றும் தடுத்தலை சர்வதேச சிறந்த நல்ல நடைமுறைகளில் இருந்து ஆராய்தல் | வெப்தளத்தின் ஊடாக அப்லிகேஷனை பதிவிறக்கம் செய்துகொண்டுள்ள எண்ணிக்கை | | உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | | |
| | | | 1.3.5 கற்கைகளின் சிபாரிசுகளது அடிப்படையில், தொழில்நுட்பத்தின்போது பாதுகாப்புடனான பொருத்தமான உபயோகங்களை மேம்படுத்தும் செயற்பாடுகளை சமூக ஊடகங்களின் ஊடாக அமுல்படுத்தல் | சமூக ஊடக நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை, இணையத்தளத்தில் விருப்பம் மற்றும் விருப்பமின்மையை வெளியிடுபவர்களின் எண்ணிக்கை | குறிப்புக்கள்<br>முன்னேற்ற அறிக்கைகள் | தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்கள் | 2017-2018 | |
| | | | 1.3.6 ஆய்வுகளின் பரிந்துரையின் பிரகாரம், சமூக வலைத்தளங்கள் ஊடாக செயற்பாடுகளை அமுல்படுத்தும் போது பாதுகாப்பானதும் சரியானதுமான தொழில்நுட்பப் பாவனையை ஊக்குவித்தல் | ஆய்வு அறிக்கைகள்<br>அமுல்படுத்தப்பட்ட சிபாரிசுகளின் எண்ணிக்கை | சமூக ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கை | | 2017-2018 | |
| | 1.4 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்காக சமய அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் | 1.4 முக்கிய சமூக சிக்கலொன்றாக பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையை தடுப்பதற்கு சமய நிறுவனங்கள் | 1.4.1 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையினை எவ்வகையிலும் பொறுத்துக் கொள்ளாமையை நோக்கி சமூக மற்றும் சமய கலந்துரையாடல்களை மேம்படுத்துகின்ற இருபாலாரினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட உயர் மட்டத்திலான கூட்டிணைந்த குழுவை தாபித்தல் | பிரதிநிதித்துவம் செய்கின்ற மற்றும் முனைப்புடனான கூட்டுக்குழுக்கள்<br>குழுக்களில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை<br>இடைச் செயற்பாடுகளின் எண்ணிக்கை வழிநடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br>உயர் மட்டத்திலான குழுக்களின் செயற்குறிப்புக் கள் | புத்த சாசன அலுவல்கள் அமைச்சு, கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அமைச்சு, இந்து சமய அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் மகளிர் மற்றும் | 2016-2020 | 1.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களின் கூட்டு செயற்பாடு | ஆக்கபூர்வமாக செயற்படல் | 1.4.2 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்கு ஊடகங்கள், சமயத்தலைவர்கள் மற்றும் சமயக் கல்வி நிறுவனங்கள் ஊடாக தேசிய / பிரிவு மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் | | சமய நிறுவனங்களுடனான குழுக் கூட்டங்களின் குறிப்புக்கள்<br>நிகழ்ச்சித்திட்ட அறிக்கைகள் | சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 2016-2020 | |
| கவனக் குவிப்புக்கு உரிய 2வது துறை:<br>மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இடைக்கால நியாயம் | 2.1. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பாதுகாப்பற்ற தன்மைக்கு தீர்வு வழங்கல் | 2.1 பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூக பொருளாதார உதவிகள் மற்றும் சட்ட ரீதியான நிவாரணப் பொறிமுறைக்கு இலகுவான பிரவேசம் உள்ளது. | 2.1.1. மாவட்ட செயலகம் / மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் ஊடாக பாதுகாப்பற்ற குடும்பங்கள் இனங்காணப்பட்டு வாழ்வாதார உதவிகள் மற்றும் திறன் அபிவிருத்திக்கான குறிப்பிட்ட நிறுவனங்கள் / குடும்பத் தலைவிகளாக உள்ள பெண்களுக்காக தேசிய செயலகத்தில் சமர்ப்பித்தல்<br>2.1.2 பாதிக்கப்பட்ட பெண்கள் / விதவைகளின் சமூக கலாசாரத் தேவைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக அவர்களின் பாதுகாப்புக்கு வாய்ப்புக்களைச் செய்துகொடுத்தல் மற்றும் விசேட கவனம் செலுத்துவதற்கு மகளிர் | வாழ்வாதார உதவியில் ஈடுபடுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை<br>பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கூட்டாக செயற்படுகின்ற முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கை | முன்னேற்ற அறிக்கைகள்<br>மாவட்ட செயலகங்களிடமிருந்தான அறிக்கைகள்<br>உரிய சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவுகளில் இருந்தான அறிக்கைகள்<br>குடும்பத் தலைவிகளான பெண்கள் பற்றிய தேசிய செயலகத்தின் அறிக்கைகள்<br>மகளிர் சங்கங்கள் / சிவில் சமூக அமைப்புக் களின் அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, SEWA, குடும்பத் தலைவிகளாக உள்ள பெண்கள் பற்றிய தேசிய செயலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயலகம்<br>மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம்<br>மீளக்குடியமர்த்தும் அமைச்சு<br>ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு<br>தேசிய நல்லிணக்க, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு, ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், உதவி வழங்குவோர் | 2016-2020 | 750.0<br>(25,000 விதவைகள் x ரூபா. 30,000 வாழ்வாதாரத்திற்கு மாத்திரம்) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சங்கங்கள் / சிவில் சமூக அமைப்புக்களை வலுவூட்டல்<br><br>2.1.3 பிரதேச செயலகங்கள், அரவணைப்பு இல்லங்கள், பெண்கள் மற்றும் சிறுவர் பொலிஸ் பிரிவுகளுக்கு தகுந்த மொழித்திறமைகளைக் கொண்ட பெண் பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆலோசனை<br><br>2.1.4 நலன்புரி முகாம்களில் உள்ள சகல பெண்களையும் இடைக்கால நியாய நிகழ்ச்சித்திட்டங்களில் இணைத்துக்கொள்ளல் | பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை<br><br>இடைக்கால நியாய நிகழ்ச்சித் திட்டங்களில் இணைந்து கொண்டுள்ள நலன்புரி நிலையங்களது பெண்களது எண்ணிக்கை | இடைக்கால நியாய நிகழ்ச்சித் திட்டங்களின் அறிக்கைகள் | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் | | |
| தலையீடு | | | | | | | | |
| **கவனக் குவிப்புக்கு உரிய 3வது துறை:**<br>பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையில் இருந்து உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு உதவுவதற்கான பதில் நடவடிக்கை பொறிமுறைகள் | 3.1 உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு வினைத்திறன் மிக்க சேவை வழங்குவதை உறுதிப்படுத்துவதை ஏற்புடையதாக்கல் மற்றும் உறுதிப்படுத்துவதாக்க உரிய அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் உடனான ஒருங்கிணைப்பு | 3.1 –.3.3<br>ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட முகவர் நிறுவனங்கள் மூலம் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையில் இருந்து உயிர் பிழைத்துக் கொண்டவர் களுக்கு தரமான சேவையினை | 3.1.1 வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றுவதற்காக முகவர் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு (அமைச்சுக்கள் மற்றும் சிவில் சமூகம்) வசதிகளைச் செய்துகொடுத்தல்<br><br>3.1.2. தற்போதுள்ள அரவணைப்பு இல்லங்களின் சேவைகளை புதிய துறைகளை நோக்கி வலுவூட்டல், அரவணைப்பு இல்லங்களின் முகாமைத்துவத்தைப் | இயங்கிவருகின்ற புதிய அரவணைப்பு இல்லங்களின் எண்ணிக்கை<br><br>அரவணைப்பு இல்லங்களுக்கான வழிகாட்டல்களை பதிலீடு செய்து கொள்ளப்பட்டுள்ள அரவணைப்பு இல்லங்களின் எண்ணிக்கை<br><br>அரவணைப்பு இல்லங்கள் மற்றும் அரவணைப்பு | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>வருடாந்த அறிக்கைகள்<br><br>கூட்டக் குறிப்புகள்<br><br>அரவணைப்பு இல்லங்களின் | நீதி அமைச்சுடனான ஒத்துழைப்பு சகிதம் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (உள்ளடங்கலாக)<br><br>சுகாதார அமைச்சு<br><br>குடும்ப சுகாதாரப் பணியகம் | 2016 - 2020 | 85.0<br>(உதவி வழங்கும் முகவர் நிறுவனங்களிடம் இருந்து நிதி சேகரித்து கொள்ளப் படும்) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரவணைப்பு இல்லங்கள், உளசமூக உதவி, மருத்துவ சட்ட ரீதியான நடவடிக்கைகள் *(எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை சிபாரிசு 27, 28)* | ஆற்றுவது இடம்பெறுகின்றது. | பேணிவருவதற்கு தற்போது காணப்படுகின்ற நிதி ஆவணங்கள், வழிகாட்டல்கள் வினைத்திறன்மிக்கவாறு அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்<br><br>3.1.3 துரித மருத்துவ சட்டச் செயன்முறைக்கான ஆலோசனை<br><br>3.1.4 உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு துரித பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக மாவட்ட / பிரிவு மட்டத்திலான அவசர சந்தர்ப்ப நிதியத்தை தாபித்தல்<br><br>3.1.5. பிரதேச செயலக மட்டத்திலான ஆலோசனை பதவியணியினர் ஊடாக உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு என உளசமூக ஆலோசனை உதவிகளை வலுவூட்டல்<br><br>3.1.6 ஆலோசனை சேவைகளுக்கு வருகைதருவோரின் தனித்துவம் மற்றும் அணுகுமுறையை உறுதிப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தல் (பிரதேச செயலகங்களில்)<br><br>3.1.7. பயிற்சி மூலம் ஆலோசகர்களின் அறிவு மற்றும் திறனை தொடர்ச்சியாக வளப்படுத்தல்<br><br>3.1.8 நியம நடவடிக்கை ஒழுங்குமுறைகள் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றவாறு | இல்லங்களின் சேவைகளை எதிர்பார்க்கின்ற பாதிக்கப்பட்டவர்களின் வளர்ச்சி விகிதம்<br><br>வினைத்திறன்மிக்க சட்ட ரீதியான சேவைகள் காணப்படுகின்றன<br><br>சேவைகளை அணுகும் பெண்களின் விகிதம்<br><br>உயிர் பிழைத்துக் கொண்ட பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர சந்தர்ப்ப நிதியம் காணப்படல்<br><br>உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கான அவசர சந்தர்ப்ப நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கைகளுக்கான தகவுதிறன்கள்<br><br>ஆலோசனைகளுக்கு அதிகரிக்கப்பட்ட வாய்ப்புக்கள்<br><br>ஆலோசகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் | முன்னேற்ற அறிக்கைகள்<br><br>ஆவணமயப் படுத்தப்பட்ட சம்பவங்கள்<br><br>அவசர சந்தர்ப்ப நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள்<br><br>நிதி பெற்றவர்களின் தரவுகள்<br><br>ஆலோசகர்களின் அறிக்கைகள்<br><br>செயலமர்வு அறிக்கைகள்<br><br>நீதிமன்ற மருத்துவ அலுவலர்களின் அறிக்கைகள்<br><br>உதவி தொலைபேசிச் | ஐக்கிய நாடுகள் முகவராண்மை நிறுவனங்கள்<br><br>உதவி வழங்குவோர்<br><br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள்<br><br>அரச சார்பற்ற அமைப்புக்கள்<br><br>சிவில் சமூக அமைப்புக்கள்<br><br>மாவட்ட / பிரதேச செயலகங்கள்<br><br>பிரதேச செயலக மட்டத்திலான ஆலோசனை அலகுகள்<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் | | பொழிப்பு:<br>3.1.2 – ரூ.மி. 2.0<br><br>3.1.4 - ரூ.மி. 3.3<br><br>3.1.5 மற்றும் 3.1.7 - ரூ.மி. 2.0<br><br>3.1.6 - ரூ.மி. 75.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உதவித் தொலைபேசிச் சேவையை எதிர்பார்ப்பவர்களுக்கு வினைத்திறன்மிக்கவாறு பதில் நடவடிக்கை மேற்கொள்ளல் | திட்டங்களின் எண்ணிக்கை<br>உதவித் தொலைபேசி சேவையை பயன்படுத்துவோர் அதிகரிப்பதன் விகிதம் | சேவையின் அறிக்கைகள்<br>சமர்ப்பிக்கப் பட்ட கூட்டங்களின் அறிக்கைகள் | | | |
| | 3.2. பல்வேறு மட்டங்களிலும் சகல சேவை வழங்குனருட னுமான சமர்ப்பித்தல் பொறிமுறைகளை வலுவூட்டல் | | 3.2.1 சேவை வழங்குவோர் (பொலிஸ், பிரதேச செயலக மட்ட அலுவலர்கள், அரசாங்க சட்டத்தரணி நட்புறவு இல்லம் போன்றன) இடையீட்டுத் தொடர்பை மேம்படுத்தல் மற்றும் சகல ஒருங்கிணைப்புக் கூட்டங்களிலும் ஆக்கபூர்வமாக பங்கேற்பதை மேம்படுத்தல் | கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை<br>நீதிமன்ற மருத்துவ அலுவலர்களினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற அறிக்கைகள் அதிகரிப்பதன் விகிதம்<br>சட்டமா அதிபரினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை | கூட்டக் குறிப்புகள்<br>முன்னேற்ற அறிக்கைகள் | நிதி அமைச்சுடன் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு, சுகாதார அமைச்சு, குடும்ப சுகாதார பணியகம், மத்தியஸ்த சபை, சிவில் சமூக அமைப்புக்கள், பொலிஸ் திணைக்களம், நீதிமன்ற மருத்துவ அலுவலர், ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 2016-2020 | 4.0 |
| | 3.3. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு பொலிசாரின் பதில் நடவடிக்கைகளை வலுவூட்டி மகளிர் மற்றும் சிறுவர் பொலிஸ் பணியகம் / அலகுகள் மற்றும் வைத்தியசாலைக ளில் உள்ள பொலிஸ் அலகுகளின் திறனை விருத்தி செய்தல் (தொடர்பு – | | 3.3.1 உயிர் பிழைத்துக் கொண்டவர்களுக்கு சாதகமாக பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறை தொடர்பில் பொலிஸாரை விழிப்புணர்வூட்டல்<br>3.3.2 பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மற்றும் பொலிஸ் பயிற்றுவித்தல் பிரிவின் ஒத்துழைப்புடன் சட்டத்தை அமுல்படுத்தும் சேவைசார் அலுவலர்கள் மற்றும் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு பால்நிலை | பயிற்சி / அனுபவம் வாய்ந்த அலுவலர்களைக் கொண்ட சட்ட உதவி ஆணைக்குழு அலுவலகங்களின் அதிகரிப்பு விகிதம்<br>பொலிஸ் திணைக்களத்தில் பயிற்றப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை<br>முறையான செயலமர்வுகளின் எண்ணிக்கை | | நீதி அமைச்சு<br>பொலிஸ் திணைக்களம்<br>மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணியகம் | | 5.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை சிபாரிசுகள் 30,31,32,33) | | மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறை பற்றிய பயிற்சி நெறிகளை பயன்படுத்திக் கொள்வதற்கு தொழில்நுட்ப உதவிக்கான ஆலோசனை மற்றும் அதனை பெற்றுக்கொடுத்தல்<br>3.3.3. சட்டத்தை வினைத்திறன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்களுக்கான விசேடமாக 2005 சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் பொலிஸ் பணியகம் மற்றும் ஆக்கப்பட்ட சட்டங்கள் நியாயாதிக்கத் தவறுகள் தொடர்பிலான திறன்களை விருத்தி செய்தல்<br>3.3.4 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு வினைத்திறன்மிக்க தீர்வை வழங்குவதற்கு சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் பொலிஸ் பணியகங்கள், சகல மகளிர் மற்றும் சிறுவர் பணியகங்கள் / கருமபீடங்களை வலுவூட்டல் மற்றும் திறன்விருத்தி பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் மற்றும் ஏனைய சேவை வழங்குனருடனான தொடர்பை தாபித்தல் | பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறை பற்றிய பாடப்பரப்பு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட பொலிஸ் பயிற்சிக் கல்லூரி பாடவிதானங்களின் எண்ணிக்கை<br>சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான பொலிஸ் பணியகம் பற்றிய பயிற்சிக் கூட்டத்தொடர்களின் எண்ணிக்கை<br>பயிற்றப்பட்ட ஆண் / பெண் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை<br>பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் கருமபீடங்கள், மாவட்ட மட்டத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலகுகள் மற்றும் (மிதுரு பியச) நட்புறவு இல்லங்களுக்கு இடையிலான) தொடர்புகள் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள்<br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள்<br>செயலமர்வு அறிக்கைகள்<br>முன்னேற்ற அறிக்கைகள்<br>கூட்டக் குறிப்புகள் | பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் கருமபீடம்<br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள்<br>பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகள்<br>பல்கலைக்கழகங்கள்<br>ஐக்கிய நாடுகள் முகவராண்மை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுதாய அபிவிருத்திக் குழுக்கள் | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3.4 உயிர் பிழைத்துக் கொண்டவர் களுக்கு சட்ட உதவிகள் கிடைப்பதை உறுதிசெய்து கொள்வதற்காக நிதி அமைச்சு மற்றும் சட்ட உதவி ஆணைக் குழுவுடனான ஆலோசனை<br>*(தொடர்பு – எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை – வீட்டு வன்முறை மற்றும் நெருங்கியை* | | 3.3.5 பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஆலோசனை மற்றும் வைத்தியசாலை பொலிஸ் அலகுகளில் பெண் பொலிஸ் அலுவலர்கள் சேவையாற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்<br>3.3.6 உயிர்பிழைத்துக் கொண்டவர்கள் பொலிஸில் சம்பவங்களை முறைப்பாடு செய்த பின்னர் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஒத்துழைப்புடன் ஆலோசனை சேவைகளை தாபித்தல்<br>3.4.1 மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பல்வேறு மட்டங்களில் சேவை பெற்றுக்கொள்வதற்கு பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, நீதித்துறை அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு இடையிலான முறையான உறவைக் கட்டியெழுப்பல்<br>3.4.2 உயிர்பிழைத்துக் கொண்டவர்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்காக சட்ட உதவி ஆணைக்குழு அலுவலர்கள் / சிவில் சமூக அமைப்புக்களுடன் செயற்படுவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான சிறுவர் | ஏனைய சேவை வழங்குனர்கள் / சிவில் சமூக அமைப்புக்களு டனான உறவுகள்<br>வைத்தியசாலை பொலிஸ் அலகுகள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் கருமபீடங்களின் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் களின் அதிகரிப்பு விகிதம்<br>ஆலோசனைக்காக அனுப்பப்பட்ட பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்பிழைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை<br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு இடையிலான ஒத்துழைப்புக் கூட்டங்களின் எண்ணிக்கை<br>நீதிமன்ற அமைச்சு / சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்கு | பொலிஸ் அலகுகளின் முன்னேற்ற அறிக்கைகள்<br>ஆலோசனை அறிக்கைகள்<br>வழங்கப்பட்ட சட்ட உதவி பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் | நீதி அமைச்சுடன் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு<br>ஐக்கிய நாடுகள் முகவராண்மை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுதாய அபிவிருத்திக் குழுக்கள்<br>முகாமைத்துவ சேவைகள் | 2016-2020 | 5.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *வாழ்க்கைத் துணையின் வன்முறை 60ஆம் பக்கம்)* | | மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளை வழிநடாத்தல்<br>3.4.3 மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் சட்ட அலகொன்றை தாபித்து போதியளவு ஊழியர்களை – சிரேஷ்ட சட்ட அலுவலர்களை நியமனம் செய்தல் | இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை | கூட்டக் குறிப்புகள், முன்னேற்ற அறிக்கைகள் | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு | 2016-2018 | |
| **கவனக் குவிப்புக்கு உரிய 4வது துறை:**<br>பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்கு ஒத்துழைப்பு ஒருங்கிணைப்பு மற்றும் தலையீடுகளின் கண்காணிப்பு | 4.1 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு வழங்குவதற்காக தற்போது காணப்படுகின்ற உபதேசிய கட்டமைப்புகளை வலுவூட்டல்<br>*(தொடர்பு) : எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை 35, 36ஆம் சிபாரிசுகள்)* | 4.1-4.3 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு வழங்குவதற்காக சேவை வழங்குவதை உறுதிப்படுத்தல் மற்றும் தலையீடு செய்வதை ஒருங்கிணைப்பதற்காக வினைத்திறன்மிக்க கட்டமைப்பு பயன்படுத்தப் படுகின்றது. | 4.1.1 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் தொடர்ச்சியான ஒரு பொறிமுறையாக மாவட்ட / பிரதேச சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுககளை விஸ்தரித்தல் மற்றும் வலுவூட்டல்.<br>4.1.2 மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் தற்போது காணப்படுகின்ற பல்முகவர் நிறுவனங்கள், மாவட்ட / பிரதேச சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள், மாவட்ட / பிரதேச சிறுவர் மகளிர் அபிவிருத்திக் குழுக்களாக மீளமைத்து வலுவூட்டல்<br>4.1.3 பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்ட மட்டத்தில் பல்துறை கூட்டு செயன்முறையை மேம்படுத்தல் மற்றும் | சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் மூலம் 100% மாவட்டங்கள் உள்வாங்கப்படல்<br>சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளினால் சமர்ப்பிக்கப்படுவது பற்றிய விடயங்கள் மற்றும் நியம நடவடிக்கை முறைகள்<br>பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் ஆக்கபூர்வமான பல்பிரதிநிதித்துவ நிறுவனங்கள் / செயலணி எண்ணிக்கை<br>பல்துறைசார் கூட்டுச் செயன்முறைகளின் எண்ணிக்கை<br>செயலணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகவர் நிறுவனங்கள் / சிவில் சமூக சம்மேளனங்கள் / | கூட்டக் குறிப்புகள்<br>முன்னேற்ற அறிக்கைகள்<br>வருடாந்த அறிக்கைகள்<br>தேசிய வரவு செலவுத்திட்டம் / திறை சேரிக்கான அறிக்கைகள்<br>செயலணிக் கூட்டங்களின் குறிப்புகள் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகு<br>மாவட்ட / மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் / பிரதேச செயலகம்<br>மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு<br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் / சிவில் சமூக அமைப்புக்கள்<br>ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள்<br>உதவி வழங்குவோர் | 2016-2020 | 12.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அவற்றை இலகுபடுத்தவதும் உதவுவதும்<br><br>4.1.4 தொடர்பாடல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பதை ஒழுங்குபடுத்தும் முறையொன்றை தயார்செய்வதற்காக ஏனைய சேவை வழங்குனர்கள், சிவில் சமூகத்தை இனங்காணல்<br><br>4.1.5 சம்பவங்களை நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பதை ஊக்குவிப்பதற்காக பரிசீலனைக் குழுக்கள், மகளிர் சங்கங்கள், வலையமைப்புகள் மற்றும் இளைஞர் குழுக்கள் மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளுக்கிடையிலான தொடர்பை இலகுபடுத்தல்<br><br>4.1.6 தேவையான பட்சத்தில் உரிய அலுவலர்கள் மற்றும் நிபுணர்களுடனான ஒத்துழைப்புடன் சம்பவங்கள் பற்றிய கருத்தரங்குகளை நடாத்துவதற்கு இலகுபடுத்தல் | குழுக்களின் எண்ணிக்கை<br><br>வலுவூட்டப்பட்ட மற்றும் செயல்ரீதியான பரிசீலனைக் குழுக்களின் எண்ணிக்கை<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் செயற்படுகின்ற ஒத்துழைப்புடன் இயங்குகின்ற வலையமைப்புகளின் எண்ணிக்கை<br><br>அமுல்படுத்தப் பட்டுள்ள உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கும் வழிமுறைகள்<br><br>காலாண்டுக்கு அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை<br><br>மாதாந்த சம்பவக் கருத்தரங்கு கூட்டங்களின் எண்ணிக்கை | நிறுவனங்க ளிடம் சமர்ப்பிப்பது பற்றிய கூட்ட அறிக்கைகள்<br><br>முன்னேற்ற அறிக்கைகள்<br><br>சம்பவ கருத்தரங்கு அறிக்கைகள் | இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு<br><br>தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்<br><br>மகளிர் சங்கங்கள்<br><br>இளைஞர் கழகங்கள்<br><br>பரிசீலனைக் குழுக்கள்<br><br>மளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் | | |
| | 4.2 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான மற்றும் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவது பற்றி உரிய தரப்பினர்கள் | | 4.2.1 பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவது தொடர்பாக ஆண்கள் மற்றும் பெண் வளவாளர்களைக் கொண்ட அமைப்பு ஒன்றை தேசிய, | மன்றத்தில் உள்ள ஆண் / பெண் வளவாளர்களின் எண்ணிக்கை<br><br>மன்றத்தில் உள்ள பால்நிலைசார் அடிப்படையிலான | வருடாந்த அறிக்கைகள்<br><br>பயிற்றுவித்தல் அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br><br>பரிசீலனைக் குழுக்கள்<br><br>உதவி வழங்கும் முகவர் நிறுவனங்கள் | 2016-2020 | 10.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டமைப்புகளின் ஆற்றல்களை விருத்தி செய்வது தொடர்பான நடவடிக்கை களுக்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் வள அடிப்படை ஒன்றை உறுதிப்படுத்தல்<br>(எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையின் பிரிவு 17,18 ) | | மாவட்ட மட்டத்தில் ஒழுங்குபடுத்தல்<br>4.2.2 முறையான பாடப்பரப்பாகப் பயன்படுத்துவதற்கு பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு வழங்குவது பற்றி இடையீட்டு செயற்பாட்டுக்கு பயன்படுத்த ஆயத்தப்படுத்தப்பட்ட பயிற்றுவித்தல் தொகுப்பை தயார்செய்தல்<br>4.2.3 மேலுள்ள பயிற்றுவித்தல் தொகுப்பை பயன்படுத்தி உரிய அலுவலர்கள் மற்றும் பரிசீலனைக் குழுக்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல் | பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை<br>திறன்விருத்தி செயலமர்வுகளின் எண்ணிக்கை | பயிற்றுவித்தல் / நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு<br>கூட்டக் குறிப்புகள் | ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள்<br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் | | |
| | 4.3 பால்நிலை மற்றும் பாலியல்சார் அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு வழங்குவதற்குள்ள தேசிய பொறிமுறையை வினைத்திறன்மிக் கவாறு இயங்கச் செய்தல் | | 4.3.1 மகளிர் ஆணைக்குழுவை தாபிப்பதை முன்னுரிமை விடயமொன்றாக வெளிப்படுத்தி ஆலோசனை வழங்கல்<br>4.3.2 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பால்நிலைசார் அடிப்படையிலான விடயங்களை உள்வாங்கல்<br>4.3.3 முக்கிய சிக்கலொன்றாக பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு தீர்வு வழங்குவதற்கு தேசிய | மகளிர் ஆணைக்குழுவை தாபிப்பதற்கான ஆலோசனைக் கூட்டங்களின் எண்ணிக்கை<br>தாபித்தல் செயலமர்வின் பாராளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை<br>பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறைக்கு நிவாரணம் வழங்குவதில் ஈடுபட்டுள்ள | முன்னேற்ற அறிக்கைகள்<br>வருடாந்த அறிக்கைகள் | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு<br>பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு உள்ளடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்கள்<br>அரச சார்பற்ற அமைப்புக்கள்<br>சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் | 2016-2020 | 10.0 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
